
# சீர்பாததேவி சிறுவர் இல்லத்தின்

## ஐந்தாண்டு சேவை நிறைவு விழா

## 05.02.2008



உ

கணபதி துணை

# சீர்பாததேவி சிறுவர் இல்லத்தின் ஐந்தாண்டு சேவை நிறைவு விழா

# 2008

வெளியீடு :

**சீர்பாததேவி சிறுவர் இல்லம்**
**வீரமுனை, சம்மாந்துறை,**
**இலங்கை,**
தொலைபேசி/தொலை நகல் இல. : 094-0672261144
மின்னஞ்சல் : schv2003@yahoo.com

# சீபாததேவி சிறுவர் இல்ல நிர்வாகக் கட்டமைப்பு-2007

பணிப்பாளர் : தா.வினாயகமூர்த்தி (Eng.)

தலைவர் : ச.கிருபாகரன் (B.sc)

உபதலைவர் : மு.செல்வக்குமார் (B.A)

## இயக்குனர் சபை

சி. அருளம்பலம் (அதிபர்)

க. இரத்தினேஸ்வரன் (பிரதி அதிபர்)

க. கருணாகரன் (ஆசிரியர்)

மா. உதயராஜன்

இ. சகாதேவன்

ப. லவகுமார் (T.O)

## நடத்துனர் சபை

செயலாளர் : சி. மகேஸ்வரன் (B.A)

உப செயலாளர் : யு. அருணகிரிநாதன்

பொருளாளர் : இ. விக்கினேஸ்வரன்

கணக்குப் பரிசோதகர் : ச. கணேஸ்வரன் B.Econ.(Hons)

: ம. கேந்திரமூர்த்தி B.Com.

**தொலைந்துபோன 1990இல்**
**மரணித்த உறவுகளுக்கு எங்கள்**
**கண்ணீர் காணிக்கைகள்...**

அநாதைகளாக அந்தஸ்த்துப் பெற்றது
உங்களுடன் நாங்களும் தான்.... ஆலயத்தினுள்ளும்,
பாடசாலையினுள்ளும் உயிர் பிச்சை கேட்டு....
ஒன்றாக உரையாடி உண்ணாமல்
உறங்காமல் உயிரைக்காக்க....
மரணத்தின் தூதன் இனவெறியன் வடிவில்
இடியாய் வந்தனனே...
இறைநாமம் மட்டுமே தற்காப்பு ஆயுதமாய்
உரக்க ஒலிக்க நிராயுதனாய் நின்ற
எங்களுள் நீங்களும்...
மரணத்தை முந்தி தழுவிக் கொண்டீர்கள் - ஆண்டுகள்
பல கடந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும்
எங்களுடன் அரிச்சுவடியாய் பயணிக்கின்றது
உங்கள் ஆத்மாவின் சாந்திக்காய் நாங்கள்
பிரார்த்திக்கின்றோம்.

சபைகளில் நாயகனாய் சாதனைகள் பல படைத்த
சபாநாயகம் ஐயா!
எங்கள் இல்லத்தில் நம்பிக்கையாளர் சபையில் மூத்த
உறுப்பினராய் இருந்து நயம்படப் பேசி எங்களை
நல்வழிகாட்டிய பெருந்தகையே!
உங்கள் சேவையை இன் நன் நாளில் நினைவு கூர்ந்து
உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

**சீர்பாததேவி சிறுவர் இல்ல நிர்வாகசபை உறுப்பினர்களும், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களும் - 2003**



முன்வரிசையில் இடமிருந்து வலம்: திரு. ந. இதயராஜ் (பொருளாளர்), திரு. க. இரத்தினேஸ்வரன் (ந. சபை உறுப்பினர்), திரு .சி. அருளம்பலம் (ந. சபை உறுப்பினர்), திரு. க. கருணாகரன் (தலைவர்), திரு. இ. சகாதேவன் (ந. சபை உறுப்பினர்)

பின்வரிசையில் இடமிருந்து வலம்: திரு. ப. லவகுமார் (உப தலைவர்), திரு. இ. நிஷாந்தன் (உப செயலாளர்), திரு. ச. கிருபாகரன் (செயலாளர்), திரு. தா. வினாயகமூர்த்தி (பணிப்பாளர்)

# இதழினுள்ளே...


| | | |
|---|---|---|
| வாழ்த்துப்பா<br>(க. கருணாகரன், ஆசிரியர் - வீரமுனை) | | 01 |
| தா. வினாயகமூர்த்தி (பொறியியலாளர்)<br>(பணிப்பாளர் - சீர்பாததேவி சிறுவர் இல்லம்) | | 02 - 05 |
| திரு. S. கிருபாகரன்<br>(தலைவர் - சீர்பாததேவி சிறுவர் இல்லம்) | வாழ்த்து | 06 |
| ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா<br>(தலைவர் -அகில இலங்கை இந்துசமய அபிவிருத்தி சபை) | வாழ்த்து | 07 |
| திருமதி. J.J. முரளிதரன்<br>(பணிப்பாளர்-சமூக நலத்துறை திணைக்களம்) | வாழ்த்து | 08 |
| திருமதி. சாந்தி நாவுக்கரசன்<br>(பணிப்பாளர்- இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்) | வாழ்த்து | 09 |
| திரு. ஞா. இராசகோபாலபிள்ளை<br>(தலைவர் - ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம், வீரமுனை) | வாழ்த்து | 10 |
| திரு. A. மன்சூர்<br>(பிரதேச செயலாளர் - சம்மாந்துறை) | வாழ்த்து | 11 |
| ஜனாப். A. உதுமாலெவ்வை<br>[Probation Officer(F.C), Ampara Disrict Co-ordinator] | வாழ்த்து | 12 |
| திரு. N. கோவிந்தசாமி<br>(செயலாளர் - ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம், வீரமுனை) | வாழ்த்து | 13 |
| திரு. K. பொன்னம்பலம்<br>(கிராம உத்தியோகத்தர் - வீரமுனை-01) | வாழ்த்து | 14 |
| திரு. C. கனகராஜா (இலண்டன்)<br>(இல்லத்தின் ஆங்கில கற்கை நெறிக்கான அனுசரணையாளர்) | வாழ்த்து | 15 |
| திரு. S. கதிர்காமநாதன்<br>(செயலாளர்- ADVRO, இலண்டன்) | வாழ்த்து | 16 |
| திரு. G. சிவராம்<br>[Inovatec Network Systems (Pvt). Ltd. - Colombo] | வாழ்த்து | 17 |
| ஜனாப். Dr. A.R. மொகமட் அஸாப்<br>(பாயிஸா மன்சில், சம்மாந்துறை) | வாழ்த்து | 18 |
| திரு.M. தில்லைநாதன்<br>(பொருளாளர் - ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், மல்வத்தை) | வாழ்த்து | 19 |
| திருமதி. N. புள்ளநாயகம்<br>(பிரதிக் கல்விப் பணிப்பாளர் - துறைநீலாவணை) | வாழ்த்து | 20 |
| திரு. க. சத்தியராஜ்<br>(தலைவர்- சீர்பாததேவி சமூக சேவைகள் மன்றம், வீரமுனை) | வாழ்த்து | 21 |
| ஜனாப். M.I. ஹாபிழ்<br>(தவிசாளர்- N.G.O. Consortium, Akkaraipattu) | வாழ்த்து | 22 |
| திரு. S. சிவசுந்தரமூர்த்தி<br>(அதிபர்- திருஞான சம்பந்தர் அறநெறிப்பாடசாலை, வீரமுனை) | வாழ்த்து | 23 |
| திரு. A. தயாகரன்<br>(செயலாளர்-விநாயகர் விளையாட்டுக் கழகம், வீரமுனை) | வாழ்த்து | 24 |

சோழ இளவரசி எழுப்பிய வீரமுனை (சைவப் புலவர் சா. தில்லைநாதன், மட்டக்களப்பு) 25 - 27

சமூகத்தில் சிறுவர் இல்லத்தின் பங்கு (சி. அருளம்பலம், அதிபர்- இ.கி.மி. பாடசாலை, வீரமுனை) 28 - 30

இல்லம் பெற்றுக்கொண்ட அன்பளிப்புக்களில் சிலவை.... 31 - 32

சிறுவர் உரிமை என்றால் என்ன? (த. ரமேஸ் - சிறுவர் இல்ல மாணவன்) 33 - 35

English Language (Mrs. K. லோகிதராஜா. B.A.J.P., Rtd. ADE. English) 36 - 37

வீரமுனையில் சிறுவர் இல்லத்தின் உதயமும், அதனை அண்டியுள்ள மாணவர்கள் பெற்ற நன்மைகளும் (செ. பேரின்பராஜா, ஆசிரியர், ஊடகவியலாளர், J.P. - துறைநீலாவணை) 38 - 40

இல்லத்தின் பன்முகப்படுத்தப்பட்ட வெளிக்கள சேவைகளில் சில... 41 - 42

சுற்றாடலும் சுகவாழ்வும் (இ. விஜயராஜா - சிறுவர் இல்ல மாணவன்) 43 - 45

சிறுவர்களும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களும் (Dr. Mrs. புஸ்பலதா லோகநாதன் - பாண்டிருப்பு) 46 - 47

குருகுல வாழ்வின் அடித்தளம் வளர்க (கவிஞன் பொன் சிவானந்தன் - காரைதீவு) 48 - 49

இல்ல மாணவர்களின் புறநிலைச் செயற்பாடுகளில் சில... 50 - 51

வெற்றி தரும் யோகம் (அதிபர் கா. சந்திரலிங்கம் - சேனைக்குடியிருப்பு) 52 - 58

ஐந்தாண்டு சேவையில் பொருளாக உதவிக்கரம் கொடுத்து சேவைக்கு உரமிட்ட உயர்ந்த உள்ளங்களின் விபரம் 59 - 63

ஐந்தாண்டு சேவையில் நிதிக்கரம் தந்த உயர்ந்த உள்ளங்களின் விபரம் 64 - 66

வீரமுனையும் அதன் வளர்ச்சியும் (வா. கிருஸ்ணகுமார், ஊடகவியலாளர் - வீரமுனை.) 67 - 68

இல்லம் பற்றி நாளேடுகளில் பிரசுரிக்கப்பட்டவைகளில் இருந்து 69

எண்ணம்போல (பூ. பரமதயாளன், ஆசிரியர் - வீரமுனை) 70 - 71

ஐந்து வருட வளர்ச்சியில் அன்னமிட்டு, ஆனந்தமூட்டிய பெருந்தகைகள் 72 - 83

சிறுவர் இல்லமும் SEDA வும் ( சு. சுதேந்திரன், ஆசிரியர் , பொறுப்பாளர் - SEDA,வீரமுனை) 84 - 86

இல்லச் சிறார்களின் உள்ளக் கிடக்கையில் இருந்து 87

இல்ல மாணவர் விபரம் 88

உதவும் கரங்களுக்கு நன்றிகள் பல சி. மகேஸ்வரன் -செயலாளர், சீர்பாததேவி சிறுவர் இல்லம், வீரமுனை) 89 - 91

சிறுவர் இல்லத்தின் ௨௦௦௬ம் ஆண்டிற்கான கணக்கறிகை 92 - 95

# சிறுவர் இல்ல வாழ்த்துப்பா

வாழிய தமிழ் மொழி வாழிய தமிழர்கள்
வாழிய சிறுவர் இல்லம்
என்றென்றும் வாழிய சீர்பாத தேவி இல்லம்.

வீரமுனைப் புகழ் பாரினில் ஓங்கிட
விளைந்தது சிறுவர் இல்லம்
வேற்றுமை மறந்து ஒற்றுமை ஓங்க
புகழ் கொண்டு வாழிய வாழியவே!.

சிந்தாயாத்திரை குஞ்சரமுகவோன்
தந்த நன் சீர்பாத தேவிதனை
சிந்தை மகிழ்ந்து சிறப்புடன் வாழ
சிந்திய சீர்பாததேவி இல்லம்
என்றென்றும் வாழிய எங்கள் இல்லம்.

சிறுமையில் அறிவு இளமையில் இனிமை
இழந்து தவிக்கும் சிறார்களுக்கு
சிறப்புடன் வாழ வழிகள் காட்டும்
சிறுவர் இல்லம் சிறந்து ஓங்கிட
என்று அருளும் கொண்டு வாழியவே!

சீர்வள நல்ல கலையுடன் பண்பு
நன்னெறி கொண்டு சிறப்புடன் வாழியவே
இல்லம் வளர்ந்துபேருடன் வாழ உழைக்கும்
இளைஞர்கள் வாழிய வாழியவே
என்றென்றும் சிறப்புடன் வாழியவே!

க.கருணாகரன் (ஆசிரியர்),
இல்ல நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்,
வீரமுனை.

# பணிப்பாளரிடமிருந்து ......

**எதைச் சொல்வது எதை விடுவது,**
**ஐந்தாண்டு கால எங்கள் சிறுவர் இல்ல சேவை அனுபவத்தில்........**
**ஐந்தாண்டு காலம் தந்த அவப்பெயரையா?**

**ஐந்தாண்டு காலம் தந்த ஆத்மீக திருப்தியையா?**

சீர்பாததேவி சமூக சேவைகள் மன்றத்தை இஸ்தாபித்ததில் தொடங்கிய சமூகப்பணி இன்று சீர்பாததேவி சிறுவர் இல்லத்தின் ஊடாக பயணிக்கிறது.

சமூகசேவை என்பது எப்போதும் சமூகத்தின் சந்தேகம் என்கின்ற அளவுகோலினால் அளக்கப்படுகிறது. அது விமர்சிக்கப்படுகிறது. அந்த சந்தேகத்திற்கு விடையறிய பொறுமையும், புரிந்துணர்வும், பக்கச்சார்பற்ற நடுநிலைத் தன்மையும் அவசியமாகிறது. எந்த சந்தேகத்திற்கும் விடைதேடும் அணுகுமுறையில்தான் அதற்குரிய தீர்வும் அமைகிறது. இது வரலாற்றில் பல சமூசேவைகளிற்கு ஏற்பட்டிருப்பது வெளிப்படை உண்மையாகும். அலசி ஆராயப்படாத முடிவுகள் சரியாக அமைவது சாத்தியமற்றது. **"காதால் கேட்பதும் பொய் கண்ணால் பார்ப்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய்"**

வீரமுனைக் கிராமத்தில் சிறுவர் இல்லம் ஒன்றின் அவசியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும், அதை எவ்வாறு ஆரம்பிப்பது என்ற கருத்தையும் சகநண்பர்களிடம் இற்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் முன்வைத்து ஆலோசனை உதவி கேட்டு நின்றது இன்று நெஞ்சில் நிழலாடுகிறது. இந்த விடயத்தில் பல நண்பர்கள் காரணம் சொல்லாது விலகினர், சிலர் காரணம் சொல்லி நழுவினர். இல்லத்தின் முதற்பயணத்திற்கு உதவியது சீர்பாததேவி சமூகசேவைகள் மன்றத்தின் 125/= பணமும், என்னுடன் ஒப்பிடுகையில் வயதில் சற்று சிறியவர்களாக இருந்த சா. கிருபாகரன் (B.sc கிழக்கு பல்கலைக்கழக போதனாசிரியரும் இல்லத்தின் தலைவரும்), ஆ.சதானந்தம் B.A பட்டதாரி) ஆகிய இருவருமே. எங்கள் சிந்தனை ஆலய நிர்வாகத்திற்கு நடைமுறைக்கு சாத்தியமான வகையில் தெளிவான முறையில் முன்வைக்கப்பட்டு நடைமுறைக்கு சாத்தியமாக்கப்பட்டது.

ஆலய நிதியில் ஆலயத்திற்கு சொந்தமான 1990ம் ஆண்டு வன்செயலினால் அழிந்த நிலையில் இருந்த மடத்தினை புனரமைத்து இல்லம் அமைத்து அதற்கு சீர்பாததேவி சிறுவர் இல்லம் என்று பெயர் சூட்டுவதாகவும், அதை ஓர் தனிநிர்வாகமாக மாற்றி அதன் பதிவை அரசாங்கத்தில் மேற்கொள்வதாகவும், இல்லம் தாமாக இயங்கிக் கொள்ளும் அளவிற்கு வெளி உதவி கிடைக்கும் வரை ஆலய நிதியில் மாதாமாதம் ரூபா 25000/= வழங்குவதாகவும் ஆலய பொதுச்சபை தீர்மானித்ததுடன், இல்லம் அமைக்கப்படும் இடமும் (1.25ஏக்கர்) இல்லத்திற்கு சொந்தமாகவும் எழுதப்பட்டது.

நிர்மாணப் பணிகளை சீர்பாததேவி சமூகசேவைகள் மன்றமும், விநாயகர் விளையாட்டு கழக இளைஞர்களும் முன்னின்று நடத்த வேண்டுமென்று பொதுச்சபை தீர்மானிக்க இரு அமைப்பும் அதை ஏற்றுக்கொண்டது. புனரமைப்பு வேலைகள் பகுதி பகுதியாக பிரிக்கப்பட்டும் இளைஞர்கள் குழுக்களாக வகுக்கப்பட்டும் பொறுப்பு கொடுக்கப்பட்டது.

இத்தனைக்கும் நடுவில் எதையும் யதார்த்தமாக தாமாக சிந்திக்காத மிதவாதக் குழு ஒன்று, ஆலயத்தின் நிதியில் இல்லமா! யாரோ பெற்ற பிள்ளைக்கு நாம் ஏன் உதவிபுரிய , இல்லம் நடத்துவது சிறியவிடயமல்ல இது கோயில் காசை நாசமாக்கும் திட்டம் என்றெல்லாம் விமர்சனக்கணைகளை வீசியவண்ணமே இருந்தது. இந்த வேளையில் இரண்டு அமைப்பிலிருந்தும் கடமைக்கு, முகத்துதிக்கு பணியில் முகம்காட்டினர் பலர். சேவைக்காக இரவு பகலாக அர்ப்பணிப்புடன் பாடுபட்டனர் சில இளைஞர்கள்.

இலவசமாய் ஒருநாள் வேலை செய்து தரும்படி மேசன் தொழிலாழிகளின் வாசல்படி மிதித்தோம். மனநிறைவுடன் வந்து ஆரம்பித்தார்கள் சேவையை. பலர் சீமெந்து பைகளையும், தண்ணீர் குடத்தையும் எங்கள் தோள்கள் சுமந்தன. அழிந்திருந்த மலசலகூடத்தை அருவருப்பு பாராது தங்கள் கரங்களால் சுத்தமும் செய்தனர். முட்புதர் எங்கள் கால்களிலிருந்து உதிரங்களை எடுத்து திலகமிட்டு அழகுபார்த்தது. வியர்வைத்துளிகள் அது அழகு பார்க்க கண்ணாடியாய் மாறியது.

இல்ல நிர்மாணிப்பு காலத்தில் அதிகாலையில் புறப்படும் எனது மோட்டார் சைக்கிள் அதிகமான இளைஞர்களினை எழுப்பும் ஓர் அலாரமாக மாறி அவர்களை துயில் எழுப்பி கடின வேலைக்காய் அழைத்து வந்த அந்த நாட்கள் இந்த சேவையில் மறக்கமுடியாத முக்கியமான வரலாற்று நாட்கள். முகங்கோணாது படுத்த படுக்கையில் கண்களைக் கசக்கி சேவைக்கு புறப்பட்ட இளைஞர்களின் தியாக சேவை கரம் கூப்பி போற்றத்தக்கது.

கூரை வேலை, கதவு நிலை போன்றவற்றிற்கு மரம் வெட்ட மர மில்களிலும், அலைந்த நாட்களும், பகற்காலங்களில் எங்கள் தலை உண்ட வெயிலும், அது எங்கள் நிறத்தை மாற்றிய காலமும் எண்ணும் போது கடந்தகாலம் எங்கள் மனதில் படமாய் நகர்கிறது. எங்கள் ஒற்றுமையின் பலம் எங்களை இறுமாப்படைய வைக்கிறது.

மேற்சொன்ன அத்தனை வேலைகளுக்குமாய் இரவு பகலாய் ஒரு சில இளைஞர்கள் பாடுபடும்போது, பார்வையாளராகவும்,விமர்சகர்களாகவும் ஒரு குழு இளைஞர்கள் வாழ்ந்ததையும் இந்த இடத்தில் மறக்க முடியாது.

**ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையாரின் திருவருள் துணையுடன் எண்ணம்போல் 2003.02.05** இல் அனாதரவான தெய்வக் குழந்தைகளின் இல்லம் மங்களகரமாக திறந்துவைக்கப்பட்டது. இரவு பகலாய் உழைத்த இளைஞர்கள் மங்களகரமாக அந்த ஏற்பாட்டைச் செய்து, இல்லத்தினுள் உள்வாங்கப்பட்ட குழந்தைகளின் முகத்தில் புன்னகை கண்டு ஆனந்தமடைந்தனர்.

அன்று வரை ஒற்றுமையாக பயணித்த இல்ல சேவை தொடர்ந்து வந்த சில மாதங்களுக்குள் மேற்குறித்த பார்வையாளர்களாகவும், விமர்சகர்களாகவும் எங்கள் கூடவே இருந்து தப்பான கருத்து வெளிப்பாடுகளை ஏழுந்தமான முறையில் அனுமானித்து, அதனை ஒரு சில இளைஞர்கள் மத்தியில் விசமாய் ஊட்டி இல்லம் வேறு, கோயில் வேறு என்ற தீய சிந்தனைக்கு வித்திட்டு சமூகத்தில் ஒன்றாய் இருந்த வலிமைமிக்க இளைஞர் சக்தியை இரண்டாக பிளந்து நண்பர்களை எதிரியாக்கி குளிர் காய்ந்தனர்.

இந்த இடத்தில் மறைந்த எங்கள் இல்லத்தின் நம்பிக்கையாளர் சபையின் மூத்த உறுப்பினரும், இல்ல நிர்மாணிப்பின்போது ஆலய செயலாளராகவும் இருந்து அயராது சேவை புரிந்த சபைகளின் நாயகன் என்று போற்றப்படும் கௌரவத்திற்குரிய **அமரர் ச. சபாநாயகம்(J.P, ஓய்வு பெற்ற அதிபர்)** அவர்கள் இந்த பிரிந்த இளைஞர் சமூகத்தை ஒற்றுமையாக்க பாடுபட்டவர் என்பது இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியது அவசியமாகும். அவர் அடிக்கடி சொன்ன ஓர் வார்த்தை ***"ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம். கூத்தாடிக்கு அடிமைப்பட்டு விடாதீர்கள்"*** என்ற வார்த்தைதான்.

கருத்து முரண்பாட்டுக்கு உள்ளாக்கப்பட்டது இளம் சமூகம் என்பதால், விட்டுக்கொடுப்புக்கள் சற்று தள்ளித்தான் நின்றது. கருத்தில் ஒற்றுமை இன்மையாலும், இல்ல சேவையில் தெளிவின்மையாலும் தள்ளி நின்று விமர்சித்த இளைஞர்களையும் இல்லத்தின் சேவையாளர்களையும் ஒன்று கூட்டி ஒற்றுமைப்படுத்த ***எங்கள் சமூகத்தில் நடுநிலை வாதிகள் இல்லாமல்தான் போயினர்.*** இல்ல நிர்வாகமும் இல்ல சேவையாளர்களும் தவறுகள் செய்திருக்கலாம். இவற்றின் மூலம் பலர் தெளிவற்ற கருத்து முரண்பாட்டிற்கு உள்ளாகியும் இருக்கலாம். முளையிலே இக்கருத்து முரண்பாடு கிள்ளி எறியப்பட்டிருந்தால், பின்னால் வந்த எத்தனையோ கசப்பான நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டிருக்கும். இது தவறிப்போனதால் கடந்த ஐந்தாண்டில் இல்லத்தின் நிர்வாகத்திற்கும் அதன் சேவையாளர்களுக்கும் இதனுடன் முரண்பட்டு நின்ற இளைஞர்களுக்கும் அவர்களை பின்னின்று ஊக்கப்படுத்தியவர்களுக்கும் இடையில் நடைபெற்ற கசப்பான நிகழ்வுகள் பல அசைபோடுவதற்கு அசிங்கமானவையாகிவிட்டது.

காலவோட்டத்தில் கருத்து முரண்பாடுகள் முதிர்ச்சியடைந்து கைகலப்பில் முடிந்தது. இதன் பிரதிபலனாக வைத்தியசாலையிலும், இல்ல சேவையினால் கலகத்தில் சம்பந்தப்பட்ட நாங்கள் கையில் விலங்கிட்டு சிறையிலும் அடைக்கப்பட்டோம். இரண்டு தரப்பிலும் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் குடும்பத்திற்கிடையே இன்னும் கலகம் ஏற்படுத்த ஒரு சில பெண்களும், ஆண்களும் அல்லும் பகலும் முயற்சி. 2 1/2 ஆண்டு நீதி மன்ற விசாரணை இறுதியில் சமாதானம் என்று இரு தரப்பினரினதும் ஒற்றுமையுடன் முரண்பாடுகள் களையப்பட்டது.

**"கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட"** கதையாக அனாதரவான சிறுவர்களுக்கு அயராது உழைக்கவென்று புறப்பட்ட இளைஞர்கள் மனதில் மேற்குறித்த அசிங்கமான சம்பவங்கள் மனக்கிலேசத்தை உண்டாக்கியது. இளைஞர்கள் சக்தியினால் ஒன்றாய் ஆரம்பித்த இல்லத்தில் ஒத்துப்போகாத கருத்துக்களைப் பேசித் தீர்க்க முயற்சிக்காது தர்க்கத்தினால் அதை விவாதமாக்கி விடைகாண முயலாமையால் விளைந்தது இது.

இவ்வாறு இன்னும் பல சொல்லமுடியாத பலவற்றை இல்ல சேவையின் காரணமாக இழந்தும், அனுபவித்தும் எங்கள் சமூகத்தின் எதிர்கால சந்ததியினரை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதற்கான முயற்சியில் ஒரு துளி கூட விலகாது இன்றுவரை இந்த இல்லத்தை வழிநடத்திவரும் நிர்வாகத்தினரும், சேவையாளர்களும் அயராது பாடுபட்டு வருவதை பாராட்டுவதற்கு வார்த்தைகள் இல்லை.

ஒரு சமூக சேவை அமைப்பை பல்லாயிரம் பேர் ஒன்று சேர்ந்து நிறுவினாலும் அந்த அமைப்பிற்கு நிர்வாகம் எனும் பொறுப்பில் ஒரு சிலர்தான் பதவிகளையும் பொறுப்புகளையும் வகிக்கமுடியும் என்பது உண்மை. இந்த வகையில் நிர்வாகத்தில் உள்ள ஒரு சிலர் இல்லம் சம்பந்தப் பட்ட சில நிகழ்வுகளில் பங்கேற்ற புகைப்படங்களை பத்திரிகையில் பிரசுரிக்கும் போது மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள நாசகார சக்திகள் இதை வித்தியாசமான போக்கிற்கு பயன்படுத்திக் கொண்டனர். "நீங்கள் எல்லோரும் இல்லம் கட்ட பாடுபட கடைசியில் அவன் போட்டோ பத்திரிகையில் வருவது எப்படி? உங்களையெல்லாம் ஒதுக்கி விட்டானுகள் பார்த்தீர்களா?" இதுபோன்ற இன்னும் பல சூழுரைகளாலும் ஆரம்ப சேவையில் பாடுபட்ட இளைஞர்களிடம் போதிக்கப்பட்டு அவர்களை அவர்களது தூய சிந்தனையில் இருந்து திசை திருப்பி இல்ல சேவையில் இருந்து வேறாக்கி விட்டனர். அதனைத் தொடர்ந்து **"வேண்டா மனைவி கைபட்டாலும் குற்றம் கால் பட்டாலும் குற்றம்"** என்ற வாக்கிற்கு ஒப்பாக இல்ல நிர்வாகத்தின் சேவைகளும் அதனுள் ஊறிப்போன சேவையாளர்களின் பங்களிப்பும் கொச்சைப்படுத்தப்பட்டு விமர்சனத்திற்கு விடப்பட்டது. கேட்டல் அறிவினால் மட்டும் முடிவு காணும் சமூகத்திற்கு இது அமிர்தமாகப்போய்ச் சேர்ந்தது. இதன் பயனால் இல்லத்துடன் சம்பந்தப்பட்டு செயற்பட்டவர்களும், அவர்கள் குடும்பத்தவரும் பலத்த விமர்சனத்துக்கு குறித்த ஒரு குழுவின் வழிகாட்டலில் விமர்சிக்கப்பட்டனர்.

இந்த காலப்பகுதியில் ஆலயத்திற்கு சென்ற இல்ல இளஞ்சிறார்கள் குறித்த ஒரு சில நபர்களினால் **"கோவில் காசு 25,000/= ஐ சாப்பிடுபவர்கள்"** என்று ஆலய முன்றலில் வசைப்பாட்டிற்கு ஆளாக்கப்பட்டனர். இது சம்பந்தமாக குறித்த நபர்களை நான் சந்தித்து நட்புரிமையுடன் தெளிவான விளக்கம் கொடுத்து தெளிவுபடுத்தினேன். இதனை தொடர்ந்து நாட்கள் பல செல்ல வேறுபட்ட பல காரணங்களை மையமாக கொண்டு ஆலயத்தினால் இல்லத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிதி இடைநிறுத்தப்பட்டது. நாட்கள் பல கழிந்தன கருத்து முரண்பாடுகளும், கற்பனைக் கதைகளும் வலுப்பெற்று காலம் என்ற சக்கரத்தின் மீது உருளத்தொடங்கியது. இதனால் இல்லத்தின் பற்றாளர்களாக இருந்தவர்களின் தனிப்பட்ட பகையாளர்கள் இதை ஒரு சமூகப் பிரச்சினையாக மாற்ற பலத்த பிரயத்தனம் செய்து கொண்டனர். **அவர்கள் வாழ்க்கை கற்பனை உலகில் சிறகில்லாத பறவையானதை** அவர்கள் நன்கு உணர்ந்தனர்.

ஆலய உதவி நிறுத்தப்பட்டதும், இல்லத்தில் அனுமதிக்கப்பட்ட சிறுவர்களைப்போலவே இல்ல சேவையில் ஈடுபட்டிருந்தவர்களும் அநாதரவாக்கப்பட்டு இல்லத்தைக் கொண்டு வழிநடாத்த பொருளாதார பலமற்றவர்ளாக, அடுத்த நாள் உணவிற்காக என்னசெய்வது என்று தெரியாது போராடத் தொடங்கிய காலம் மறக்க முடியாத கண்களில் நீர் பனிக்க செய்த அனுபவத்தை தந்த நாட்களது. சவாலைக்கண்டு சளைக்காது ஒரு குழுவாக ஒன்று சேர்ந்து வீரமுனையிலும் அண்டிய பல கிராமங்களுக்கும் சென்று அவர்கள் வாசல் கதவுகளைத் தட்டினோம். அன்போடு வரவேற்றனர், ஊக்கப்படுத்தினர். உதவியும் செய்தனர். மனிதர்களால் கைவிடப்பட்ட நாங்கள் தெய்வத்தின் துணையுடன் திருப்பணியை தொடர்ந்தோம். இல்ல நிர்வாகமும் அதனுள் ஊறிப்போன தீவிர சேவையாளர்களும் சலிக்காமல், சளைக்காமல் தொடர்ந்தும் இந்த சேவையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதே இன்று இங்குள்ள சிறுவர்களின் நிம்மதியான, சந்தோசமான வாழ்விற்கு அவர்கள் இட்ட உரம்.

இந்த சந்தர்ப்பத்தில் தன் குடும்பத்தையும், இல்லசேவையில் உள்ள தன்மகனையும் சிலர் வசைபாடுகிறார்களே என்று ஒதுங்கி விடாமல் அதைப் பொறுத்துக் கொண்டும், இந்த இல்லத்தின் தர்மசேவைக்கு தங்கள் பிள்ளைகளான இளைஞர்களை அனுப்பி வைத்த பெற்றோரிற்கு எனது இருகரம் கூப்பி சிரம் தாழ்த்தி நன்றிபகிர காலாகாலம் கடமைப்பட்டுள்ளேன். ஐந்து ஆண்டிற்கு முன் கண்ட கற்பனை இல்லத்தை நிஜவடிவிற் கொண்டுவர பாடுபட்ட ஒவ்வொருவரும் இங்குள்ள சிறார்களாலும் அவர்களது பாதுகாவலர்களாலும், கிராமத்தவர்களாலும் காலாகாலம் நன்றி பாராட்டப்பட வேண்டியவர்கள்.

காலஓட்டம் தந்த நல்ல புரிந்துணர்வினாலும், வீரமுனை மண்ணின் ஒரே குடும்ப பிள்ளைகள்தான் நாங்கள் என்பதனாலும், வீரமுனைக்கு ஓர் மகுடம் இந்த சிறுவர் இல்லம் என்பதனாலும், காலப்போக்கில் சகல தரப்பினராலும் இல்ல சேவை ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்று அனைவரும் கருத்து முரண்பாட்டை களைந்து உறுதி கொண்டு ஒருங்கிணைந்து மீண்டும் சேவை புரிவது இந்த இல்லத்தின் உரிமையாளரான **ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையாரின் ஏற்பாடு என்றால் அது பொய்க்காது.**

ஒன்று பட்ட சமூகம் மீண்டும் தளம்பாமல் நாசகார சக்திகளின் சதிப்பேச்சுக்கு இடங்கொடுக்காது இருபத்திநான்கு மணிநேரமும் திறந்த நிலையில் இருக்கும் இல்லத்தில், இல்லம் பற்றிய உங்கள் சந்தேகங்களை, உயர்வான திட்டங்களை உரிமையுடன் சொல்ல வாருங்கள். உங்கள் கருத்துக்களை கடந்த ஐந்து ஆண்டில் இல்ல நிர்வாகம் எந்த விதத்திலும் அலர்ச்சியப்படுத்திய வரலாறு இல்ல வரலாற்றில் அணுவளவேனும் இல்லை. அதை யாராலும் உறுதிப்படுத்தவும் இயலாது.

சேவையாளர்களாக இல்லத்தில் இணைந்து கொள்ளுங்கள். இல்லத்தின் வெளியீடத் தொடர்புகளை அறிந்து கொள்ளுங்கள், இல்ல நிர்வாக ஒழுங்குமுறைகளையும், நிதிக் கையாள்கை, அதன் பதிவுகள் என்பவற்றையும் கற்றுக் கொள்ளுங்கள். இல்லத்தில் நிர்வாகிகளாக்கி உங்களை பொறுப்புள்ளவர்களாக மாற்ற காலம் உங்களை கட்டாயப்படுத்தும். உங்கள் பெறுமதிமிக்க சேவையை இங்குள்ள தெய்வக்குழந்தைகள் வாழ்விற்கு அர்ப்பணிப்பு செய்யுங்கள்.

இல்லத்தின் உதயத்தினால் இன்று வீரமுனை *ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயமும், ஊர் மக்களும்* சமூக சேவைக்கு ஓர் முன் உதாரணமாக பல இடங்களில் பேசப்பட செய்யப்பட்டுள்ளது. பல சுவாமிகளின் புனிதப்பாதம் இவர்கள் இல்லத்திற்கு வரும்போது இந்த மண்ணை முத்தமிடுகிறது. உலக நாடுகளில் பலவற்றிற்கு வீரமுனையின் முகவரி சொல்லப்பட்டிருக்கிறது. **மாணவர் வளநிலையம்** ஒன்றின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கான நூல் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. வறுமையான நிலையில் உள்ள **பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது, ஆங்கில, கணனி பயிற்சி நிலையம் நடத்தப்படுகிறது.** இவை அனைத்தும் சமூகத்திற்கு நன்மையான காரியம். இதில் யாரினதும் தனிப்பட்ட இலாபம் மையப்படுத்தப்படவில்லை. யாரையும் விளம்பரப்படுத்தவும் இல்லை. வீரமுனையும், ஸ்ரீ சிந்தாயத்திரைப் பிள்ளையார் ஆலயத்தினால் அமைக்கப்பட்ட சிறுவர் இல்லமும் தான் எங்கும், எதிலும் வெளிப்படுத்தப்படுகிறது. மேற்குறித்த அனைத்தையும் வெளிக்கொண்டுவர பல சவால்களைச் சந்தித்து நிலைநிறுத்திய இல்ல நிர்வாகத்தினரினதும், அதன் சேவையாளர்களினதும் சேவையினை மனச்சாட்சி என்ற அளவுகோலினால் அளவிட்டுப்பாருங்கள். தெளிவான கண்ணால் இந்த சேவையை பார்த்தால் இதில் பாடுபடுபவர்கள் தங்கள் தனிப்பட்ட ஒளிமயமான வாழ்வின் பல மணி நேரங்களை இல்லத்தில் வாழும் சிறார்களின் முகத்தில் புன்னகை காண தியாகம் செய்வது தெளிவாகும். இதில் கிடைக்கும் ஆத்மீக திருப்தியின் சுகம் இல்ல சேவையாளரால் மட்டுமே உணரப்படும். அதைச் சொல்ல வார்த்தைகளே இல்லை.

எல்லோரும் கரம் கோர்ப்போம் இன்னும் சேவைகள் பல செய்வோம் எங்கள் சமூகத்தை ஏற்றி வைத்து போற்றச்செய்வோம்.

*"தனிமனித சிந்தனை முரண்பாடே உலகப்போரை தோற்றுவிக்கிறது"*

**தா. வினாயகமூர்த்தி (பொறியியலாளர்),**
*பணிப்பாளர்,*
*சீர்பாததேவி சிறுவர் இல்லம்,*
*வீரமுனை.*

# தலைவர் திரு. ச. கிருபாகரன் B.Sc
## அவர்களின் வாழ்த்துச் செய்தி

கடந்த ஐந்து வருடங்களாக செயற்பட்டு வரும் இச் சீர்பாததேவி சிறுவர் இல்லமானது தற்போது அதன் இரண்டாவது நினைவு மலரை அதன் ஐந்து வருட பூர்த்தியில் வெளியிடுவதன் மூலம் அதன் வளர்ச்சியில் ஒரு கட்டத்தை அடைந்துள்ளதையிட்டு அதன் உறுப்பினர்களும், தர்ம உள்ளம் கொண்டு உதவி செய்த, ஊக்கமளித்த உள்ளங்களுக்கும், அமைப்புக்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது பிரதேசத்தையும், அதனை அண்டியுள்ள பிரதேசத்திலும் உள்ள யுத்தத்தினாலும், சுனாமியினாலும் அநாதரவாக்கப்பட்ட சிறுவர்களை அரவணைத்து அவர்களின் பிரதான எதிர்கால இலக்கான கல்வி, அறிவு, திறன், ஒழுக்கம் என்பனவற்றை கிடைக்கின்ற உதவிகளை வைத்து திருப்திகரமான முறையில் ஐந்து வருடங்களாக நிறைவு செய்து வருகின்றோம்.

இச் சிறுவர் இல்லமானது வீரமுனையில் உள்ள சேவை உள்ளம் கொண்ட இளைஞர்களின் உழைப்பினாலும், வியர்வையினாலும் வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தின் முழுப்பொறுப்பில் ஆலய வளவினுள் 2003.02.05 திகதி ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை இடைவிடாது தொடர்ச்சியாக இயங்கி வருகின்றது.

இதன் ஐந்து வருட வெற்றிப் பயணத்துக்கு உறுதுணையாக வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம், வீரமுனையில் உள்ள சேவையுள்ளம் கொண்ட மக்களும், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் உள்ள தர்ம சேவையில் ஆர்வம் கொண்ட பெரியவர்களும் அமைப்புக்களும் மற்றும் எம் நாட்டைச் சேர்ந்த, எம் நாட்டுக்கு வெளியில் வசிக்கின்ற சேவையுள்ளம் கொண்ட மக்களுக்கும், அமைப்புக்களுக்கும் இத்தருணத்தில் நன்றி கூற எமது சிறுவர் இல்ல நிருவாகமானது கடமைப்பட்டுள்ளது.

அத்துடன் இவர்களது சேவைகளும், உதவிகளும் மற்றும் கருத்துக்களும் இனிவரும் காலங்களிலும் தொடரவேண்டும் என்று இத்தருணத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

*- நன்றி-*

*ச. கிருபாகரன்* B.Sc,
தலைவர்,
*சீர்பாததேவி சிறுவர் இல்லம்.*

**"இறைவனுக்கு அர்ப்பணிக்காத எந்த வேலையும் பயனில்லாதது."**

**- ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா -**



**HINDU SAMAYA ABHIVRITTI SABHA**
**(A registered charity)**
**MINISTRY OF CULTURAL AFFAIRS REGN. NO. HA/4/TM/50**
**MINISTRY OF SOCIAL SERVICES REGN. NO. DS/TG/V/50/35**
**HEAD OFFICE: SELVANAYAKAPURAM, TRINCOMALEE, SRI LANKA.**
**TELEPHONE: +94 (0) 26 2224069**
**Mobile: +94 (0) 776573276**

# GREETINGS

WE ARE VERY HAPPY TO LEARN OF THE COMING OF THE FIFTH ANNIVERSARY OF THE FOUNDING OF THE SEERPATHADEVI CHILDERN'S HOME. WITHIN VERY SHORT TIME THIS HOME HAS RISEN TO BE A FIRST CLASS CHILDREN'S HOME IN AMPARAI DISTRICT. IN THE RECENT PAST A CONSIDERABLE NUMBER OF CHILDERN HAVE BEEN RENDERED HOMELESS AND HELPLESS DUE TO WAR, NATURAL CALAMATIES, AND POVERTY, THEREFORE , IT IS NECESSARY FOR US. THE REPRESENTATIVE OF THE HINDU COMMUNITY, TO SEE THAT THESE CHILDREN RECEIVE THEIR NEEDS AS PERTAINS TO EDUCATION, FOOD, CLOTHING, HEALTH, RELIGON, ETC, IN A LOVING AND CARING ENVIRONMENT ... AND TO HARNESS THEIR ENERGIES SO THAT THEY MAY BECOME GOOD AND USEFUL CITIZENS IN THE FUTURE. WE MAY NOTE THE APT EXPRESSION IN THE SRIMAD- BHAGAVATAM -'WORK NOT DEDICATED TO GOD IS USELESS'. LET US RENEW OUR BEFORTS TO BE OF SERVICE TO THE DIVINE BY ASSISTING WHEREVER POSSIBLE THE SEERPATHADEVI CHILDREN'S HOME TO CONTINUE AS A BEACON OF HOPE AND OPPORTUNITY TO THE CHILDRE AND THE COMMUNITY.

***"SERVICE TO HUMANITY IS SERVICE TO GOD."***

***WITH BLESSING,***

*SWAMI TANTRADEVA.*

Swami Tantradeva

***Swami Tantradeva***
**PRES-HSAS**
**Selvanayakapuram**
**Trincomalee - Sri Lanka**

பணிப்பாளர் / Director / අධ්‍යක්ෂක — 026-2223085

கணக்காளர் / Accountant / ගණකාධිකාරී — 026-2222844

அலுவலகம் / Office / කාර්යාලය — 026-2222875

எமது இல. / My No. / මගේ අංකය — EP/24/PCC/26

உமது இல. / Your No. / ඔබේ අංකය —

11/01/2008

**சமூக நலத்துறைத் திணைக்களம்**
(சமூக சேவைகள், சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு சேவைகள்)
கிழக்கு மாகாணம்
உட்துறைமுக வீதி, திருகோணமலை.

**සමාජ සුභ සාධන දෙපාර්තමේන්තුව**
(සමාජ සේවා, පරිවාස හා ළමා රක්ෂණ සේවා)
නැගෙනහිර පළාත
ඇතුල් වරාය පාර, ත්‍රිකුණාමලය.

**DEPT. Of SOCIAL WELFARE**
(Social Services, Probation & Child Care Services)
Eastern Province
Inner Harbour Road, Trincomalee.


# வாழ்த்துச் செய்தி

சீர்பாததேவி சிறுவர் இல்லம் என்னும் பெயருடன் உதயமாகி 2008.02.05 அன்று ஆறாவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் இவ் இல்லமானது, பல்வேறு காரணங்களால் உடல், உள பாதிப்புக்குள்ளாகி, உரிமைகள் மறுக்கப்பட்டு ஆதரவற்று வாழ்ந்து கொண்டிருக்கும் சிறுவர்களை பராமரித்தும், கல்வி புகட்டியும் வருகின்றமை பாராட்டுக்குரியது. நாளைய தலைவர்களாக உதயமாகவுள்ள இச் சிறார்களை நன் மக்களாக உருவாக்குவதில் தாங்கள் வகிக்கும் பங்கு அளப்பரியது. தங்கள் சேவை இன்னும் சிறப்புடன் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, தங்கள் மலருக்கு ஆசிச்செய்தி வழங்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**J.J. முரளிதரன்,**
*ஆணையாளர்,*
*சமூக நலத்துறைத் திணைக்களம்,*
*(சமூக சேவைகள்,சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள்),*
*கிழக்குமாகாணம்,*
*திருகோணமலை.*

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
**Department of Hindu Religious and Cultural Affairs**

අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director } 2552643
ෆැක්ස් / தொலைநகல் / Fax } 2552825
ඊමේල් / மின் அஞ்சல் / E-Mail } hindudir@yahoo.com
පොදු / பொது / General } 2552641
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website } www.hindudept.gov.lk
මගේ අංකය / எனது இல / My No }
ඔබේ අංකය / உமது இல / Your No }
දිනය / திகதி / Date } 10-01-2008


**விரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்ல 5ஆம் ஆண்டு நிறைவினையொட்டி வெளியிடப்படும் 5வது ஆண்டு மலருக்கு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி**

உலகில் ஆதரவற்றவர்கள் என்ற நிலை உருவாகுவதைத் தகர்க்கும் வண்ணம் பொதுநல அமைப்புக்கள் தமது பணியினை ஆற்றிவர வேண்டும். அண்மைக் காலங்களில் உலகின் பல பாகங்களிலும் இயற்கை அனர்த்தங்களால் மட்டுமன்றி யுத்த சூழ்நிலைகளினாலும் பல சிறார்கள் நிர்க்கதியாகியுள்ளதனை நாம் அறிவோம்.

எமது நாட்டில் சுனாமி உட்பட, யுத்த சூழ்நிலைகள் இடம்பெற்றதும், பல சிறார்கள் பெற்றோரை இழந்தமையினால் சமய, பொதுநல ஸ்தாபனங்களின் பராமரிப்பில் இருந்து வருகின்றார்கள்.

இவர்களுக்கான கல்வி, சுகாதார, இருப்பிட வசதிகளைச் சமய நிறுவனங்கள் கருணைகொண்டு அளிக்கவேண்டும். ஆலயங்கள் அமைத்து உற்சவங்கள் செய்யும் அறப்பணி போலவே ஏழைகளை, ஏதிலிகளை நாம் போஷிக்க வேண்டிய கடமைப்பாடு எமக்குள்ளது.

இந்த வகையில் சீர்பாததேவி சிறுவர் இல்லத்தினை தயாள சிந்தனையும் இளைஞர்களின் அயராத உழைப்புடனும் சீர்பாததேவி சிறுவர் இல்லம் உருவாகித் தனது ஐந்தாவது வருடத்தினைக் கொண்டாடுவது உண்மையில் பெருமைக்குரியதாகும்.

இந்தப் பரந்த உள்ளம் கொண்ட அனைத்து நெஞ்சங்களையும் நான் பாராட்டுவதுடன் சீர்பாததேவி சிறுவர் இல்ல ஐந்தாம் ஆண்டு நிறைவு மலர் பல நல்ல தகவல்களுடன் வெளியிடுவதனை நான் வரவேற்று மிக மகிழ்வடைகின்றேன்.

இவர்களது அரும்பணி தொடர்வதாக. எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

*- நன்றி. -*

*சாந்தி நாவுக்கரசன்,*
*பணிப்பாளர்,*
*இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களம்.*

உ
கணபதி துணை

**ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம்**
**வீரமுனை - சம்மாந்துறை**
**Sri Sinthayathirai Pillaiyar Temple**
**Veeramunai - Sammanthurai**
Regd.No : HA/5/AM/61

# வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய தலைவரின் வாழ்த்துச் செய்தி.

வீரமுனைப் பதியில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானின் கருணையினால் எழுந்ததே இச் சிறுவர் இல்லமாகும். யுத்தத்தின் கொடுமையினாலும், கதியற்ற சிறார்களுக்கு வீரமுனை ஆலய தர்மகத்தா சபையின் ஒத்துழைப்புடனும், ஊர்மக்களின், இளைஞர்களின் அயராத முயற்சியினாலும் அமையப் பெற்ற இவ் இல்லத்தின் ஐந்தாவது ஆண்டு பூர்த்தியை நிறைவு செய்யும் இவ்வில்லம் ஓங்கி வளம் பெற்று வளரவேண்டும் என விநாயகப் பெருமானை இறைஞ்சி நிற்கின்றேன்.

*- நன்றி-*

**ஞா. இராசகோபாலபிள்ளை,**
*தலைவர்,*
*ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம்,*
*வீரமுனை.*

**"எவன் பிறர் நற்செயலைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ அவனால் நல்ல செயல்கள் எதனையும் செய்ய முடியாது."**

**- ஜேம்ஸ்ஆவர் -**

## சம்மாந்துறை பிரதேச செயலாளர்
# ஏ. மன்சூர் *அவர்களின் வாழ்த்துச்செய்தி*

அகவை ஐந்தில் அடி எடுத்து வைத்திருக்கும் வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்லத்தினால் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நிறுவனத்தின் கடந்த கால செயற்பாடுகளை அவதானித்துப் பார்க்கும்போது வெறுமனே வாழ்த்துவதோடு மட்டும் நின்றுவிட முடியாது. நன்றியும் பாராட்டுக்களும் நல்கக் கூடியளவிற்கு பாரிய பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றது.

"குழந்தைகள் தெய்வத்திற்கு சமம்" என்ற கூற்றின் அடிப்படையில் நோக்கும்போது இச் சிறுவர் இல்லத்தின் பணியானது ஓர் தெய்வீகப் பணியாகும்.

நம் நாட்டிலும், பிரதேசத்திலும் நடந்த, நடந்து கொண்டிருக்கும் பல்வேறுபட்ட அனர்த்தங்களாலும் பிற காரணங்களாலும் அநாதைகளாக்கப்பட்ட சிறுவர்களுக்கு அபயக்கரம் நீட்ட முன்வந்திருப்பது அனைவரும் வரவேற்கக் கூடிய விடயமாகும். இச் சின்னஞ் சிறிய சிறார்களைப் பராமரித்து கல்வியூட்டல் என்பது தெய்வீகக் குணம் படைத்தோரால் மட்டுந்தான் செய்யக்கூடிய காரியம். இத்திருத்தொண்டுக்காய் தம் உழைப்பையும், பொருளையும் தானம் செய்து கொண்டிருக்கும் இப்பிரதேச இளைஞர்களும் ஆலய நிருவாகத்தினரும் நன்றிக்குரியவர்களே.

மாசித்திங்கள் ஐந்தாம் நாள் நடைபெற இருக்கும் வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்லத்தின் ஐந்தாண்டுப் பூர்த்தி விழாவின் வெற்றிக்கு வாழ்த்துவதோடு, அது ஆல விருட்சமாய் வளர்ந்து ஆண்டாண்டு தோறும் அரும்பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"சமாதானமே சமாதானம்"

*- நன்றி-*

*ஏ. மன்சூர்,*
*பிரதேச செயலாளர்,*
*சம்மாந்துறை.*

**"நாம் சேர்த்து வைக்கும் உண்மையான சொத்து நாம் செய்யும் தர்மங்கள்தான்."**

**- சிம்மன்ஸ் -**

**A.UTHUMALEBBE,**
**Probation Officer (F.C),**
**Amparai District Co-ordinator,**

## வாழ்த்துச் செய்தி


சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவின் வீரமுனை எனும் இடத்தில் அமைந்துள்ள சீா்பாததேவி சிறுவா் இல்லத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளியிடப்படும் நினைவு மலருக்கு வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த காலங்களில் எமது நாட்டில் ஏற்பட்ட கொடிய யுத்தம், இயற்கையனா்த்தம், வறுமை போன்றவற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோரை அல்லது பாதுகாவலரை இழந்து வாழ வழியின்றி அல்லல் படும் சிறுவா்களை அரவணைத்து சிறந்த எதிா்காலத்தை அவா்களுக்கு ஏற்படுத்தக்கூடியதாக அமைந்த இடமே சீா்பாததேவி சிறுவா் இல்லமாகும். இந்த அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனை உருவாகி செயல்படுகின்ற இளைஞா்கள் பாராட்டப்பட வேண்டிவா்களாகும். இங்கு வாழும் சிறுவா்களின் உடல், உள, நலன் கருதி அதற்கான அபிவிருத்தி மேம்பாட்டுக்கான செயற்பாடுகளை எமது திணைக்களத்தின் வழி நடத்தலோடு செயல்பட்டு வருகின்றது. மேலும் இவா்கள் ஏட்டுக்கல்வியை மாத்திரம் பெறாது கணணிப் பயிற்சி, வீட்டுத்தோட்டம், விவசாயம் போன்றவற்றில் ஓய்வு நேரங்களில் ஈடுபடுத்தப்படுவதும் சிறப்புக்குரிய விடயமாகும்.

இதுபோல் இவ்வில்லத்தில் இருக்கும் சிறுவா்களை குடும்பத்தோடு மீள் இணைப்புச் செய்யக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுவது மிக வரவேற்கக் கூடியதொன்றாகும். இவ்வில்லம் ஆதரவற்று வரும் சிறுவா்களை அரவணைத்து அவா்களுக்கான பலமும், வசதிகளும் ஏற்படுத்தப்பட்டதன் பின் குடும்பத்தோடு அவா்களை இணைப்பதற்கான ஊக்கப்படுத்தலை மேலும் செய்வாா்களென நிருவாகத்தினரைப் பாராட்டி எனது வாழ்த்தைத் தெரிவிக்கின்றேன்.

*- நன்றி -*

**A.Uthumalebbe,**
**Probation Officer (F.C),**
**Amparai District Co-ordinator,**
**Kalmunai.**



உ
கணபதி துணை

**ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம்**
**வீரமுனை - சம்மாந்துறை**
**Sri Sinthayathirai Pillaiyar Temple**
**Veeramunai - Sammanthurai**
**Regd.No : HA/5/AM/61**

தலைவர் / President | செயலாளர் / Secretary | பொருளாளர் / Treasurer

# வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய செயலாளரின் வாழ்த்துச் செய்தி.

எண் திசைகளும் கழனிகளால் சூழப்பட்டு எழில் பூத்துக்குலுங்கும் சம்மாந்துறை நகரின் கண்ணே சீப்பாததேவி கண்டெடுத்த விநாயகர் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் வீரமுனைப் பதியினிலே அநாதரவற்றவர்களையும், ஆழிப் பேரலையினாலும், தாய் தந்தை அற்றவர்களையும் காலத்தின் தேவை கருதி ஆதரவளித்து, கல்வி புகட்டி, நற்பண்பாளர்களாக்கி வீறுநடை போட்டுவரும் வீரமுனை சீபாததேவி சிறுவர் இல்லத்தின் ஐந்தாவது வருட பூர்த்தியை முன்னிட்டு இவ் இல்லத்தின் சேவை மேலோங்கி வளர்ச்சியடைய வேண்டும் என ஆலய நிர்வாகசபை சார்பாகவும், தனிப்பட்ட முறையிலும் எல்லாம் வல்ல விநாயகப்பெருமான் துணை புரிய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

*- நன்றி -*

**நா. கோவிந்தசாமி,**
*செயலாளர்,*
*ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம்,*
*வீரமுனை.*

**"எதிர்காலத்தில் நாம் எப்படி இருப்போம் என்பது நாம் செய்யும் காரியங்களையும், எண்ணும் எண்ணங்களையும் பொறுத்தது."**

**- விவேகானந்தர் -**

## கிராம உத்தியோகத்தர் க. பொன்னம்பலம் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி.

"இன்றைய சிறுவர்கள் எமது நாளைய தலைவர்கள்" இச் சிறுவர்களுக்கான பணியில் ஐந்து வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்லத்திற்கு எனது மகிழ்ச்சிகரமான நல்வாழ்த்துக்கள்.

வட – கிழக்கின் யுத்த சூழ்நிலை, சுனாமி கடற்பேரலை அனர்த்தம் காரணமாக பல்லாயிரக் கணக்கான சிறுவர்கள் தங்கள் உறவுகளை இழந்து அநாதரவானார்கள். இவர்களுக்கு மறுவாழ்வு அளித்து வலுவான மனிதர்களாக்க வேண்டிய பொறுப்பு சமுதாயத்தின் கடமையாயிற்று. அந்த வகையில் இப்பிரதேசத்தில் காலத்தின் தேவையறிந்து வீரமுனைக் கிராமத்தில் உள்ள முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர்கள், பெரியோர்கள், வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய நிர்வாகிகளின் அனுசரணையோடு சீர்பாததேவி சிறுவர் இல்லத்தினை ஆரம்பித்தார்கள். அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த ஆதரவற்ற 12 சிறார்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வில்லம் இன்று பல கட்டிட வசதிகளுடன் அமைதிப் பூங்காவாக மிளிர்வதற்கு அயராது உழைத்துவரும் இல்ல நிர்வாகிகள், இளைஞர், யுவதிகள், ஆலய நிர்வாகம், மற்றும் உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் உள்ள அனுசரணையாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

வீரமுனை மற்றும் அதனை அண்டியுள்ள கிராமங்களின் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

சீர்பாததேவி சிறுவர் இல்லம் ஆல விருட்சமாய் வளர்ச்சியடைந்து அதன் நிழலில் தங்கியுள்ள சிறுவர்களின் வாழ்வு வளம்பெற இறை பிரார்த்தனையுடன் கூடிய நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

*- நன்றி -*

**K.பொன்னம்பலம்,**
*கிராம உத்தியோகத்தர்,*
*வீரமுனை - 01.*

**"நீங்கள் அடுத்தவருக்கு நன்மை தேடும்போதே உனக்கு அது கிடைத்துவிடும்."**

**- பிளேட்டோ -**

## C.KANAGARAJAH,
## (Sponsor for English Language Unit)
## London.

# GREETINGS

It is with great pleasure I congratulate the trustees and the management of Seerpathadevi children's Home to bring it to its present state. I come to know about this noble service from a Tamil news paper few years back. The desolate state of the children touched my heart and I decided that these children really deserved help. With the help of few of my colleagues I sent my first humble collection. Since then the illam was in touch with me and I become much more interested, appreciating the unrelented dedication and service done by the trustees under the difficult situation.

I had an opportunity to visit the illam personally in the year 2004. This visit gave an insight of how this illam is run. I was rather surprised to see how could an illam be run so efficiently and economically with the bare resources available then. I was able to see that every penny was well spent an accounted for. I was able to appreciate the way the children were brought up with discipline and with their cultural values inculcated.

I am happy to learn the illam had taken steps to provide additional coaching to improve their studies and the commencement of the English classes recently. The management's willingness to implement suggestions from all sources has made these matters possible.

For this illam to complete its fifth year over coming all the hardships is really appreciable. I congratulate, for it to grow further with the support of all the well wishers. I hope the children will glow as good citizens and wish them a prosperous future.

**C.Kanagarajah,**
**London.**

**Amparai District Vipulananda Rehabilitation Organisation (U K Branch)**
*Ruban Villa*, 4 Broomhall Road, South Croydon, Surrey CR2 0PX
Phone: 020 8239 9689, Mob: 07946 845 343, email: advro@hotmail.co.uk

# வாழ்த்துச் செய்தி

சீர்பாததேவி சிறுவர் இல்லத்தின் ஐந்தாண்டு விழாவிற்கு இலண்டன் பாகத்திலிருந்து இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். நமது பிரதேசத்தில் காலம் காலமாக நடந்துவரும் இன்னல்களுக்கு மத்தியிலும் இந்த சிறுவர் இல்லத்தினை திறம்பட நடாத்துவதையிட்டு நாங்கள் பெருமை கொள்ளாமல் இருக்க முடியவில்லை. முத்தமிழ் வித்தகன் **சுவாமி விபுலானந்த அடிகளார்** பெயரால் ஆரம்பிக்கப்பட்ட எங்கள் சங்கம் கடந்த பல வருடங்களாக அங்கு அரும்பல சேவைகளை ஆற்றி வருகின்றது. இப்பணியை திறம்பட நடாத்துவதற்கு பார்வையாளர்களாக இருக்காமல் பங்காளர்களாக மாறி எங்களுடன் இணைந்து செயற்படும் அனைவரையும் இத்தருணத்தில் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம். குறிப்பாக அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் மட்டுநகர் நலிந்தோர் மேம்பாட்டுக்கழகம், புனித மைக்கல் கல்லூரி, சிவானந்தா வித்தியாலயம், வின்சன் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம், களுவாஞ்சிக்குடி நலன்புரி கழகம் ஆகியவற்றுடன் இணைந்து அரும்பணிகள் பல ஆற்றும்பேறு எங்களுக்குக் கிடைக்கப்பெற்றது. அதனுள் ஒரு கட்டமாகவே தங்கள் இல்லத்திற்கு உழவு இயந்திரம் வழங்கும் சந்தர்ப்பம் எங்களுக்கு கிடைக்கப்பெற்றது. தாங்கள் எடுக்கும் இந்த விழா சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம். தாங்களுக்கும், அங்குள்ள சிறுவர்களுக்கும் அனைத்து ஊழியர்களுக்கும், தொண்டர்களுக்கும் எங்கள் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**"உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"**

**Amparai District Vipulananda**
**Rehabilitation Organisation**
**ADVRO**
**UK Branch**

inovatec
cares more, provides more

# Greetings

Amongst many other objectives, my philanthropic quest graceful place. The idea of helping the Children's home sprang from one and desire of mine, carving the future of innocent children.

In this ever competitive world, globalization has created a lot of challenges for the young generation, proper education, language skills and technological exposures are the most important ones. That I believe will help a child grow naturally and live a life, a happy complete life. The areas that I support (Computer and English education) will hopefully be of great assistance in this quest.

This home has given me tremendous impetus to change my life and fulfill my dreams and I look forward to continuing the mission for a long time.

Thanking you

Inovatec Networks Systems (Pvt) Ltd

G.Sharma
CEO
Tel: 0777-321327
Mail: sharma@inovatec.lk

**G.Sivaram**
**(Sponsor for Computer Unit)**

**INOVATEC NETWORK SYSTEMS (Pvt) LTD.**
15, 1/D, JOSEPH LANE, COLOMBO 04, SRI LANKA
TEL: 011-4513505, 011-4513506, 0777-321327 FAX: 011-2597237

# டாக்டர் ஏ.ஆர். மொகமட் அஸாப்
## அவர்களிடமிருந்து

# வாழ்த்துச் செய்தி

வீரமுனையைச் சேர்ந்த சமூக நலவிரும்பிகளான சில இளைஞர்களின் முயற்சியினால் சீர்பாததேவி சிறுவர் இல்லம் அங்கு அமையப்பெற்றது. இவ்வில்லம் பல நல்ல நோக்கங்களை நிறைவேற்றும் அடிப்படையில் கடந்த ஐந்து வருடங்களாக வீறுநடைபோட்டு இயங்கி வருகின்றது. சமுதாயத்தில் ஆதரவற்று அநாதைகளாக விடப்பட்ட பல சிறுவர்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு ஆத்மரீதியாகவும் வாழ்க்கையில் முன்னேற உலக கல்வியையும் புகட்டி அவர்களை நற்பிரஜைகளாக ஆக்குவதை நல்ல நோக்கமாக கொண்டு இயங்கிவருகின்றது என்பது எல்லோராலும் பாராட்டத்தக்க விடயமாகும்.

இவ்வாறான நல்ல நோக்கங்களை கொண்டு இயங்கி வரும் இவ்வில்லம் இப் பிரதேசத்தில் முன்மாதிரியாக இயங்கி வருகின்றது என்பதில் எந்தவித ஐயமுமில்லை. சீர்பாததேவி சிறுவர் இல்லமானது மேலும் பல வழிகளிலும் முன்னேற வேண்டும் என பிரார்த்தித்து எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

*- நன்றி -*

**Dr. A.R.** மொகமட் அஸாப்,
பாயிஸா மன்சில்,
சம்மாந்துறை,

**"நல்ல புத்தகங்களை படியுங்கள் அவை உங்களை உரப்படுத்தவும் உன்னதப்படுத்தவும் வல்லவை"**

**- அகஸ்டாஸ் -**



உ
சிவமயம்

# மல்வத்தை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபை

# BOARD OF TRUSTEES OF MALWATTA SRI SITHIVINAYAGAR TEMPLE

Regd. No : HA/5/AM/46, 1980.08.14

அம்பாறை வீதி,
மல்வத்தை.

கௌரவ தலைவர் | கௌரவ செயலாளர் | கௌரவ பொருளாளர்

## வாழ்த்துச் செய்தி

கடந்த 1990ம் ஆண்டு ஏற்பட்ட இன வன்செயலைத் தொடர்ந்து பல நூற்றுக்கணக்கான பிள்ளைகள் தாய் அல்லது தந்தையை இழந்து அனாதைகளாக அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்த வேளையில் எமது பிரதேசத்தில் ஒரு சிறுவர் பராமரிப்பு நிலையம் இல்லாத நிலையில் இவர்களை வைத்து பராமரிக்க முடியாத உறவினர்கள் சகோதர மத சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலும் மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி - தம்பிலுவில் போன்ற குருகுலங்களிலும் சேர்த்தனர். இவ்வாறு சேர்க்கப்படாத மாணவர்கள் இளமைப் பருவத்திலேயே கூலி வேலை செய்து கொள்ளும் நிலை ஏற்பட்டது. இதை கவனத்திலெடுத்த கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பிருந்த வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய நிருவாகம் எமது பிரதேசத்திலும் ஒரு சிறுவர் இல்லம் அமையப்பெற வேண்டும் எனும் நோக்கோடு சீர்பாததேவி சிறுவர் இல்லம் எனும் பெயரில் ஆரம்பித்து இப்போது ஐந்து வருடங்கள் பூர்த்தி செய்வதை முன்னிட்டு என் உள்ளம் உவகையில் உறைகின்றது.

மேலும் தொன்மை மிக்க மதமாகிய எமது ஹிந்து மதத்தில் குருகுலக் கல்வி முக்கிய இடம் வகித்து வந்தது. கால மாற்றத்தின் பயனாக அவை அருகிப்போனாலும் மீண்டும் எமது இனம் பயன்படும் வகையில் இயற்கையோடு இணைந்த ஆலயச் சூழலில் இவ்வில்லம் அமையப்பெற்றிருப்பது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

பல நூற்றாண்டு கால வரலாறு கொண்ட எமது ஆலயத்திற்கு வருமானங்கள் வந்தபோதும் எமது மூதாதையர்கள் எமது இனம் பயன்படும் வகையில் தூர நோக்குடனான எந்தவிதமான வழிகாட்டலையும் செய்யவில்லை. ஆனால் இக்கால இளைஞர்கள் காலத்தின் தேவை அறிந்து ஆலயத்தின் ஊடாக பல உயர்வான சிந்தனைகளைச் செயற்படுத்தி வருவதையிட்டு பெரு மகிழ்வு கொள்வதுடன் எமது சீர்பாததேவி சிறுவர் இல்லம் அழியாத ஆல்போல் வேரூன்றி பல வெள்ளி விழாக்களை காணவேண்டும் என வாழ்த்துகிறேன்.

*- நன்றி -*

தலைவர் / செயலாளர்
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை
மல்வத்தை (கி.மா.)

*பிரதிக் கல்விப் பணிப்பாளர்*

**திருமதி ந. புள்ளநாயகம்,**

## *சிறப்புறும் சீர்பாததேவி சிறுவர் இல்லம்....*

சிந்து யாத்திரை தேவி சோழ இளவரசி சீர்பாத தேவி நாமத்துடன் வீரர்முனை மக்களால் ஸ்தாபிக்கப்பட்டு சிறப்பாக சேவை புரியும் இச் சிறுவர் இல்லம் தமது ஐந்தாண்டு நிறைவைக் கொண்டாடும் இந் இனிய நாள் உவகை கொள்ளும் நாளாகும்.

கிழக்கு மாகாண தெற்கு எல்லை காவலர்களாக பல்வேறு சதிகள், இடிகள், இன்னல்கள் மத்தியில் தம்மையும் காத்து, தமது மண்ணையும் தக்கவைத்துக் கொள்ளப்பாடுபடும் இவ் வேளை இன்னல்களைச் சந்தித்த இளம் நெஞ்சங்களையும் அணைத்து பாதுகாத்து அவர்களின் எதிர் காலத்திற்காக ஓர் இல்லத்தினை அமைத்து சேவையாற்றும் இவ் வீரர்முனைச் சமுதாயம் தமது பாரம்பரியத்தினை நிலை நிறுத்தியுள்ளது.

இச் சிறுவர் இல்லம் இளம் சமுதாயத்தினரால் வழி நடத்தப்படுவது குறிப்பிடக் கூடிய ஒரு விடயமாகும். ஏனெனில் இன்றைய இளம் சமுதாயத்தினரிடையே அருகிவரும் சமூக சேவையும், பொதுநல நோக்கும் இந்த இளம் சமுதாயத்தினரிடையே ஏற்பட்டுள்ளமை அவர்களை உதாரண புருஷர்களாக கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இவ்வில்லமானது தனியே சிறுவர்கள் தங்கிவாழும் இடமாக அல்லாது அங்கு நுழைவோர் மனங்களை அமைதிக்கும், அன்புக்கும் ஆட்கொள்ளும் நெறிக் கூடமாகவும், அதன் வாயிலே அமைக்கப்பட்டுள்ள சீர்பாததேவியின் சிலை அவ் இல்லத்தின் தாயாக இருந்து அருள் பாலிப்பதை எடுத்துக் காட்டுவதாகவும், பசுமை கொண்ட எழில் நிறைந்த இல்லமாகவும் காட்சியளிப்பது அனைவரையும் கவருவதாக அமைகின்றது.

மேலும் இல்லத்தினுள்ளே சிறுவர்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையும் ஒரு சிறப்பம்சமாகும். அத்துடன் இவ்வில்ல உறுப்பினர்கள் அவர்களை இனிமையாக அன்புடன் வழி நடத்துவதன் மூலம் அவர்களின் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதும் இவ் இல்லச்சிறுவர்கள் எதிர் காலத்தில் நல்ல ஆளுமை உடையவர்களாக உருவாகுவார்கள் என்ற நம்பிக்கையை எம்மிடையே ஏற்படுத்துகின்றது.

இன்றைய சிறுவர்களே எதிர்கால எஜமான்கள். அந்த எஜமான்கள் ஆரோக்கியமானவர்களாகவும், எம்மைப் பின்பற்றும் சமூக நோக்கம் கொண்டவர்களாகவும் உருவாக வேண்டும் என்ற நல்ல நோக்குடன் செயல்படும் இல்ல இளம் உறுப்பினர்கள் இந்த ஐந்தாண்டுகளில் கூடிய வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளமை அவர்களின் செயல் திறனையும், அவர்களின் பொதுநல சிந்தனையையும் எடுத்தியம்புவதாக உள்ளது.

மேலும் இவ்வில்லம் என்ன நோக்கத்திற்காக உருவக்கப்பட்டதோ அந்நோக்கத்தினை சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. எதிர் காலத்திலும் இச் சிறப்புறும் சீர்பாததேவி சிறுவர் இல்லம் தனது சேவையில் சிறப்புற வேண்டும் என்பதே அனைவரினதும் ஆசிகளாகும்.

*திருமதி ந. புள்ளநாயகம்,*
*பிரதிக் கல்விப் பணிப்பாளர்,*
*துறை நீலாவணை.*

Regd. No.: STR/DS/SS/44/01

சீர்பாததேவி சமூக சேவைகள் மன்றம் - வீரமுனை
SEERPAATHADEVI SOCIAL SERVICES FOUNDATION - VEERAMUNAI
සීර්පාදදේවි සමාජසේවා පදනම - වීරමුනේ

## *வாழ்த்துச்செய்தி*

தனது ஐந்தாம் ஆண்டு நிறைவை கொண்டாடும் சீர்பாததேவி சிறுவர் இல்லத்திற்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள். "அடைக்கலம் கொடுத்தோர் இறைவனின் அன்புக்கு பாத்திரமானவர்" என்பதற்கிணங்க அவ்வாறான பணியையே சீர்பாததேவி சிறுவர் இல்லம் செய்து வருகின்றது. யுத்தத்தாலும், பல்வேறு சூழ்நிலைகளாலும் நிர்க்கதியாக நிற்கும், எதிர்காலம் என்பது என்னவென்று தெரியாது நின்ற சிறுவர்களை அடைக்கலம் கொடுத்து எதிர்காலப்பாதையை காட்டும் உமது சேவை இறை சேவைக்கு மேலானது. நாட்டின் எதிர்கால பயிரை வளர்க்கும் உமது சேவை ஐந்தாண்டு அல்ல ஐந்நூறு ஆண்டுவரை தொடரவேண்டுமென எமது மன்றத்தின் சார்பாக வாழ்த்துகின்றேன்.

வீரமுனைப் பதியில் ஓர்
இல்லம் ~ அது
சீர்பாததேவி சிறுவர்
இல்லம் ~ அது
சிறுவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும்
இல்லம் ~ அது
சிறுவர்களை அரவணைக்கும்
இல்லம் ~ அது
எதிர்காலத் தீபங்களின்
இல்லம் ~ அது
எதிர்கால பாதை காட்டும்
இல்லம் ~ அது
சிறுவர்களை சீர்படுத்தும்
இல்லம் ~ அது
சிறுவர்களின் சிந்தை தெளிய வைக்கும்
இல்லம் ~ அது
வளரும் பயிரை
வளம்பெறச் செய்யும்
இல்லம் ~ அது
அதன் பணி ஐந்தாண்டல்ல
ஐந்நூறு ஆண்டு தொடரவேண்டும்

*- நன்றி -*

*தலைவர்,*
*சீர்பாததேவி சமூக சேவைகள் மன்றம்,*
*வீரமுனை.*

# Ampara District N.G.O. Consortium

Regd No : SS/NEP/AM/AV/AV1/11/35 - Estd : 1997 / 06 / 01 Akkaraipattu - 08 Sri Lanka.

## வாழ்த்துச் செய்தி

வீரமுனை சம்மாந்துறையில் இயங்கிவரும் சீர்பாததேவி சிறுவர் இல்லம் ஆதரவற்றதும், பாதிக்கப்பட்டதுமான பல சிறுவர்களை பராமரித்தும், கல்வி புகட்டியும், சேவையாற்றி, ஐந்து வருடங்களை பூர்த்தி செய்யும் இத்தருணத்தில் எமது வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

யுத்தம், வறுமை, வன்முறைகளால் நமது சமூகம் மிகவும் நலிவுற்றுள்ளது. இதில் பெண்கள், சிறுவர்கள், முதியோர்கள் என்போரே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இந்த வகையில் சீர்பாததேவி சிறுவர் இல்லம் அநாதரவான சிறுவர்களை அரவணைத்து கடந்த ஐந்து வருடங்களாக அதன் சிறந்த சேவையினை ஆற்றி வருகின்றது.

எமது அம்பாரை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கத்துவம் வகிக்கும் இச் சிறுவர் இல்லம் பல முன்னேற்றகரமான திட்டங்களை மேற்கொண்டு மேலும் தமது சேவைகளை ஆற்றவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

***"Service of People is a Service of God."***

*- நன்றி. -*

எமது நல்லாசிகள்.

**ஜனாப் M.I. ஹாபிழ்,**
தவிசாளர்,
அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
அக்கரைப்பற்று.



**"எங்கே அன்பு மெலிதாய் இருக்கிறதோ
அங்கே தவறுகள் தடித்து இருக்கின்றன."**

**- வெல்ஷ் பழமொழி -**

**திருஞான சம்பந்தர் அறநெறிப் பாடசாலை**

**Thirugnana Sampandar Araneri Padasalai**

**வீரமுனை Veeramunai**

**Reged No : HA/7/56/2/36 - 1992.10.28**


"இந்து சமய பாரம்பரியங்களை பேணுவோம்"

# வாழ்த்துச்செய்தி

எம் நாட்டின் கொடூர யுத்தத்தின் விளைவுகளில் ஒன்று ஆதரவற்ற சிறுவர்கள். அவர்களின் எதிர்கால கனவுகள் சிதைக்கப்படுகின்றன. அத்துடன் அவர்களின் வாழ்வை இருள் கவ்வுகின்றன. இதன் நிமிர்த்தம் விரக்தியுற்றவர்களாக வாழ்கின்றார்கள். இப்பேர்பட்டவர்களுக்கு வாழ்வாதாரங்களை வழங்கி எதிர்காலத்தில் நம்பிக்கை ஊட்ட அமைக்கப்பட்டதே சீர்பாததேவி சிறுவர் இல்லமாகும்.

12 மாணவர்களைக்கொண்டு ஒரு கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வில்லம் இன்று ஐந்தாண்டில் கால் பதிக்கின்றது. மாணவர்களின் நலன் கருதி படிப்பகம், ஓய்வகம், தியான மண்டபம், கணினி மையம், பிரத்தியேக ஆங்கில வகுப்பு நிலையம் என பல வசதி வாய்ப்புகளை கொண்டுள்ளது. மாணவர்கள் இவற்றை பயன்படுத்தி தங்களை வளப்படுத்திக்கொள்ள வேண்டும். அதன் மூலமே எதிர்காலம் சிறப்படைய முடியும். ஆகவே எல்லா மாணவர்களும் நற்பிரஜைகளாக வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இன்று இவ்வில்லம் விருட்சமாக திகழ காரணகர்த்தாக்களான பணிப்பாளர், நிர்வாகிகள், ஊழியர்கள் போன்ற தரப்பினரை பாராட்டுகின்றேன். அவர்கள் தொடர்ந்து இப் புனித பணியில் தங்களை பூரணமாக அர்ப்பணித்து, செயற்பட்டு இல்லம் மேலும் பொலிவுபெற வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

பொய்யா மொழிப் புலவரின்

**"தோன்றில் புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று".**

என்ற வாக்கிற்கு ஏற்ப சிறப்படைய வேண்டுமென இறைவனை ஆசிக்கின்றேன்.

*- நன்றி -*


**S.** *சிவசுந்தரமூர்த்தி,*
***அதிபர்,***
***திருஞான சம்பந்தர் அறநெறிப்பாடசாலை,***
***வீரமுனை.***

பதிவு இல: N. E. P. A. S. 140412
ஆரம்பம்: 1980.
கணக்கு இல:

විනායගර් ක්‍රීඩා සමිතිය – වීරමුනේ

**விநாயகர் விளையாட்டுக் கழகம் - வீரமுனை**

**VINAYAGAR SPORTS CLUB-VEERAMUNAI**

## நினைவு மலருக்கான வாழ்த்துச் செய்தி.

பெருமையோடு விளங்கும் வீரமுனைப் பதிக்கு மேலுமொரு பெருமை சேர்க்கும் வண்ணம் ஆற்றுதற்கு அரிதான சேவையான, அநாதரவற்ற சிறுவர்களை அரவணைத்து அவர்களுக்கு சீர் சிறப்புடன் தேவைகளைப் பூர்த்தி செய்து சமுதாயத்திலே சிறந்த பிரஜையாக திகழ்வதற்கு ஆருயிர்த் தாயாக அரவணைத்து ஆற்றுப்படுத்தும் வீரமுனைக்கே புகழ் சேர்த்த மாதரசி சீர்பாததேவி என்னும் இளவரசியின் திரு நாமத்திலே உதயமான சீர்பாததேவி சிறுவர் இல்லமானது ஆரம்பிக்கப்பட்டு ஐந்தாண்டு நிறைவினைப் பூர்த்தியாக்கி ஆறாவது ஆண்டிலே கால் பதிக்கும் இவ்வேளையிலே ஆற்றுகின்ற அருஞ் சேவையோடு, மேலும் பெரும்புகழ் சேர்த்து ஐந்தாண்டென்ன ஐயாயிரம் ஆண்டுகள் தாண்டியும் சீரும் சிறப்புடனும் தனது பணியினை இடைவிடாது தொடர வேண்டுமென எமது கழகம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

*- நன்றி -*

VINAYAGAR SPORTS CLUB
REGD NO: N.E.
P. A. S. 140412
OF 1980
VEERAMUNAI

*செயலாளர்,*

**"எளிமையுடன் கட்டுப்பாடும் நற்பண்பும் சேர்ந்து கொண்டால் அவற்றை யாராலும் வெல்ல முடியாது."**

**- காந்திஜி -**

**சீர்பாததேவி சிறுவர் இல்ல நிர்வாகசபை உறுப்பினர்களும், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களும் - 2005**



முன்வரிசையில் இடமிருந்து வலம்: திரு. தா. வினாயகமூர்த்தி (பணிப்பாளர்), திரு. க. இரத்தினேஸ்வரன் (ந. சபை உறுப்பினர்), திரு .சி. அருளம்பலம் (ந. சபை உறுப்பினர்), திரு, க. கருணாகரன் (தலைவர்), திரு. இ. சகாதேவன் (ந. சபை உறுப்பினர்)

பின்வரிசையில் இடமிருந்து வலம்: திரு. சு. சுதேந்திரன் (செயலாளர்), திரு. மா. உதயராஜன் (பொருளாளர்), திரு. இ. நிஷாந்தன் (உப செயலாளர்), திரு. ப. லவகுமார் (உப தலைவர்)

*சைவப்புலவர். சா. தில்லைநாதன்,*

# சோழ இளவரசி எழுப்பிய வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம்.

மட்டக்களப்பு தமிழகம் மட்டக்களப்பு வாவியினாலும் இந்திய வடக்கு பிராந்தியங்களிலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும் வந்தவர்களது, திருக்கோயில்களின் நிறைவாலும் பெருமை பெற்றுள்ளது.

சுமார் முப்பது மைல் நீண்ட அளவினை உடைய மட்டக்களப்பு வாவியின் ஓர் அந்தத்தில் அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயமும் தெற்கின் மறு அந்தத்தில் வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் சிறப்புற விளங்குகின்றது. இவற்றினிடையே பல திருக் கோயில்களும் அமைந்துள்ளன.

கும்புக்கண் ஆறு தொடக்கம் வெருகல் கங்கை வரை பரவியிருந்த மட்டக்களப்பு தமிழகம் 1911 ஏப்பிரல் பத்தாம் திகதி முதல் மட்டக்களப்பு அம்பாறை என்ற இரண்டு நிருவாக மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம் அம்பாறை மாவட்டத்திலும் அடங்கலாயிற்று. இவ் ஆலயம் தனக்கென சமூக, அரசியல், பொருளாதார, பண்பாடு காட்டும் சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததென்பதை வரலாற்று ஆதாரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. பெருமையும் புகழும் பெற்றது, பழமையானது, புதுமை கொண்டது, ஆகம முறையில் அமைந்தது. நான்மறை அறங்கள் ஓங்க, மிகு சைவத்துறை விளங்க வழிபாடு நடாத்தப்பெறுவது வழிவழியாக வளர்ந்து வரும் கலையும், ஞானமும், கலாச்சாரமும் பேணிக் காக்கப்படும் கருவூலமாகத் திகழ்கின்றது.

விஜயராசனின் சகோதரன் மரபில் பிறந்த உக்கிரசிங்கன் எனும் அரசன் கி.பி 795 ஆண்டு காலப்பகுதியில் கதிரமலையை தலைநகராக கொண்டு (தற்போது கந்தரோடை) இலங்கையின் அரைப்பகுதிக்கு மேலாக ஆட்சி செய்தான். தென்னிலங்கையை வேற்றரசன் ஆட்சி செய்தான்.

உக்கிரசிங்கனது ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியாவில் சோழநாட்டை சற்சனன் என்னும் அரசன் ஆட்சி செய்தான். சற்சோழ அரசனின் மகள் மாருதப்புரவீகவல்லி தீர்த்த யாத்திரையின் பொருட்டு ஈழத்திற்கு வந்தாள். அவளுக்கு கதிர்காம கதிரமலையில் முருகக்கடவுளின் அருளால் வழங்கப்பட்ட திருக்குறிப்பின்படி கீரிமலை நீரூற்று தீர்த்தத்தினால் அவளது தீர்த்த யாத்திரையின் நோக்கம் இனிது நிறைவேறியது. நகுலேஸ்வரப்பெருமானின் ஆலயம் அங்குள்ளது.

உக்கிரசிங்க அரசனும் மாதமொரு தடவையாயினும் இத் தீர்த்தத்தில் நீராடி நகுலேஸ்வரப் பெருமானை வழிபட்டு வருவதை வழக்கமாக கொண்டவன்.

இக்காலத்தில் மாருதப்புரவீகவல்லியின் அழகில் மயங்கிய உக்கிரசிங்கன் அவளை தூக்கிச்சென்று திருமணம் புரிந்தான். இத்திருமண வாழ்க்கையின் பயனாக இவர்களுக்கு வாலசிங்கன், சண்பகவதி என்னும் இரு குழந்தைகள் கிடைக்கப்பெற்றன.

மாருதப்புரவீகவல்லியால் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் எழுந்தது. சோழக்கடவை என்னும் இடத்தில் அவளது குதிரைமுகம் நன்முகமாக மாறியதால் அவ்விடம் மாவிட்டபுரம் ஆயிற்று என்பது ஆய்வாளர் கூற்று.

வாலசிங்கன் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ச்சியடைந்தான். சகல கலைகளையும் கற்றான். முனிவர்களது ஆச்சிரமத்திலும் தனது பிரமச்சரியத்தை மேற்கொண்டதன் பேறாக ஆகாயமார்க்கமாகச் செல்லும் ஆற்றலையும் பெற்றான்.

காலவிரையத்தினால் முதுமையடைந்த உக்கிரசிங்க அரசன் தனது அரச பாரத்தினை வாலசிங்கனிடம் கையளித்து "ஜெயதுங்க பரராசசிங்கன்" என்னும் விருதுப் பெயருடன் அரியணையில் ஏற்றினான்.

இதே காலகட்டத்தில் தமிழகத்தில் சோழ அரசர்கள் நாடு, புகழ் இழந்து பல்லவ அரச ஆணையை ஏற்றுக்கொண்டு சிற்றரசர்களாக வாழ்ந்த காலத்திலே குமராங்குசன் என்னும் மன்னனும் சிற்றரசனாக ஆட்சிபுரிந்தான். இவ்வரசனைப்பற்றி வேலூர் பாழைய செப்பேடுகள் மிகவும் புகழ்ந்து கூறுகின்றன.

குமராங்குச அரசனின் மகள் சீர்பாததேவிக்கும் ஈழ நாட்டரசன் வாலசிங்கனுக்கும் சோழநாட்டில் பாழையாற்றில் விமரிசையாக திருமணம் நடந்தேறியது.

பாழையாற்று அரண்மனையில் சில நாட்கள் தங்கியிருந்த பின் சீர்பாததேவி ஈழத்தில் தனது கணவனின் ஆட்சிக்குட்பட்ட இடங்களை பார்க்க விரும்பினாள். சோழ அரசன் சீர்பாததேவியை தனது இன பந்துக்களுடன் தம்மிடம் இருந்த விசுவாசம் கொண்ட ஆரியநாடு, திருவொற்றியூர், கட்டுமாவடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பிராமணர், வேளாளர், செட்டிமார் முதலியோரைக் கொண்ட குழுவொன்றுடன் கப்பல் ஒன்றின் மூலமாக அனுப்பிவைத்தான்.

கப்பலும் யாத்திரையைத் தொடங்கியது. செல்லும் வழியில் வீசிய காற்றின் வேகம் காரணமாக நீர்ச்சுழியினால் இழுக்கப்பட்ட கப்பலானது திருகோணமலையை அண்மியதும் தொடர்ந்து செல்ல முடியாது நின்றுவிட்டது. சீர்பாததேவி கலக்கமுற்றாள். அவ்வேளை இனபந்துவில் ஒருவன் கடலில் குதித்தான் அவன் கப்பலின் கீழ் ஆழ்கடலின் அடியில் தடைப்படுத்தியது பிள்ளையார் விக்கிரகம் என அறிந்து அதனை தூக்கியெடுத்து கப்பலில் ஏற்றினான். சீர்பாததேவி அப்பிள்ளையாரை வணங்கி "இக்கப்பல் தடைப்படாது சென்று எங்கு கரைதட்டுகிறதோ அங்கு கோயில் எடுப்பேன்" என நேர்ந்து கொண்டாள்.

கப்பலானது தங்குதடையின்றி கடலில் இருந்து மட்டக்களப்பு வாவியினூடாக ஓடி அவ்வாவியின் தென்புற அந்தமாகிய வீரமுனை என்னும் இடத்தில் இனிதே கரை தட்டியது. வீரமுனையில் சீர்பாததேவி இறங்கினாள். கூடாரம் அமைத்து தனது நேர்த்தியின்படி பிள்ளையாருக்கு கோயில் எழுப்பினாள். கோயிலை நன்கு பரிபாலனம் செய்யும் பொருட்டு வாலசிங்க அரசன் சீர்பாததேவியுடன் வந்த அவர்களது இன பந்துக்கள், பிராமணர்கள், வேளாளர், செட்டிமார் ஆகியோரை வீரமுனையிலே குடியிருக்க பணித்தான். இவர்களிடையே வேற்றுமை தோன்றாதிருக்க இவர்கள் அனைவரையும் சேர்த்து சீர்பாததேவியின் பெயரால் ***"சீர்பாதகுலம்"*** எனவகுத்து அரவிந்தமலர், செங்கோல், கொடி என்பன பொறிக்கப்பெற்ற விருதை வழங்கி சாசனமும் செய்து கொடுத்தாள்.

இக்கோயில் பொலிவுடன் விளங்கும் பொருட்டும், பூசைகள் சிறப்புடன் நடைபெறும் பொருட்டும் கிண்ணறையம்வெளி, தரவைமுன்மாரி, மல்வத்தை வெளி, கல்லடி வயல், பருமணிவயல் முதலிய வயல் நிலங்களை மானியமாக வழங்கியதுடன் மக்கள் வசதியாக வாழ வசதிகளையும் செய்து கொடுத்தான்.

அரசனின் மனைவியான சீர்பாததேவியும் தான் வழிபடுவோரையும் அவர்கள் வழிபடும் பொருட்டு ஈந்து கணவருடன் சிங்கை நகருக்குச் சென்றாள். (சிங்கை தற்போது யாழ் வல்லிபுரம் என வழங்கப்பெறுகிறது).

வீரமுனை பிள்ளையார் வரலாற்றுச் சிறப்பின்காரணமாக "சிந்து யாத்திரைப்பிள்ளையார்" என்னும் நாமத்தைப் பெற்றார். சிந்தாயாத்திரைப் பிள்ளையார், சிந்தாத்திரைப் பிள்ளையார் எனவும் திருநாமங்கள் அதற்குரியதாயிற்று. இவ்வரலாற்றுச் சிறப்பின் காரணமாக இதனது வரன்முறைக் கல்வெட்டு, செப்புப்பட்டைய சிலாசாசனம் என்பன பெருமையை பெற்று விளங்குகின்றன.

வீரமுனையிலே பிள்ளையாருக்கு கோயில் எழுந்த படியால்தான் அரச கௌரவமும், அரச விருதும் பெற்ற ***"சீர்பாதகுலம்"*** என்ற சமூகம் தோன்றலாயிற்று. இச் சமூகத்தினர் இந்து சமய நெறியில் தளர்வுறா பெருமை படைத்தவர்கள். வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் கோயிலுடன் சீர்பாதகுலமும் இணைந்த வரலாறானது கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் பொதிந்து அழியா மாண்பினை பெற்றுவிட்டது.

இக் கோயிலின் நித்திய, நைமித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன. இதன் வருடாந்த மகோற்சவ திருவிழா ஆனிமாத வளர்பிறை உத்தரத்தைக் கொண்ட பத்து நாள் திருவிழாவாக நடைபெறுகிறது.

பெரியதோர் ஆலய அமைப்பை உடைய இவ்வாலயமானது பிரமாண்டமான கோபுரமும், அகன்று விரிந்த பரப்பளவையுடைய வெளி வீதியின் மருங்குகளாக கண்ணகி அம்மன் ஆலயமும், நீரர மகளீர் இசைபாடும் மட்டக்களப்பு வாவியும், சமூக நோக்கையும், விழுமியங்களையும் சமூகமயமாக்கும் இராமகிருஷ்ண மகா வித்தியாலயமும் விளங்க எழுச்சியுடன் தோற்றமளிக்கின்றது. ஆலய வெளியின் வடமேற்குத்திசையில் சீர்பாததேவி சிறுவர் இல்லமும் சிறப்புடன் நடாத்தப் பெறுகின்றது.

மேற்படி இல்லத்தில் இனமத வேறுபாடின்றி தெற்கே அட்டப்பளம், வடக்கே கரடியனாறு உள்ளிட்ட ஆதரவற்றதும், பாதிக்கப்பட்டதுமான சிறுவர்களுக்கு புகலிடம் வழங்கி பராமரித்து கல்வி புகட்டி வருகிறது.

இவ்வில்லம் பணிபுரிய நிலம் வழங்கி, நிதிவழங்கி, அதரவு நல்கியது இவ்வாலயமே. 2003 பெப்ரவரி ஐந்தாம் திகதி 12 சிறுவர்களுடன் ஆரம்பிக்கப்பெற்ற சிறுவர் இல்லம் தற்போது 32 சிறுவர்களுக்கு தாயாக, தந்தையாக, குருவாக விளங்கி நிற்கின்றது.

விநாயகப்பெருமானின் திவ்விய அருட்கடாச்சத்தினால்

**"பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சிறந்து" மனித குலம் உயர்ச்சிபெற வேண்டி அமைகின்றேன்.**

***சைவப்புலவர். சா. தில்லைநாதன்,***
*மட்டக்களப்பு.*

# இல்ல நம்பிக்கை சபையாளரும், அதிபரும் திரு. சி. அருளம்பலம் B.A.

## சமூகத்தில் சிறுவர் இல்லத்தின் பங்கு

நாம் இன்றைய சமூகத்தில் காண்கின்ற ஒரு வினோதம் என்னவெனில், நம் முன்னோர் கூறி வைத்த நல்ல வாழ்வியல் நெறிமுறைகளை நம்புவதாகவும் இல்லை, அதேவேளை நம்பக்கூடிய வகையில் ஏதாவது நவீன நெறிமுறைகளை வகுத்து சீரிய வாழ்விற்கு வழிகோலும் நிலையிலும் இல்லை. இரண்டும் அற்ற ஒரு நிலையாகும். இந் நிலையில் நற்பண்புகள் கொண்டிருத்தல், நல்லொழுக்கங்களை மேற்கொள்ளுதல், நன்னடத்தைகள் உடையோராய் விளங்குதல் என்பன நல்வரின் அடையாளங்கள். மனிதர்கள் இயற்கையில் நல்லவர்கள். ஆனால் வாழ்க்கையில் சில வேளைகளில் தவறி விடுகின்றனர். இவ்வாறான விடயங்களினுள் மனிதன் நற்பெயரை இழக்கவேண்டியுள்ளது. சமூகம் என்பது பல விடயங்கள் நிறைந்து காணப்படும் ஒரு நிலையாகும். இந்தச் சமூகத்தில் இடம் பெறுபவர்கள் நல்ல இடத்தை பெறுவதாக இருந்தால் இளமையில் இருந்து நல்வழிகாட்டல், நற்கருத்துபெற என்பனவற்றுக்கு வழிப்படுத்த வேண்டும் இதன் அடிப்படையில் தாய், தந்தை இல்லாத சிறுவர்களுக்கு வழிகாட்டும் புகலிடம் சிறுவர் இல்லமாகும்.

இந்த வகையில் இளம் வயதில் யார் துணையுமின்றி தனித்து நிற்கும் சிறார்களுக்கு சிறுவர் இல்லங்கள் வழிகாட்டும் இடமாகும். தாயின் அரவணைப்பிலும், தந்தையின் வழிகாட்டளையும் இவ்வாறான இடங்கள் அளிக்கின்றன. இதனால் அவர்களின் துன்பங்கள் துடைக்கப்படுகின்றன. கூட்டு மனப்பாங்கு ஏற்படுகின்றது. எதிர்கால வாழ்க்கை ஒளிமயமாக வருவதற்கு இது சந்தர்ப்பம் அளிக்கின்றது. தன் வாழ்க்கையின் நிலை தவறாமல் சமூகத்திற்கு பொருத்தப்பாடாக, சமூக எதிர்பார்ப்புக்கு ஒரு பிரஜையாக, நற்பண்புகள் கொண்டதாக, விழுமியங்களை பெற்றவராக வருவதற்கு சிறுவர் இல்லங்கள் வழிகாட்டுகின்றன. இதனால் அவர்களின் கவலைகள் மறந்து ஏனைய சிறுவர்களுடனும் சேர்ந்து நடக்க உதவுகிறது.

நல்ல உள்ளம் படைத்த உத்தமனார்களின் சமூக சிந்தனையின் மூலம் இந்த சிறுவர் இல்லங்கள் சிறப்பாக நடைபெறுகின்றது. நாங்கள் ஒவ்வொருவரும் பெருமையடையக்கூடிய ஒரு நல்ல காரியம் இந்த உலகத்தில் தான் தான் தேடிய நன்மை என்பது இந்த சிறுவர் இல்லங்களின் உயர்ச்சிக்கு அயராது உழைப்பது.

தாயும், தந்தையும் தன் பிள்ளைகளின் வருகையையும், சிறப்புக்களையும் எதிர்பார்த்து வாழும் இக்காலத்தில் தங்களை யார் பார்ப்பது, யார் உதவுவது, நன்மை தீமைகளில் பங்கெடுப்படு யார் என்று ஏங்கும் இச் சிறுவர்களுக்கு கைகொடுத்து, ஆதரவு கொடுத்து வளர்ப்பதென்பது ஒரு இலகுவான காரியமல்ல. இந்த வகையில் சமூகத்திற்கு உதவுபவர்களாக உருவாக்குவது இந்த இல்லங்களே என்பதை நினைக்கும் போது இதன் பேறு என்னவென்று சொல்ல முடியாது. இந்த வகையில் இந்தச் சிறுவர்களை வளர்த்து சமூகத்திற்கு விடுகின்ற பொறுப்பை ஏற்றவர்களை எத்தகைய பெருமைவாய்ந்தவர்கள் என்று கூறவேண்டும்.

மனிதர்கள் பெறுமானம் மிக்கவர்கள் என்று கூறப்படுகின்றது. ஏனைய படைப்புக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அக்கூற்று சரியானதே "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்கிறார் வள்ளுவர் பெருந்தகை. பிறப்பினால் மனிதர்களிடையே பேதங்களோ, வேற்றுமைகளோ இல்லை. எல்லோரும் சமம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே. இந்நிலையில் மனிதனின் பதவி, அந்தஸ்த்து, சமூகநிலை, புகழ், கீர்த்தி, அறிவுநிலை, பொருள்நிலை, ஒழுக்கம் போன்றவற்றைப் பொறுத்து மனிதர்களின் மதிப்பும், பெறுமானமும் ஆளுக்காள் வேறுபடுகின்றன. இந்நிலையில் எந்த உறவும், எந்த பாசமும் இல்லாது காணப்படுகின்ற சிறுவர்களுக்கு அரணாக விளங்கும் சிறுவரில்லம் சமூகத்தில் இவற்றை பெற்றவர்கள்போல் விளங்க உதவி புரிகின்றது. இல்லாவிடில் அவர்களது எதிர்காலவாழ்க்கை தாமரை இலையில் தண்ணீர்போல் தத்தளித்துவிடும்.

எல்லோருமே காலையில் தொழில் நிமிர்த்தமாகவோ, படிப்பு நிமிர்த்தமாகவோ வெளியே சென்று மாலையில் வீடு திரும்புவார்கள். சிலர் நேரம் கழித்து வீடு திரும்புபவர்கள் ஆக உள்ளனர். ஒருவரையொருவர் கண்கானிக்கவோ, ஆலோசனைகள், புத்திமதிகளை பரிமாறிக்கொள்ளவோ அவகாசமில்லை. பிள்ளைகள் புத்தககங்களுடன் பாடசாலைக்கும், பிரத்தியேக வகுப்புக்களுக்கும் படிப்பதற்கென்று செல்கின்றார்கள். அவர்கள் உண்மையில் பாடசாலைக்குத்தான் செல்கின்றார்களா அல்லது வேறெங்காவது சென்று பொழுதைக் கழிக்கின்றார்களா? என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம். நிலைமை முற்றி பிரச்சினையாக வரும்போதுதான் பெற்றோருக்குத் தெரியவருகின்றது. பெற்றோர் முழிக்கின்றார்கள், வேதனைப்படுகிறார்கள். இவ்வாறான செயற்பாடுகளுக்கு அப்பால் இந்த இளம் சிறார்களை வளர்க்கவேண்டிய பொறுப்பை சிறுவரில்லங்கள் பொறுப்புடன் நடாத்துகின்ற செயலைப் பார்க்கும்போது சமூகத்தில் எத்தகைய பெரும் சுமையை தன் தலையில் வைத்துள்ளது என்பதை சமூகம் உணரவேண்டும். எதையும் தட்டிக்கேட்கின்ற குடும்ப அங்கத்தவர்கள் நிறைந்த குடும்பங்களிலும் சில தவறுகள் சிலவேளைகளில் ஏற்படுகின்றது. இந்த வகையில் இந்தச் சிறார்களை வளர்த்து சமூகத்திற்கு விடுகின்ற பொறுப்பை ஏற்றவர்கள் எத்தகைய பெருமை வாய்ந்தவர்கள் என்று கூறவேண்டும்.

"உலகத்திலேயே, சிறப்பாக வாழ்வதற்கு சிறப்பான இடம் எது?" என வினா எழுப்புவதற்கு கூறக்கூடிய விடை - "எங்கே நேரத்திற்கு மதிப்பு கொடுக்கப்படுகின்றதோ அந்த இடம்தான் வசிப்பதற்கு நேர்த்தியான இடம்". என்று துணிந்து விடைகூறலாம். நேரத்திற்கு விளித்தெழுதல், நேரத்திற்கு உடற்பயிற்சி செய்தல், நேரத்திற்கு உணவருந்துதல், நேரத்திற்கு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பல விடயங்கள் நேரத்துடன் தொடர்புபடுத்தி செய்கின்ற ஒழுங்குகள் இந்தச் சிறுவர் இல்லங்களிலே கடைப்பிடிப்பதால் அவர்கள் சமூகத்திற்கு ஒரு முன்மாதிரியாக வருபவர்களாக மாறுகின்றார்கள். இதனால் சமூக நற்பிரஜைகளில் உள்வாங்குவதாக அமைகின்றது.

சமூகத்தில் நல்லவையும் உண்டு, தீயவையும் உண்டு பாலையும் நீரையும் கலந்து வைத்தால் நீரைவிட்டு பாலை மாத்திரம் பருகக்கூடிய ஆற்றல் அன்னப்பட்சிக்கு உண்டு என்று கூறுபவர் உத்தமமான மாணாக்கர். அன்னப்பட்சியைப் போன்றவர்கள் அவ்வாறே சமூகத்திலுள்ள தீயவற்றை விலக்கிக்கொள்ளவும், நல்லவற்றை மாத்திரம் தம்மோடு அணைத்துக்கொள்ளவும் நமக்குத் தெரிந்து கொள்வது அவசியம். இதற்கு சிறுவயதிலிருந்தே விழுமியங்கள் சார்ந்த கல்வியை பிள்ளைகள் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் நல்க வேண்டும். நல்லது, தீயது என்பதை பிரித்தறியும் இயல்பும் மக்களிடையே வளரவேண்டும். இதற்கு ஒப்பாக சிறுபராயத்திலிருந்து இளம் சிறார்களுக்கு இவ்வகையான உணர்வுகளை ஏற்படுத்துகின்ற களமாக சிறுவர் இல்லங்கள் அமைந்து அவர்களின் வாழ்வை செம்மைப்படுத்துவதாக அமைகின்றது.

சிறுவர் இல்லங்கள் நல்ல முறையில் பராமரிப்பதால் அங்கு வாழும் குழந்தைகள் சிறப்போடுவாழ வழிவகுக்கின்றது. அவர்களை நல்லதொரு சமூதாயத்திலே சேர்த்துவிடுகின்ற பொறுப்பு நல்ல உள்ளங்கள் படைத்தவர்களின் கையிலே உண்டு. **"பிறர் பிள்ளை தலைதடவ தன் பிள்ளை தானே வளரும்"** என்பதற்கு ஒப்பாக இந்தச் சேவை செய்கின்ற உள்ளங்கள் இவ்வுலகிலே பெரும் மகத்துவத்தை அடைகின்றனர். எம் மனதில் தோன்றுகின்ற எண்ணம் எமது உடலை மட்டுமன்றி, எமது சுற்றாடலில் வாழுகின்ற, வளருகின்ற, பிறவற்றையும் ஆட்சிசெய்கின்றது. அதனால்தான் எமது மனதில் நல்ல எண்ணங்கள் உருவாகவேண்டும். அப்போதுதான் நல்லவற்றை பார்க்கமுடியும். ஒரு தாயானவள் தன் குழந்தைக்கு பாலூட்டும்போதும், உணவூட்டும்போதும் அவளது முழுமையான எண்ணங்கள் அக்குழந்தையின் வளர்ச்சி பற்றியதாகவே இருக்கின்றன. அதனால் அவை சமிபாடு அடைகின்றன. குழந்தையை குளிப்பாட்டும்போதும் அன்னையானவள் 'வளர்க, வளர்க, நல்லாய் வளர்க' என்று வார்த்தைகளை சொல்லிக்கொண்டு தன் குழந்தையின் உடம்பிலே தண்ணீரை வார்க்கின்றாள். இப்படி ஒவ்வொரு செயல்களையும் நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக மங்களகரமான வார்த்தைகளை கூறியே தன் குழந்தையை வளர்க்கின்றாள். இதன் பயனாக தன் குழந்தை ஆரோக்கிய, உடல் வளர்ச்சியோடும், ஆளுமை வளர்ச்சியோடும் வளர்கின்றது. ஆகையில் சிறுவர் இல்லங்களில் வளரும் சிறார்களுக்கு சமூகத்தில் நற்பார்வைகளும், நல்வார்த்தைகளும், நல்லுதவிகளும் கிடைக்கின்றபோது சமூகத்தில் நல்முத்துக்களாக விளங்குவர்.

***திரு. சி. அருளம்பலம் B.A.***
*அதிபர் இ.கி.மி. பாடசாலை,*
*வீரமுனை.*

## தெரிந்து கொள்ளுங்கள்.

| ***சிகரம்*** | | ***அமைந்துள்ள இடம்*** | ***உயரம்*** |
|---|---|---|---|
| எவரெஸ்ட் | - | நேபாளம் | - 8848M |
| காட்வின் | - | இந்தியா | - 8611M |
| கஞ்சன்ஜங்க | - | நேபாளம் | - 8126M |
| அன்னபூர்ணா | - | நேபாளம் | - 8078M |
| நந்தாதேவி | - | இந்தியா | - 7817M |
| திரிச்மிர் | - | பாகிஸ்தான் | - 7700M |
| மின்யாகொங்கா | - | சீனா | - 7590M |
| முஸ்தாக் | - | சீனா | - 7434M |

உலகின் மிகப்பெரிய துறைமுகம் - ***சிங்கப்பூர்***

கடலின் ஆழத்தை அளக்க பயன்படுத்தப்படும் கருவி - ***பாதோ மீற்றர்*** (Fatho meter)

"என் உண்மை" என்ற சுயசரிதையை எழுதியவர் - ***இந்திராகாந்தி***

மிக ஆழமான குகை உள்ள இடம் - ***பிரான்ஸ்*** (1455M)


ஆப்கானிஸ்தான் நாட்டின் நாடாளுமன்றத்தின் பெயர் - ***ஷோரா*** (Shora)

***க. சாந்தன்,***
*இல்ல மாணவன்,*
*தரம் - 05.*

# இல்லம் பெற்றுக்கொண்ட அன்பளிப்புக்களில் சிலவை....




100 கதிரைகளை வங்கி முகாமையாளர் மு. கருணாகரம் வழங்கியபோது...



இல்லச்சிறார்களுக்கு துணிகளை விபுலானந்தா மாணவர் இல்லம் வழங்கியபோது..




முன்னாள் சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் எம்.எம். நஸீர் அவர்கள் மாணவர்களுக்கு சமூர்த்தி முத்திரை வழங்கியபோது..



25 கதிரைகளை கல்முனை LIONS CLUB வழங்கியது...




வெற்சீட், தலையணையுறைகளை கல்முனை ROTARY CLUB வழங்கியது..



மாணவர்களுக்கான துணிகளை காரைதீவு VSC அமைப்பினர் வழங்கியபோது..



சுவாமி தந்திரதேவா அவர்களூடாக USAID நிறுவனத்தினால் புதிய கட்டிடம் அன்பளிப்பு செய்யப்பட்டபோது...



குருமண்வெளி திருச்செல்வம் போடியார் ஊடாக லண்டன் டாக்கடர் சுந்தரலிங்கம் அவர்களால் முச்சக்கரவண்டி அன்பளிப்பு செய்யப்பட்டபோது.



கணனி அன்பளிப்பு - G. சிவராம் (INOVETEC NETWORK SYSTEMS (Pvt) LTD.)



உழவு இயந்திர அன்பளிப்பு - அம்பாறை மாவட்ட விபுலானந்தா புனர்வாழ்வுக் கழகம் ADVRO (இலண்டன்).



**ஓவியம்**
**க. விஜயகுமார்,**
இல்ல மாணவன்,
தரம் - 03

# சிறுவர் உரிமை என்றால் என்ன?

இலங்கையிலே மனித உரிமை மீறல்களிலேயே மிகவும் பாதிக்கப்பட்வர்களில் சிறுவர்களும் அடங்குவர். சிறுவர் மீதான வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர்களை வேலைக்கமர்த்தல், போன்றவையும் அடங்கும். பாடசாலைக்குச் செல்லும் வயதில் வீட்டு வேலைக்கு அமர்த்தப்படுவதும், ஓடி விளையாட வேண்டிய வயதில் தடுக்கப்படுவதும் என சிறுவர் உரிமைகள் தடை செய்யப்படுகின்றன. சில பாமர மக்களுக்கும் சரி, படித்த மக்களுக்கும் சரி தங்களுடைய உரிமை என்ன என்ற தெளிவு இல்லை. இதில் சிறுவர்களின் உரிமைகளைப் பற்றி எங்கே சிந்திக்கப்போகின்றார்கள்.

எதிர்கால உலகம் இன்றைய சிறுவர்களில் தங்கியுள்ளதால் ஒவ்வொருவரும் சிறுவர்களின் நலனில் அக்கறை கொண்டிருப்பது அவசியம். சர்வதேச ரீதியாக 1924ம் ஆண்டு ஜெனிவா சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்டபோதும் அது நடைமுறை படுத்தப்படவில்லை. இதன் பின்னர் 1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அனைத்துலக மனித உரிமை பிரகடனம் உருவாக்கப்பட்டது. இப்பிரகடனத்தில் உருவாக்கப்பட்ட ஏற்பாடுகள் போதியனவாகக் காணப்படாமையினால் 1959ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்டது. மேலும் இச் சிறுவர் சமவாயத்தை 1991ம் ஆண்டு இலங்கை பயனுறச் செய்வதற்காக சிறுவர் உரிமைப் பட்டயம் என்பதனை உருவாக்கியது.

**சிறுவர் உரிமைகள் தொடர்பான இலங்கைச் சட்டங்கள்**

1. குற்றவியல் கோவை
2. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரச்சபைச் சட்டம்.
3. பராமரிப்புச் சட்டம்
4. சிறுவர் இளம் பராயத்தவர் பெண்கள் தொழிற்சட்டம்.
5. தொழிற்சாலை கட்டளைச் சட்டம்.
6. சிறுவர் இளம்பராயத்தவர் சட்டம்.
7. வேலையாட்கள் விசேட பாசைகள் சட்டம்.
8. தொழிலாளர் நட்டஈடு கட்டளைச் சட்டம்.
9. ஆபாச வெளியீடுகள் சட்டம்.
10. சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம்.
11. சிறுவர் இளம் பராயத்தவர் (தீங்கு மிக்க வெளியீடுகள்.)

**யாரைச் சிறுவர்கள் என்கின்றோம்?**

சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தில் 18 வயதுக்ககுட்பட்ட அனைத்து மனித பிறவிகளும் சிறுவர் என வரையறுக்கின்றது அத்துடன் இச் சமவாயம் ஒவ்வொரு நாடும் தமது நாட்டில் வெவ்வேறான வயதெல்லையில் வைத்திருப்பதற்கு அனுமதிக்கின்றது. இதேவேளை உறுப்புரை 38 இன் 15 வயதிற்குட்பட்டவர்களை சண்டையில் நேரடியாக பங்கு கொள்ளாதிருப்பதை அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும் என ஏற்பாடு செய்கின்றது. இதே போல இலங்கைச் சட்டங்களிலும் வெவ்வேறான வயதெல்லை வெவ்வேறான சட்டங்களில் கடைப்பிடிக்கப்படுகின்றது.

வேலையாட்கள் விசேட படிகள் சட்டத்தில் 16 வயதிற்குட்பட்ட ஆண்களையும், 15 வயதிற்குட்பட்ட பெண்களையும் சிறுவர்கள் என கருதுகின்றது. இவையனைத்தும் சட்டத்தின் நோக்கத்தின் அடிப்படையில் சிறுவர்களை வரையறை செய்கின்றன. இதைவிட இளம் பராயத்தவர் என்ற பகுதியினரும் காணப்படுகின்றனர். அவர்களுள்,

01. சிறுவர் இளம் பராயத்தவர் பெண்கள் தொழிற்சட்டம்.
02. தொழிற்சாலைச்சட்டம் என்பவற்றில் 14 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இளம் பராயத்தவர்.
03. சிறுவர் இளம் பராயத்தவர் கட்டளைச் சட்டம்.
04. சிறுவர் இளம் பராயத்தவர் சட்டம் என்பவற்றில் 14 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்டவர் இளம் பராயத்தவர்.

தொழிற்துறை எனும்போது கைத்தொழிற்துறை, வீதி வியாபாரத்தில் ஈடுபடுதல், கடை மற்றும் காரியாலயம், பெருந்தோட்டத்துறை வேலை, களியாட்டத்தில் பங்குபற்றல், போன்றவற்றில் 14 வயதிற்கு கீழ்ப்பட்ட சிறுவர்களை ஈடுபடுத்த முடியாது. அதேபோல் இரவு வேலை, வாழ்க்கைக்கு ஆபத்தான தொழில் கடற்றொழில் அல்லது கப்பல் தொழிலில் ஈடுபடுவதற்கு 18 வயதிற்கு கீழ்பபட்ட சிறுவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. ஆகக் குறைந்த வயதெல்லைக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கமர்த்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

சிறுவர்களைக் கொடுமைப் படுத்துபவர்களுக்கு சட்டப்படி தண்டனை வழங்கப்படும். 12 வயதிற்குட்பட்ட சிறுவரை பெற்றோர் அல்லது ஆபத்திற்கு உள்ளாக்குபவர்களுக்கு குற்றவியல் கோவை பிரிவு 308 இன்படி 7 வருடங்களுக்கு மேற்படாத சிறை அல்லது தண்டம் அல்லது இரண்டும் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களை பெற்றோர் அல்லது பாதுகாவலர் தாக்குதல் அல்லது கைவிடும் பட்சத்தில் பிரிவு 308 இன்படி ஆகக் குறைந்தது 2 வருட சிறை. கூடியது 10 வருட சிறை அத்துடன் தண்டமும், நட்டஈடும் வழங்கப்படும்.

மேற்படி கொடுமைப்படுத்தல் தொடர்பில் நீதவான் நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் கிடையாது. மேல் நீதி மன்றுக்கே நியாயாதிக்கம் உண்டு. பொலிஸார் விசாரணையைச் செய்து அறிக்கையைச் சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்தால் மேல் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்குத் தொடுக்கலாம்.

பாலியல் துஷ்பிரயோகம் புரிபவர்களுக்கு சட்டத்தில் உள்ள தண்டனைக்கோவை பற்றி அறிவோமாயின் சிறுவர்கள் ஆபாசப் படங்களில் தோன்றக் காரணமாக இருப்பது, அத்தகைய படங்களை வைத்திருப்பவர்களுக்கு குற்றவியல் கோவை பிரிவு 286 அ (1) இன்படி ஆகக்குறைந்தது 2 வருட சிறைத்தண்டனை. கூடியது 10 வருட சிறை அத்துடன் நட்டஈடும்.

ஆபாசப் புகைப்படங்களை கழுபுவர்கள் அத்தகைய ஆபாசப் படங்களைக் கண்டால் பொலிசுக்கு அறிவிக்கத்தவறும் பட்சத்தில் குற்றவியல் கோவை பிரிவு 286அ (2) இன்படி 2 வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை வழங்கப்படும். இவ்வாறான செயல்கள் சிறுவர் மனதைப் புண்படுத்தும் விடயங்களாகும்.

சில நபர் இப்பாலியல் துஷ்பிரயோகத்திற்கு தூண்டிவிட்டு துன்புறுத்துகின்றனர். இதனால் சில சிறுவர்கள் மரணிக்கும் சந்தர்ப்பமும் நிறையவே உள்ளன. சிறுவர் உரிமை என்ற வகையில் சிறுவர்கள் செய்யும் செயல்கள் எல்லாம் அப்படியான நபர்களுக்குப் பிடிப்பதில்லை. சிறுவர்களை பாடசாலைக்கு செல்லும் வேளையில் இப்படியான வார்த்தைகளைக் கூறி சிறுவர்களின் மனதில் எண்ணத்தை வரவளைத்து சிறுவர் மனதை மாற்றுகின்றனர். இதனால் பெற்றோர் கஸ்ரப்படுகின்றனர். சில சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கு மறுக்கின்றனர்.

குற்றவியல் குற்றம் நிருபிக்கப்படுவதற்கு குற்றமனம் தடுக்கப்பட்ட செயல் இரண்டு ஒருமித்துக் காணப்படவேண்டும். ஏதேனும் ஒரு செயலுக்காக 8 வயதிற்குட்பட்ட சிறுவருக்கு குற்றமனம் காணப்படமாட்டாது என்பதனால் நீதி மன்றத்தால் தண்டிக்கப்படமாட்டார். குற்றம் புரிந்த சிறுவன் தொடர்பான ஏற்பாட்டை சிறுவர் இளம் பராயத்தவர் கட்டளைச் சட்டம் கொண்டுள்ளது.

இச்சட்டத்தின் படி வயது வந்தவர் தொடர்புடைய வழக்கில் சிறுவர் குற்றவாளியாகக் காணப்பட்டு தண்டப்பணம் செலுத்தும்படி நீதி மன்று கட்டளையின்படி பெற்றோர் அதனைச் செலுத்த வேண்டும். ஆயினும் பெற்றோர் காணப்படவில்லை அல்லது பெற்றோர் சிறுவர் தொடர்பில் போதிய கவனம் எடுத்துள்ளார்கள் என நீதிமன்று கருதின் அவரே தண்டம் செலுத்த வேண்டும்.

மேலும் இச்சட்டத்தின்படி சிறுவர் அக்கறை அல்லது பாதுகாப்புத் தேவையில் உள்ளார்கள். அதாவது பெற்றோர் அல்லது பாதுகாவலர் இல்லாத அல்லது அத்தகையவரின் போதுமான அக்கறையும் பாதுகாப்பையும் சிறுவர்கள் கெட்ட கூட்டத்துடன் இணைந்தால், ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபட்டால், கட்டுப்பாட்டை மீறி நடந்தால். பாரிய குற்றங்களுடன் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள் அக்கறை பாதுகாப்புத் தேவையில் உள்ளவர்கள். இவர்கள் பொலிஸாரால் நீதி மன்றம் முன் கொண்டுவரும்போது நீதிமன்றம் 12 வயதடைந்த சிறுவர் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பப்படலாம். அல்லது சிறுவரின் அக்கறையைப் பொறுப்பேற்க விரும்பும் தகுதியானவரிடம் ஒப்படைக்கலாம். அல்லது 3 வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதி சிறுவர் நன்னடத்தை அலுவலரின் மேற்பார்வையில் விடப்படலாம்.

பொதுவாக நன்னடத்தை அலுவலர் நியாயமான கால இடைவெளியில் சிறுவரைச் சென்று பார்வையிட்டு அவர்களின் நன்னடத்தை தொடர்பில் நீதிமன்றுக்கு அறிக்கை இடுவதுடன் பொருத்தமான தொழில் தேட அவசியமானபோது ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கல் வேண்டும்.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் என 1998 ஆம் ஆண்டு 50ம் இலக்க சட்டத்தின் வாயிலாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உருவாக்கப்பட்டது. இதன் பணிகளாவன...

01. சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு அரசுக்கு அலோசனை வழங்கல்.
02. சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான தேசிய கொள்கைக்கேற்ப சட்ட நிர்வாக சிபாரிசுகளை முன்வைத்தல்.
03. சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு சமுதாயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்

இலங்கையிலேயே சிறுவர் மீதான துஷ்பிரயோகங்களுக்கு சட்டப்படி தண்டனைகள் வழங்கப்படுகின்ற போதிலும் பலர் குற்றங்களைப் புரிந்துவிட்டு தப்பி விடுகின்றனர். அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது நமது கடமையாகும். எனவே நாம் சிறுவர் உரிமை என்றால் என்ன என்பதை இனங்கண்டு சிறுவர்களுக்கான உரிமைகளைப் பாதுகாப்போம்.

**த. ரமேஸ்,**
***இல்ல மாணவன்,***
*தரம் - 11.*

## Mrs.K.Lohitharajah . B.A, J.P.

# English Language

For over hundred years people have talked English as a world language. English has become the most important international language. It is partly become of history. English spread with the British Empire. It is most widely spoken second language in the world. In the 16$^{th}$ century only 05 million people spoke English. It has spread very recently. Today English is used in British Islands, Canada, U.S.A., West Indies, Guyana, Nigeria Kenya, South Africa, Pakistan, India, Srilanka, Bhutan, Malaysia, Australia and New Zealand. No doubt it's moving to be the world language.

Why is English important? It is important because it is the international Language for communication. 80 to of information stored in Computers is written in English. All around the world the airports use English For Communication then it has become the language for travel.

English is also the language for trade and business. Most lucrative jobs in international companies and organization are given to people who speak English. In Srilanka too the private sectors provide profitable job to the English educated elite.

English is learned because people need the language for education. More educational material on science, Technology, invention and discoveries are written in English. Most text books for higher education is available in English.

English language is a rich source for literature. The famous plays of Shakespeare, Ibsen and Bernard Shaw are written in English. The popular poems of words worth, William Blake, Shelly, thon Donne, Tennyson Milton, Alexander pope, and others are in English.

In many countries though they have their mother tounge education the medium of instruction for university education in English. It is mostly needed for the students of medicine and Engineering.

Now a days pop Songs and other Forms mans entertainment encourage the spread of English. For example the records of the popular songster Michal Jackson have sold over 30 million copies. the CDs of the song ' Candle in the wind' song by Elton John at the death of the British crown princess Diana has sold out a lot.

We also need English to contact our teachers and friends in the college. We need it to read stories for enjoyment to watch films and T.V., to listen to English radio programmes, to read English news paper, to pass exams to know about other countries and cultures to teach primary children, to listen to English news on the radio, to write to friends and relatives abroad to use a computer to travel abroad and face interviews.

In Sri lanka English language plays an important role. With on- going ethnic war we all neglect learning Tamil or Shinhala. There is no proper communication between Tamil and Shinhala people. Language is a barrier for both sectors. English being a link language can bring about an understanding between these communities. Hence we need to talk our Shinhalese and Tamils, in English. Ethnic peace can be attained by English. Then English plays an important role in our lives.

For you and me, there are many reasons to learn English. In the event of Tsunami we find lot of foreign N.G..Os working on rehabilitation programmes in Sri lanka. Now and then we come in contact with them. In the context of tourist we need to speak them in English. English education gives people a sort of personality that can carry them forward in to the modern world.

As the teachers of English we have great commitment towards our pupils. We should help our children to learn the language to promote a peaceful, efficient and happy life in Sri lanka. As English is said to be the window of the world the student should be given an opportunity to explore the world through English education

Mrs.K.Lohitharajah . B.A, J.P.,
*Rtd.A.D.E. English.*

## அன்னை.........

அன்பு காட்டும் அன்னை – என்னை
அணைத்துக் காக்கும் அன்னை
துன்பம் வந்தபோதும் – எம்மைத்
துடிக்க வைக்கா அன்னை

இன்பம் எங்கள் வீட்டை
ஏகிவராப் போதும்
அன்பு காட்டும் அன்னை – அவள்
ஆயிரத்துள் தெய்வம்

தந்தை தமர்கள் சேர்ந்து – இத்
தாரணியின் மீது கொடு
வீந்தை செய்த போதும் – எமை
வீட்டுபிரியாத அன்னை

ஆசைமிக்க அன்னை – எம்மில்
அன்பு காட்டும் அன்னை – எமக்கு
ஏதும் நேர்ந்து விட்டால் – எமை
என்றும் காக்கும் அன்னை

***த. தசிதரன்***
இல்ல மாணவன்,
தரம்-11.

*செல்லையா பேரின்பராசா*

ஆசிரியர், ஊடகவியலாளர்,

அகில இலங்கை சமாதான நீதிபதி,

## *வீரமுனையில் சிறுவர் இல்லத்தின் உதயமும் அதனை அண்டியுள்ள மாணவர்கள் பெற்றநன்மைகளும்*

எண்ண எண்ண இனிக்கும் செயலை எவர் செய்கின்றாரோ அவரை விண்ணைத் தொடுமளவிற்கு புகழ்ந்துரைக்க வேண்டும் என்பது எனது அவா. இந்த வகையில் காலத்தின் தேவை அறிந்து கனதியான சமூகப்பெறுமானம் மிக்க சேமநலப்பணியாற்றிவரும் வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்லத்தின் பணியினை வியந்து பாராட்டுவதையிட்டு மட்டில்லா மகிழ்வு கொள்கின்றேன்.

மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட போர் அனர்த்தம் உள்ளிட்ட இதர காரணத்தினால் எம் மத்தியில் ஆதரவற்ற சிறார்களின் எண்ணிக்கை தினமும் பெருகிக் கொண்டே செல்வது கண்கூடு.

மனிதர்களை மனிதராக்கவும் கல்வி இல்லாத வாழ்வு இருளில் இருப்பதற்கு நிகரானது என்பதை உணர்த்தவும் உதயமானவைதான் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் என்று கூற முடியும்.

இந்நிலையில் அன்று இந்துக்களின் மத்தியில் ஸ்ரீ இராமகிருஸ்ண மிஷன் தன்னால் இயன்ற பங்களிப்பை செய்து ஆதரவற்ற சிறார்களின் நலன் பேணி வந்தது. அது இன்றும் தொடர்கின்றது. ஆயினும் இப்பணியினை மேற்கொள்ளும் மிஷனின் கொள்ளவை தாங்க முடியாத அளவிற்கு ஆதரவற்ற சிறார்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்த வண்ணமுள்ளதை யாவரும் அறிவோம்.

இந்நிலையில் காலத்தின் தேவை அறிந்து யார் கருமமாற்ற முற்படுகின்றார்களோ அவர்களின் நாமம் வரலாற்றில் தடம் பதிக்கும் என்பது உலகறிந்த உண்மை. இந்தவையில் வீரமுனை கிராமத்திலுள்ள இளைஞர் குழாம் இவ்வூரில் உள்ள சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய அறங்காவல் சபையின் உதவியினைப் பெற்று ஆதரவற்ற சிறார்களைப் பராமரித்து கல்வி ஞானத்தை அள்ளி அளிக்கும் அறப்பணியில் கால் பதித்து ஐந்து ஆண்டுகள் நிறைவு பெற்றதென்பது சாதாரண விடயமல்ல.

அதிக இலைகளைக் கொண்ட மரத்தில் காய்கள் குறைவாகவே கிடைக்கும். தற்பெருமையும், தலைக்கனமும் கொண்ட ஒரு பகுதியினர் தீக்குச்சி போன்று அளிவதை எம்மால் காண முடிகிறது. ஆனால் இவற்றுக்கு மாறாக மனிதாபிமானம் மிக்க இளைஞர் குழாம் ஒன்று வீரமுனை மண்ணில் விருட்சமாக உள்ளமை வியப்பில் ஆழ்த்தும் விடயமாகும்.

இந்த இளைஞர் குழாம் பற்றி துதிப்பாட நான் முற்படவில்லை. மாறாக "செய் அல்லது செத்துமடி" என்ற நெப்போலியனின் கூற்றுக்கு உயிர் கொடுக்கின்ற உன்னதமான பணியாளர்களை போன்று ஏனைய கிராமங்களிலும் மனிதாபிமானிகள் உருவாக வேண்டும் என்பதே எனது தயவான வேண்டுகோள்.

சோழ நாட்டு இளவரசி சீர்பாததேவியின் சிறப்புகள் பற்றியும் சீர்பாதகுல மக்களின் மேன்மைகள் பற்றியும் கலை மாமேதை, இலக்கிய தீபம் அமரர் அருள் செல்வநாயகம் ஐயா ஆய்வுக்கட்டுரை வரைந்தார். இது நூலுருப்பெற்றது. ஆயினும் சீர்பாததேவியின் நாமத்தை சதா உச்சரிக்கவும், இத்தேவியின் சிலையை கண்ணுற்றுக் கொள்ளவும் உள்ள ஒரே இடமாக சீர்பாததேவி சிறுவர் இல்லம் உள்ளமை சிறப்புக்குரிய விடயமாகும்.

இன்றைய காலத்தில் எம் மத்தியில் வாழ்பவர்களில் ஏராளமானோர் - தானும் தன் குடும்பமும் என்ற நிலையில் தமது வாழ்வியலை ஓட்டுவதை நாம் காணலாம். ஆனால் இவற்றிலிருந்து மாறுபட்ட விதத்தில் தூர நோக்குடைய சமுதாயப் பார்வையுடன் “கல்விப்பணி அறப்பணி அதற்கு உனை அர்ப்பணி” என்ற உயரிய சிந்தையுடன் சகோதரர் பொறியியலாளர் தா.வினாயகமூர்த்தியும் அவரது நண்பர்களும் ஆற்றுகின்ற சேவை அளப்பெரியது. காலத்தால் அழியாதது.

பறவைக் குஞ்சுகள் சிறகு முளைத்து விட்டால் தான் வாழ்ந்த கூட்டை மறந்து பறந்து விடும் இது உலக நியதி. ஆனால் பல்வேறுபட்ட இன்னல்கள் இடர்பாடுகள் வந்த போதிலும் தலை நிமிர்ந்து வாழும் மக்கள் வீரமுனை மக்கள் என்பதில் மட்டில்லா மகிழ்வு கொள்பவர்களில் நானும் ஒருவன்.

ஒரு குடும்பத்தைக் கொண்டு நடாத்துவது என்பது இன்றைய நிலையில் பாரிய கஷ்டம் என்பதை நாம் அறிவோம். ஆனால் பல குடும்பங்களில் உள்ள சிறார்களை ஒன்று கூட்டி அவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளையும் கல்வித் தேவைகளையும் அளிப்பது என்பது கடினமான காரியமாகும். இத்தகைய கடின பணியினை வியர்வை சிந்தி தியாக நோக்குடன் ஒளி விளக்குகளாக இருந்து அாப்பணிப்புடன் பணியாற்றும் இவ்வில்ல நிர்வாகிகளை வாழ்த்த என்னிடம் வார்த்தைகள் போதாது.

இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்னர் தகப்பனை இழந்த மாணவன் ஒருவரை ஆதரவற்ற சிறார்களைப் பராமரிக்கும் இல்லம் ஒன்றில் இணைத்துவிட நான் எடுத்த முயற்சியும், ஏறிய படிகளும் ஏராளம். ஈற்றில் எனது முயற்சி தோல்வியில் முடிந்தது. குறித்த மாணவனோ தன்னிடம் திறமை இருந்தும் வாய்ப்பு கிட்டாமையினால் வழி தவறிச் சென்றமை என்னை வாட்டும் சம்பவங்களுள் ஒன்று. இந் நிலையினை யார் மாற்றி அமைப்பார் என்று எண்ணியவர்களுள் நானும் ஒருவன். இவ் வேளையில் இன்று மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் பல சிறுவர் இல்லங்கள் உதயமாகி தொழிற்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் சிறுவர் இல்லம் ஒன்றை பராமரிக்கின்ற பணிப்பாளர் சபையில் முக்கிய இடம் பிடித்த நபர் ஒருவர் ஆதரவற்ற சிறார்களுக்கு நிதியினை ஏப்பம் விட்டமையும், இன்று அந்த இல்லம் வேறு பிரமுகர்களால் சிறப்புற இயங்குவதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். ஏன் இவ்விடயத்தை சுட்டிக் காட்டினேன் என்றால் இத்தகைய பாவிகளின் முகத்திரையை கிழித்து அவர்களையும் அம்பலப்படுத்த வேண்டும்.

வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்லமானது தூய மனம் படைத்த தியாகிகளின் உழைப்பால் உயர்ந்து நிற்கும் இல்லம். இவ் இல்லத்தில் பல மாணவர்களைச் சேர்த்து இன்று அவர்கள் சிறப்பாக உள்ளதைக் கண்டு எனக்குள் பெருமை அடைகின்றேன். மண் வீட்டில் வாழும் குழந்தைகளை கல்வி எனும் மாடி வீட்டில் வாழ வைக்கும் பணியினை செய்பவர்களை ஆதரிக்கவும் அன்பு காட்டவும் நாம் பின்னிற்கக் கூடாது.

இவற்றுக்கு மேலாக இவ் இல்ல நிர்வாகிகள் இவ்வில்லத்தினை நாடிவரும் மனிதர்களை உபசரிக்கும் பாங்கு அலாதியானது. ஒருவன் எவ்வளவுதான் அழகு மிக்கோனாக இருந்தாலும் சரி, அறிவு மிக்கோனாக இருந்தாலும் சரி, செல்வம் உள்ளவனாக இருந்தாலும் சரி, மனிதர்களை வரவேற்று உபசரிப்பதில் இனிமையுடன் நடந்துகொள்ள வில்லையாயின் அவனால் மக்களின் அன்பை ஒரு போதும் பெற முடியாது. இந்த வகையில் இவ் இல்ல நிர்வாகிகள் மக்களை உபசரிக்கும் பாங்கானது

"எவரையும் தொழுது சால இனிய வாசகம் உரைத்து
கவர் மனம் விட்டெழுந்து கைகொடுத் துபசரித்துத்
தவமும் சாந்தமும் முற்பேசித் தனித்திடா தனுப்புவோரே
புவிதனில் சான்றோர் தம்முள் புண்ணிய புருடராமே."

என்று சாமுத்திரிகா லட்சண நூலில் எடுத்துரைக்கப்பட்டது போன்றுள்ளது.

ஈற்றில் போர் அனர்த்தம் வேறு காரணங்களால் சிறுவர்கள் ஆதரவற்றவர்களாக மாறும் நிலை மாற வேண்டும். என்ற பிரார்த்தனையோடு தூய நற்பணியாற்றும் வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்லத்தின் அறப்பணி மேலோங்க வாழ்த்தி வணங்குகின்றேன்.

13/11/2008

***செல்லையா பேரின்பராசா,***
ஆசிரியர், ஊடகவியலாளர்,
அகில இலங்கை சமாதான நீதிபதி,
துறைநீலாவணை

## நூல்களும் அதனை எழுதியவர்களும்

| | | |
|---|---|---|
| பெரியபுராணம் | - | சேக்கிழார் |
| நளவெண்பா | - | புகழேந்திப்புலவர் |
| தொல்காப்பியம் | - | தொல்காப்பியர் |
| கொன்றைவேந்தன் | - | ஔவையார் |
| மகாபாரதம் | - | வியாசர் |
| பாஞ்சாலிசபதம் | - | பாரதியார் |
| சத்தியசோதனை | - | மகாத்மாகாந்தி |
| அர்த்தசாஸ்த்திரம் | - | கௌடில்லியர் |
| திருப்புகழ் | - | அருணகிரிநாதர் |
| சகுந்தலைவெண்பா | - | நடேசபிள்ளை |
| சிலப்பதிகாரம் | - | இளங்கோவடிகள் |
| மணிமேகலை | - | சீழ்தலைச்சாத்தனார் |
| சீவகசிந்தாமணி | - | திருத்தக்கதேவர் |
| ஆசியஜோதி | - | எட்வின் ஆர் நெல்ட் |
| கந்தபுராணம் | - | கச்சியப்பர் |

## உலகில் மிகப்பெரியவை

| | | |
|---|---|---|
| தீவு | - | கிறீன்லாந்து |
| மலை | - | எவரெஸ்ட் |
| கடல் | - | தென்சீனக்கடல் |
| விரிகுடா | - | கட்சன் |
| காடு | - | கனிப்ரோஸ் |
| ஜனநாயகநாடு | - | இந்தியா |
| நூலகம் | - | அமெரிக்ககாங்கிரஸ் |
| கண்டம் | - | ஆசியா |
| வங்கி | - | அமெரிக்கவங்கி |
| நீர்வீழ்ச்சி | - | கிழக்கு வெனிசுலா |

***க. காந்தன்***
***இல்ல மாணவன்,***
***தரம் - 08.***

## இல்லத்தின் பன்முகப்படுத்தப்பட்ட வெளிக்களச் சேவைகளில் சில.....

அம்பாறை பிள்ளையார் கோயிலில் வழங்கப்பட்ட தாகசாந்தியின் போது...





வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கரடியனாறு மக்களுக்கு வெள்ளநிவாரணம் வழங்கியது....

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பெரியகல்லாறு மக்களுக்கு நிவாரணம் கொண்டு சென்றபோது..








யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட
படுவான்கரை மக்களுக்கு
உணவு வழங்கியது....




இல்லத்தினால் நடாத்தப்படும்
குருசுவாமி ஐயர் அறநெறி
பாடசாலையின் பரிசளிப்பு விழா



## காந்தித் தாத்தா

காந்தித் தாத்தா நம் தாத்தா
கருணைமிக்க பெருந் தாத்தா
சாந்த மூர்த்தி என்றென்றும்
சத்திய மூர்த்தி நம் தாத்தா

காலை மாலை எப்பொழுதும்
கடவுள் நினைவே கொண்டவராம்.
வேலை இன்றி சிறு பொழுதும்
வீணாய்ப் போக்க மாட்டாராம்

கண்ணிற் சிறந்த விடுதலையைக்
கருதி வாழ்ந்தார் நம் தாத்தா
மண்ணில் யாவர் வாழ்விற்கும்
வழி காட்டுவார் நம் தாத்தா

சத்யம் பேசுதல் அவர் கொள்கை
தருமம் காத்தல் அவர் கொள்கை
இத்தனை மக்கள் யாவர்க்கும்
இன்ப சுதந்திரம் அவர் கொள்கை

ர. டினேஸ்காந்தன்,
இல்ல மாணவன்,
தரம் ~ 06.

# சுற்றாடலும் சுகவாழ்வும்

காலங்களும் மாற மாற மனிதகுலமும் மாற்றங்களுக்கு உட்பட்டு வருகிறது. மனிதனது எண்ணப்பாடுகளில் ஏற்பட்ட அல்லது அவனால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கருத்துப் புரட்சியே இந்த மாற்றத்திற்கு காரணம். கருத்துப் புரட்சி மனிதனது வாழ்வியல் தடயங்களை முன்னேற்றப் பாதைநோக்கி நகர்த்திவந்தாலும் அவை மனிதனின் சில அத்திவாரமான விடயங்களை மறக்க காரணமாகவும் இருந்திருக்கிறது என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. இன்றைய மனிதனிடம் அவனது வாழ்வாதாரம் எது என்று கேட்டீர்களேயானால் 'பணம்' என்ற பதில் பட்டென்று வரும். ஆனால் அந்தப் பணத்தை உழைப்பதையும் செலவுசெய்வதையும் விட மனிதனைச்சூழ பரந்திருக்கின்ற சிறப்பான வாழ்வாதாரத்தை மனிதனால் இன்னமும் அடையாளம் கண்டு கொள்ள முடியாமை வருந்தத்தக்கதே ஆகும்.

மனிதன் தோன்றிய காலந்தொட்டு அவனது பரிநாம வளர்ச்சியிலும் கலாச்சார முன்னேற்றத்திலும் சற்றெனும் விலக்கி விடாதபடி இழந்திருப்பது முன்னேற்றத்திலும் இழைத்திருப்பது அவனது சுற்றாடலே ஆகும். மனித இனத்தின் மூலவேர் கடுகளி ஊடோடிய காலங்களில் அவனுக்கு உணவு அருந்தவும் கற்றுக்கொடுத்தது முதல் நீரோடைகளில் ஆற்றுப் படுக்கைகளிலும் அவனுக்குள் ஒழிந்திருக்கும் திறமைகளில் விவசாயம் போன்ற துறைகளில் வெளிக் கொணரவும் நகரங்களில் தோற்றுவாயாகவும் அமைந்திருந்தது. மனிதனைச் சூழவுள்ள சுற்றாடலே.

சமூகம் என்பது என்ன நாமும் நாம் சாந்திருக்கும் சூழலுமே. வெதுமன அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் அடிக்கல் நம்மை சூழ்ந்திருக்கும் சுற்றாடலே. ஆனால் துரதிஸ்டவசமாக இன்நாளைய மனிதனிடத்து அதாவது எம்மிடத்து சுற்றாடலின் மீதான கரிசனை குறைந்தே வருகின்றது. பொருளாதாரத்தின் முக்கியத்துவம் பற்றி எமக்கும் எமது எதிர்கால சந்ததியினருக்கும் அளவிற்கு சுற்றாடலின் முக்கியத்துவமே அதனை எம்மால் இயன்றளவு பாதுகாத்துக் கொள்வது குறித்தோ புகட்டப் படவில்லை என்றே சொல்ல வேண்டும். பாடசாலை சுற்றாடல் பற்றி சொல்வதாலும் மாணவர்களைக்கொண்டு மரங்களை நடுவதாலும் மட்டும் சுற்றாடலை உணர்த்தி விடமுடியாது.

இன்று பருவங்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. கோடையாகி வெயில் கொழுத்திட வேண்டிய காலத்தில் மழைபொழிகின்றது. மழையை எதிர்பார்த்து பூமி, வானம் நோக்கித் தவமிருக்கையில் மழைவராதமுகம்போல் காட்டுகின்றது. பருவமறிந்து பயிர்செய்கின்ற விவசாயிகளும் பருவம் அறியாமல் கலங்கி நிற்கின்றனர். இவைஅனைத்திற்கும் காரணம் நமது அறியாமையே. கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் ஏன் ஒவ்வொரு நிமிடமும்கூட அறிந்தோஅறியாமலோ சுற்றாடல் பாதிப்படைவதற்கு இருந்து வருகிறோம் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? நமது செயற்பாடுகளாலேயே மண், நீர், வளி என்று எமது ஆதார கேந்திரங்கள் மாசுபடுத்தப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன.

நமது சுற்றாடலை அதிரடியாக மறைமுகமாக பெருமளவில் சனத்தொகைப் பெருக்கமே அதிகரித்துவரும் சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஈடுகொடுப்பதற்காக துரிதநகரமயமாக்கல் நடவடிக்கைகள், பெருந்தெருக்கள் அமைத்தல் மற்றும் ஏராளமான கட்டிட நிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மரம் செடி கொடி போன்ற பல்வேறுவகையான தாவர இனங்கள் மனிதனின் இவ்வாறான அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்வதற்காக வேண்டி அசுர வேகத்தில் அழிக்கப்பட்டு வருகின்றன. மரங்கள் மண்ணை எவ்வாறு வளப்படுத்துகின்றன என்பதை இவர்கள் அறியாமல் உள்ளனர்.

இலங்கையின் ஒரு பகுதி காடழிப்பு நடவடிக்கையில் மிக வேகமாக மேற்கொள்ளப்பட்டாலும், நாட்டின் இன்னொரு பகுதியில் பரந்தளவிலான நிலப்பிரமாணம் எந்த வித பயன்பாட்டிற்கும் பயன்படுத்தாமல் கவனிப்பாரற்று கைவிடப்பட்டுள்ளது. நமது நாட்டை போன்றதொரு குட்டித் தீவில் இவ்வாறாக வனவளம் அழிக்கப்படுவதும், கைவிடப்படுவதும் நமது எதிர் கால சந்ததியினரின் சுற்றாடல், சுகாதாரம் போன்றவற்றின் ஆதாரசுருதியை அவசரமாக்கியிருக்கிறது என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. பெரியளவிலான கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும் போதும், நிர்மாணிக்கப்பட்ட பின்னரும் அதாவது அதன் பாவனையின் போதும் சுற்றாடல் சீர்கேட்டுக்கு அது பல புதிய காரணிகளை தோற்றுவிக்கிறது. இதற்கு பொதுமக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் வேறு தனியார் நிறுவனங்கள் போன்றவர்கள் தான் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும்.

மனிதனாகிய நாம் அனைவரும் சூழலுக்கு செய்கின்ற பிழைகளை அறிந்து இருக்க வேண்டும். நமது கிராமங்களிலே வடிகான்கள், சாக்கடை ஓடைகளும், உங்களுடைய வீட்டு கழிவு நீரும் அந்த சாக்கடைகளின் வழியாகவே கடத்தப்படக்கூடும் அப்படியாயின் உங்கள் வீட்டிலிருந்து வெளியேறும் கழிவு நீரில் குப்பைகள் மற்றும் கழிவு நீர் அகற்றும் குழாய்களை அடைக்க கூடிய கழிவுகள் அதாவது வெற்று சலவைத்தூள் பக்கற் , ஷம்போ உறைகள், சவர்க்கார உறைகள் போன்றவற்றை உரியமுறையில் அகற்றுதல் வேண்டும். கழிவு நீரின் சீரான ஓட்டத்தைப் பாதிக்க கூடிய எந்த விதமான கழிவுகளும் வெளியேற்றப்படவில்லையாயின் அதிலிருந்து துர்நாற்றம் வீசும். பின் அதில் நுண்ணங்கிகள் உற்பத்தியாகி பல தொற்று நோய்களை பரப்பும் .

மேலும் சிரமதான முறையிலோ, உங்களின் அயலவர்களினதும் ஒருமித்த பொருளாதர உத்துழைப்பாலோ உங்கள் வீட்டுக்கு அயலில் உள்ள கான்களை உரிய முறையில் துப்பரவு செய்ய வேண்டும். மூடாமல் கிடக்கும் கான்களை உரிய முறையில் மூடி விட வேண்டும். இவ்வாறு மூடாவிட்டால் தெருக்களில் போடப்படும் குப்பை கூழங்கள் தேங்கி நிற்கக் கூடிய தன்மை ஏற்படும். இவ்வாறு தேங்கி நிற்பதால் மழைக்காலங்களில் மழைநீர் வீட்டுக்கு வரக்கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படும். இவ்வாறான முறைகளை எல்லோரும் சரியாக செய்து வந்தால் உங்கள் பிரதேசங்களில் கழிவு நீர் தேங்குவதையும் அதன் மூலம் டெங்கு , சிக்குன்குன்யா , மலேரியா போன்ற நோய்கள் பரவக்கூடிய நுளம்புகள் உற்பத்தியாகும். உதாரணத்துக்கு கொழும்பு போன்ற நகரப்பகுதிகளிலே மழைபெய்கின்ற காலங்களிலே காணப்பட்ட குப்பை கூழங்கள் நீரினால் அடித்துச் செல்லப்பட்டு வீதி பூராகவும் அலங்கோலமாக காட்சியளிக்காது உரிய இடங்களில் போடப்படுகின்ற குப்பைகளை உரிய நேரத்தில் அகற்றாவிட்டால் அதனால் பாதிப்படைவது நாங்கள் தான். சில கிராமப்புறங்களில் குப்பை கூழங்கள் அகற்றப்படாமல் மலைபோலக் காட்சியளிக்கின்றது. இவ்வாறான பிரச்சனைகளுக்கு அது தொடர்பான அரச அலுவலகத்துக்கு அறியத் தருவதோடு தொடர்ந்தும் விழிப்புணர்வோடு செயற்படுவீகளே ஆனால் அத்தகைய சீர்கேடுகளை தவிர்க்கலாம். உங்கள் சுற்றாடலை ஆரோக்கியமான தாகவும், சுகாதாரமானதாகவும் வைத்துக் கொள்வதில் உங்களது பங்களிப்பே முதலானதாகவும், முக்கியமானதாகவும் கருதப்படும். ஆகையால் உங்கள் சுற்றுப்புறச் சூழல் குறித்து எந்நேரமும் விழிப்புடன் இருக்க முயற்சி செய்யுங்கள்.

தொழிற்சாலைக் கழிவுகள் உட்பட நாட்டின் சகல விதமான திண்ம, திரவக் கழிவுகளும் ஏரி, குளம், ஆறு, கடல் போன்றவற்றில் இரண்டறக் கலக்கின்றன. கடல் ஒரு மிகப்பரந்த கொள்ளளவில் அதிகூடியதொரு நீர்ப்பரப்பு என்ற விதத்தில் பல கழிவுகள் கடலுடன் சேர்கின்றன. இலங்கையைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் இவ்வாறான செயற்பாடுகளால் அநேகமான கரையோரப் பிரதேசங்களில் பல எதிர் விளைவுகளை எதிர் நோக்கக்கூடியதாயுள்ளது.

அதிகரித்துவரும் பொருளாதார வளர்ச்சியும், நவீன காலமும், ஆடம்பரவாழ்க்கை மீதான ஆசையும், வாகனக் கொள்வனவு மற்றும் அதன் பயன்பாடு அதிகரித்து விட்டது. வாகனம் ஒன்றை வாங்குவது நல்ல விடயம் ஆனாலும் அதை முறையாக முழுமையாக பயன்படுத்துவது அதைவிட முக்கியமானது. அதிலும் இலங்கை போன்றதொரு குட்டித்தீவில் அதிகரித்துவரும் வாகனப் பெருக்கம், வாகனங்களில் இருந்து வெளியேறும் காபன் கலந்த புகை முறையான அவதானமின்மையால் எதிர்பார்க்காத விபத்துக்கள் வாகன நெருக்கடி போன்ற நேரடிப் பாதிப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் சுற்றாடலுக்கு மட்டுமன்றி நாளாந்த வாழ்க்கையே பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தி வருகின்றது.

நம் நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தமும் நமது சூழலைப் பாதித்து வருவதில் பங்கு வகித்து வருகின்றது. பல்வேறு வல்லரசு நாடுகளுக்கு இடையிலான போட்டிகள் முறையற்ற ஆதிக்கத்தைச் செலுத்தி சூழல் மாசடைதலை ஏற்படுத்தக் காரணமாக அமைகின்றது. சர்வதேச அளவில் மேற்கொள்ளப்படும் யுத்தங்கள் என்பன சுற்றாடலுக்கு பேரச்சுறுத்தலாக உள்ளது. அணுப்பரிசோதனை, ஏவுகணைப் பரிசோதனை, யுத்தப் பயிற்சிகள் என்ற பெயரில் நிலப்பரப்பும், நீர்ப்பரப்பும் பெருமளவில் சீரழிந்து வருகின்றது. காடழிப்பு போன்ற இயற்கை வளங்களின் துஷ்பிரயோகத்தினால் புவி வெப்பமடைவதால் உக்கிர நிலையை எட்டியுள்ளது. இதனால் கொஞ்சம் கொஞ்சமாக புவியின் இரு துருவங்களிலும் உறங்கும் இராட்சத பனிப்பாறைகள் இழகத் தொடங்கியிருக்கின்றன.

இது நாம் வாழும் பூமி. அதனைப் பாதுகாப்பது நமது தலையாய கடமை. சுயநல நோக்கோடு அல்லாமல் சமூகம் என்ற ரீதியில் சிந்தித்துப் பாருங்கள். நமது வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ள நாம் எடுக்கும் எந்தவொரு நடவடிக்கையும் வேறு எவருக்கேனும் பாதகமாக அமைந்து விடவில்லை என்பதில் உறுதியாய் இருப்போம். மட்டுமன்றி சூழலை சீர்கேடடையச் செய்யும் காரணிகளை அடையாளம் கண்டு அதை அப்புறப்படுத்துவோம். இயன்ற வரையில் மீள உபயோக சிந்தனையை நடைமுறைப்படுத்துவோம்.

இதை அனைத்தையும் உணர்ந்து எமது சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்து அதை அசுத்தப்படுத்த முயல்வோரை தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளைக்கூறி சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்க உதவுவோம். சுற்றாடலை சுத்தமாக வைத்திருந்தால் நாமும் சுத்தமாக வாழலாம். நிகழ்கால சௌகரியங்களுக்காக எதிர் காலத்தை வீணாக்கி விடாதிருக்க உறுதி பூணுவோம்.

*இ. விஜயராஜா,*
*இல்ல மாணவன்,*
*தரம் - 13.*

**"நாம் வீணே கழிக்கும் ஒவ்வொரு விநாடியும் நம் வாழ்க்கையில் பெறமுடியாத செல்வங்கள்."**

**- பேக்கன் -**

## டாக்டர். திருமதி. புஸ்பலதா லோகநாதன்

### சிறுவர்களும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களும்.

யுத்தமும், சமூக வன்முறையும் துப்பிவிட்டதன் எச்சங்கள் இன்று எம்முன் பார்வைக்கு உள்ளன. இடிபாடுகளுடனான கட்டிடங்கள், ஆளரவமற்ற ஊர்கள், மலிவாய்ப் போன உயிர்கள், அகதி என்கின்ற அடை நாமத்தோடு ஊர் ஊராய், உலகம் பூராகவும் சுற்றும் மனிதர்கள், காணாமற்போனவர்கள் இவர்களுடன் முக்கியமாக தனித்துவிடப்பட்ட சிறுவர்கள் அரவணைப்பிற்குள் இருந்துகொண்டு உலகம் பற்றி தெரியவேண்டியவர்கள் அநாதைகள் எனும் நாமத்தோடு ஊர் பூராகக் காணலாம். வழிகாட்டப்பட வேண்டிய வயதில் வழியின் திசைகளெல்லாம் அடைத்து விடப்பட்டவர்கள். திக்குத் தெரியாமல் திக்கு முக்காடி ஏதுமற்று நிற்பவர்கள். உயிரின் மூலநாடியாம் உணவு, உறையுள், உடை மறுதலிக்கப்பட்டவர்கள்.

இச் சிறுவர்கள் மலிந்து அலையும் ஒரு நாட்டை கற்பனை பண்ணக்கூட முடியவில்லை. கற்பனைகட்கெல்லாம் இடம் வைக்காமல் இவர்களை அரவணைப்போரும் எம் மத்தியில் இல்லாமலில்லை. இது ஒரு ஆறுதலான விடயம். மனிதம் மரணித்துப் போகாது காப்பதற்கும் மனிதர்கள் உண்டு. அந்த வகையில் சிறுவர் நேய அமைப்புக்களுக்கும், சிறுவர் பராமரிப்பு நிலையங்கட்கும் பெரும் பங்குண்டு.

வீரமுனை சிறுவர் பராமரிப்பு நிலையத்தை யாவரும் நன்றியோடு நினைவு கூறலாம். (ஏனைய நிறுவனங்களும் விதிவிலக்கல்ல) தங்கள் சுற்றுப்புறத்திலும் அயல் கிராமங்களிலிருந்தும் வழிகாட்டலற்ற சிறுவர்களை அரவணைத்துக் கொண்டு படித்த சில இளைஞர்களாலும், நல்ல மனம் கொண்ட பெரியவர்களாலும் தங்கள் நேரம், உழைப்பு சகலதையும் முதலீடாக்கி தொடங்கப்பட்டதொரு நிலையம் இது. சிறுவர்களின் சேர்க்கையும் நிலையத்தின் பராமரிப்பும் படிப்படியாக உயர பலரின் பார்வைக்கும் கணிப்பீடுகளுக்கும் உள்ளானது. இதன் பலனாக பல நிறுவனங்கள். பெரியவர்கள் உதவி செய்ய முன் வந்தார்கள். இன்று இப்பகுதியில் நல்ல தரத்தோடும், சிறந்த நிர்வாகத்தோடும், சிறுவர்களின் முன்னேற்றமான வளர்ச்சியோடும் நாளுக்கு நாள் வளமானதொரு சிறுவர் பராமரிப்பு நிலையமாக இச் சீர்பாததேவி சிறுவர் பராமரிப்பு நிலையம் விளங்குகின்றது.

ஒவ்வொரு சிறுவனினதும் முதன்மையான வழிகாட்டலில் இருந்துதான் ஆரம்பமாகின்றது. பெற்றோரின் அரவணைப்பும் அன்பும்தான் குழந்தையின் வளச்சியின் முதல் படி. அதனை தொடர்ந்து குடும்பம் அக்குழந்தையின் ஆளுமையும் செல்வாக்கு செலுத்துகின்றது. சூழல் இங்குள்ள குழந்தைகளுக்கு பெற்றோர்களாக, பராமரிப்பாளர்கள் உள்ளனர். தன் குழந்தையாய் ஒவ்வொரு குழந்தையையும் நோக்கிடும் மனப்பக்குவம். அடிநாதமாய் வாய்க்கப்பெற்றவர்கள் இது அவர்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் இது இங்கு மட்டுமல்ல பல சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலும் என்னை ஆச்சரியப்படுத்திய விடயம் அவர்களை மனமாற வாழ்த்தலாம்.

இச் சிறுவர் பராமரிப்பு நிலையச் சிறுவர்களின் குடும்ப சூழ்நிலை ஒரு பெரிய குடும்ப அங்கத்தவர் தொகையை கொண்டது. தன் வயதினை ஒத்த பலரோடும், தனக்கு மூத்த, இளைய மாணவர்களுடனும் ஒன்றாக வாழ்கின்ற ஒரே நிலைப்பாடு இது ஒரு பெரிய பலம். சகல சிக்கல்களையும், சந்தோஷங்களையும் ஒன்றாக எதிர் கொள்ளக் கூடிய ஒரு பலத்தினை அளிக்கின்றது. நான் தனியாளில்லை. எனக்கு பக்கபலம் பலமாய்யுள்ளது என்கின்ற தன்னம்பிக்கை இச் சிறுவர்களிடையே ஏனைய சிறுவர்களை காட்டிலும் சற்று தூக்கலாகவே உள்ளது. அத்தோடு ஆலோசனை சொல்ல, வழிகாட்ட, சரி பிழைகளை விளங்கப்படுத்த பராமரிப்பாளர்கள், நிர்வாகம் என பல பெரியோர்களையும் அவர்களுக்கு அண்மைப்படுத்தியுள்ளது. ஒரு பக்குவம் தானாகவே வாய்க்கப்படக் கூடிய சூழ்நிலை இது.

சூழல் என்று பார்க்கும் போது இச்சூழல் சிறுவர்களுக்கு மிகவும் பரந்து பட்டது. பாடசாலைச்சூழல் தனியாகவும், சுற்றுச்சூழலில் வாழ்பவர்கள், பரோபகாரிகள், குழந்தைகளிடம் அன்புள்ளவர்கள், உதவி செய்பவர்கள், என இச் சூழல் மிகவும் விரிதானது. இங்கு இச்சிறுவர்கள் மிகவும் ஆளுமையுடன் வளர்வதற்கு நல்ல வழிகாட்டல் மிக மிக அவசியம். எப்போதும் ஒரே கண்காணிப்பு இருந்து கொண்டே இருக்கவேண்டும். நல்ல ஊக்குவிப்புக்கள் நிச்சயம் நல்ல அறுவடையைத் தரும்

பழக்க வழக்கங்களை எடுத்து நோக்கும் போது தாங்கள் தாங்களாகவே கைக்கொண்ட பழக்க வழக்கங்களை மாற்றி விட்டு ஒரு பொதுவான நடையில் நல்ல பழக்க வழக்கங்கள் மட்டுமே கற்றுத் தரப்படுகின்றது. அதனைத்தான் எல்லோரும் பின்பற்ற வேண்டும். ஒரே ஒழுக்கமான சமூகக்கட்டமைப்புக்கும் சீரிய வாழ்கைக்கும் இது ஒரு பலமான அடித்தளம் முக்கியமாக சுகாதார பழக்க வழக்கங்கள் அமைகின்றன ஒரே கூட்டாக வாழும் போது இந்த சுகாதார பழக்க வழக்கங்கள் முதன்மை பெறுகின்றன. ஒருவரின் நோய் பலரை பாதிக்கும் ஆபத்தான ஒரு கட்டத்திற்கும் இட்டுச் செல்லலாம். சுத்தம் பேணி , சிறு சிறு பிரச்சினைகட்கும் வைத்திய ஆலோசனை நாடுகின்ற ஒரே படிமத்தை நான் இச்சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் கண்டுள்ளேன். இவர்களின் தாரக மந்திரமே வரும் முன் காப்பது தான் .

ஆத்மீகத் துறையும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் மிகவும் மேலோங்கியுள்ளது. தங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள கல்வியில் , உணவில் , நல்ல நாட்களில் தினமும் ஆண்டவனுக்கு நன்றி சொல்லும் சிறுவர்களை நான் இப்பராமரிப்பு நிலையங்களில் கண் கூடாகக் கண்டிருக்கின்றேன்.

இவற்றையெல்லாம் மீறி ஒவ்வொரு குழந்தையையும் தனித்தனியாக எடுத்து நோக்கும் போது சில சில குறைபாடுகள் தவிர்க்கமுடியாததாகின்றன. தனித்துவம் எல்லோருக்கும் உண்டு சிறுவரிலிருந்து பெரியவர் வரை இத் தனித்துவம் பேணப்படுகின்றது. மனிதரில் மட்டுமே தன் தாய், தன் தந்தை, தன் குடும்பம் எனத் தேடாத எந்த சிறுவனும் இருக்க மாட்டான். இது அவனுக்குள் நிரந்தரமாக தங்கி விட்ட இழப்புத்தான். இது எமக்கு அதிகமாக்கப்பட்டாலும் இந்த உண்மையை ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும். ஆனாலும் எமது செயற்பாடுகள் நன்மையாயும், பெரியவிடயத்தையும் நோக்கி நகரும் போது இக் குறை முதன்மை பெற்றுவிடாது .

நமது நோக்கங்களும் முதன்மையும் சீரான ஒரு பாதையையும், வாழ்வியலையும் எம் திக்கற்ற சிறார்கட்கு அளிப்பதுவே. நிர்வாகம் மட்டும் இப் பணியில் ஈடுபட்டு வெற்றி பெற்று விடமுடியாது. இதனை சமூகத்திற்கும் மாணவர்கட்கும் அறிமுகப்படுத்த வேண்டும் தம் குறைமறந்து தனிப்பெரும் ஆளாய் நிச்சயம் இம் மாணவர்கள் மாறுவார்கள். அவர்கட்குரிய அரவணைப்பு நிர்வாகத்திடம் இருந்து மட்டுமல்ல சமூகத்திடமிருந்து நிச்சயம் அடையாளப்படுத்தப்படும். எல்லா மேன்மைகளும் நன்மைகளும் எல்லோருக்கும் உரித்தாகட்டும்.

*டாக்டர். திருமதி. புஸ்பலதா லோகநாதன்,*
*குருக்கள் வீதி,*
*பாண்டிருப்பு-02,*
*கல்முனை.*

**கவிஞன் பொன் சிவானந்தன்**

# குருகுல வாழ்வின் அடித்தளம் வளர்க!

"சீர்பாததேவியின்" கிழக்குப்பயணம்
சீராய் அமைகவென வேண்டிக் கொணர்ந்த
வாரண முகத்தோன் வளமென உவந்து
வரைபடமமைத்து அமர்ந்த திருத்தலம்
பூரணன் "சிந்தாயாத்திரைப் பிள்ளையார்"
பூர்வீகப் பதியில் அருள் பாலிக்கின்ற
கார் பொழி "வீரமுனை" வளர் கோயில்
கதியென நினைவிற் கொள்வம் திருவினை.

பேர் பெறு தமிழர்தம் வாழ்வை விளக்கும்
பிரயாணத் தத்துவம் பேசும் இறைவனின்
தேரெனப் பொலியும் ஆலயத்துள்ளே
தெய்வச் சுடர்களாம் குழந்தைகள் குருகுலம்
நாரிலே கோர்த்த மாலையாய்ப் பொலிந்து
நலம் பெற்று வாழ வழி சமைத்தவர்கள்
வீரமுனையின் இளவல்கள் இணைந்த
விடா முயற்சியினால் விளைந்தது அறநெறி.

புண்ணியமென்பது பொருளீட்டல் மட்டுமே
புதுக்குவதல்ல, கருணையில், அன்பில்
எண்ணிய மனத்தின் திண்ணிய உணர்வில்
எருவாய் விழுவது "எல்லாம் அவன் வழி "
புண்ணியதனைத்தும் கண்ணியமல்லவே!
பலரும் மெச்சும் பாக்கிய நிறையொளி
கண்ணியப்பட்டது இளைஞர் செயலிலே
கருத்தோடெழுந்தது இவ்வுயர் செந்நெறி.

ஆலயத்திருந்த மடத்திலே அமைத்த
ஆதாரந்தரும் அறநெறிக் குருகுலம்
கால காலமாய் வளர்வது கண்டோம்
கலை பல பயிலும் கல்வியும் ஓங்கலாய்,
வேலாயுதனின் மூத்தோன் கோயிலில்
விண்ணவர் மெச்சும் ஏழையின் கல்வியைந்
சீலத்தின் மீது விழுமியம் பூசிச்
சிக்கன வாழ்வின் சீர்மையை நுழைத்தது.

"பணியுமாம் என்றும் பெருமை, சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து" என வள்ளுவன்
கனிவுடன் சொல்லிய சூட்சுமக் குறளின்
திணிவினை இளசுகள் மனதிற் பதிக்கும்
தணியாத தாகத்தை முன்னெடுத்துள்ள
தயவினை நாமெல்லாம் மெச்சிப் புகழ்கிறோம்
பணிவிடையாய் மேற்கொள்ளல் பெரிதே
"பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்"

"இராமக்கிருஷ்ண முனி" நடைமுறைப்படுத்திய
வாழ்வியற் கல்வியில் பயின்ற மாணவர்
உறவுகள் பலதையும் வென்றிங்கு வாழ்வது
உயர்வின், உண்மையின் உச்சங் காண்பது
தூராசியின் தன்மையில் வாழா மாந்தர்
தவிப்பின்,ஏக்கத்தின் பதைப்பின் ரூபமே
கிராமத்தின் சூழல் கற்பிக்கும் பாடங்கள்
பட்டினப் போதனை பயில்விக்க முடியுமா?

ஐந்தாம் ஆண்டினை நிறைவு செய்துள்ள
பிள்ளைகள் பயிற்சிக் குருகுல இல்லம்
"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற
தூயவன் வாய் மொழி மெய்ப்பிக்க வேணும்
தான் மட்டும் வாழ்ந்தாற் போது மென்றெண்ணித்
தத்தளிக்கின்ற வாழ்வியல் தொலைய
ஆன்றோர் பாதையில் வாழப்பழகும்
அருமைக் குழந்தைகள் அனைவரும் வாழ்க!

சிந்தாயாத்திரைப் பிள்ளையார் அருளால்
செய்யப்பட்ட சேவையின் சேமிப்புக் கல்வி
பந்துக்கள் பயந்த சமூக அமைப்பில்
பல மொழியறிந்து "பழமொழி" வாழ்வில்
முந்திவந் துயர்ந்து முழுமை மனிதராய்
முச்சுடர் போல அறிவொளி சுடர்ந்து
சிந்தையும் செயலும் ஒன்றாய் மிளிர்ந்து
சீரிய வாழ்வினை நீட்ட வாழ்த்துவாம்.


*கவிஞன் பொன் சிவானந்தன்*
*காரைதீவு.*

## பொது அறிவு.


01. இரும்பை விட கடினமான வாயு எது?
    ராடன்.
02. ஆப்கானிஸ்தானில் வழங்கிவரும் மொழி எது?
    புஸ்டு
03. மண் புழுக்கு எத்தனை இதயங்கள்?
    05 கோடி
04. ஒரு கிலோ தேனில் உள்ள சத்து எவ்வளவு?
    65 முட்டைகளில் உள்ள சத்து
05. மனித போக்குவரத்து காவலர்களே இல்லாத நாடு எது?
    நியூசிலாந்து
06. மனித உடம்பிலுள்ள எலும்புகளின் எடை எவ்வளவு?
    **09 Kg**
07. உலகம் முழுவதும் எத்தனை வகை ஓக் மரம் உள்ளன?
    360 வகை

**T. ரூபன்,**
**இல்ல மாணவன்,**
**தரம் – 10.**

## இல்ல மாணவர்களின் புறநிலைச் செயற்பாடுகளில் சில....



## இல்ல மாணவர்களிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின் போது



### அர்த்தமான நேரங்கள்

- உழைக்கும் நேரத்தை எடுத்துக்கொள்
  ***அது வெற்றியின் விலை.***

- சிந்திக்க நேரத்தை எடுத்துக்கொள்
  ***அது சக்தியின் ஊற்று***

- விளையாட நேரத்தை எடுத்துக்கொள்
  ***அது இளமையின் ரகசியம்***

- படிக்க நேரத்தை எடுத்துக்கொள்
  ***அது அறிவின் வாயில்***

- திட்டமிட நேரத்தை எடுத்துக்கொள்
  ***அது சாதனைக்கு வழி***

- அன்பு காட்ட நேரத்தை எடுத்துக்கொள்
  ***அது இறைவனின் கொடை***

- சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக்கொள்
  ***அது இதயத்தின் இன்னிசை.***

**P. காண்டீபன்,**
*இல்ல மாணவன்,*
*தரம் - 10.*

அதிபர்

திரு. கா. சந்திரலிங்கம்

# வெற்றிதரும் யோகம்

யோகம் இறைவனுக்கும் மனிதனுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துவது. அதாவது பரமாத்மா, ஜீவாத்மா இரண்டையும் இணைப்பது. சுவாமி விவேகானந்தர் கூறுவதுபோன்று மிருக நிலையில் இருக்கும் மனிதனை மனித நிலைக்கு கொண்டுவந்து அதி உன்னத மனிதனாக்கி தெய்வீகத்தன்மை உடையவனாக மாற்றுவது. எல்லா மனிதர்களுக்குள்ளும் தெய்வீகத்தன்மை உறைந்திருக்கிறது. அதனை வெளியில் கொணரச்செய்யும் அற்புதமான கலையே யோகமாகும்.

ஆதிகாலத்திலிருந்தே முனிவர்களாலும், ரிஷிகளாலும் செய்துவரப்பட்ட யோகம் ஒரு மாபெரும் விஞ்ஞானமாகும் எமது உடல், மனம், ஆன்மா இவைகளை தெளிவுற, தெரிய வைப்பது யோகம் முறைப்படி யோகத்தை செய்து வருவபவர்கள் அடையும் நன்மைகள் சொல்லில் அடங்காது.
“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” இச் செல்வத்தை சிறப்புறத் தருவது யோகம்.

சிதறும் மனத்தின் சக்தியை மேலோங்கச் செய்வது யோகம். இது மதத்திற்கு அப்பால்பட்டது. எந்த மததத்தினரும் செய்து பயனடையக்கூடியது.

யோகத்தில் எட்டுப்படிகள் உள்ளன. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாகும். இதனை அட்டாங்கயோகம் என அழைப்பர் இவ் எட்டு படிகளையும் இரண்டாகப்பிரித்து பஹிர்முகம், அந்தர்முகம் எனக்கூறுவர்.

வெளியுடலால் செய்யப்படுகின்ற இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம் போன்றவைகளை பஹிர்முகம் எனவும், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவற்றை அந்தர்முகம் எனவும் கூறுவர். சிலர் பிரத்தியாகாரத்தை பகிர்முகத்திற்குள்ளும் சேர்த்துக்கொள்வர் இவை அனைத்துமே மனிதனை பூரணத்துவம் உடையவனாக மாற்றுகின்றது என்றால் மிகையாகாது. இவைகள் ஒவ்வொன்றைப்பற்றியும் கூறுவது கட்டுரையை விரிவாக்கும் என்பதால் நேரடியாக ஆரோக்கியத்தை சிறப்புறப்பேண, நோயிலில் இருந்து எம்மை காப்பாற்றிக்கொள்ள, வந்த நோயிலிருந்து விடுதலைபெறக்கூடிய சிறப்புக்கள் பொருந்திய ஆசனங்களைப்பற்றி இங்கு நோக்குவோம். ஆசனங்கள் என்பது இருக்கைகள் எனப்பொருள்படும். ஆரோக்கியத்தை பெறுவதற்காக இருக்கும் முறையான பல இருக்கைகளை யோகாசனங்கள் எனக்கூறலாம்.

**ஆசனங்களைச்செய்வதால்**

1. மன அழுத்தங்களில் இருந்து விடுபடலாம்
2. நோய்களில் இருந்து எம்மை நாமே காப்பாற்றிக்கொள்ளலாம்.
3. மனதை ஒருநிலைப்படுத்தலாம்.
4. வந்த நோய்களை அகற்றிவிடலாம்.
5. தீய பழக்கங்களில் இருந்து மீளலாம்.
6. சில நோய்களை கட்டுப்பாட்டில் வைக்கலாம்.
7. உடல் உறுப்புக்களின் செயலை ஒன்றுபடுத்தலாம்.
8. எப்பொழுதும் மனமகிழ்ச்சியுடன் இருக்கலாம்
9. பய உணர்வை நீக்கிக்கொள்ளலாம்.

மொத்தத்தில் எல்லா வகையான நன்மைகளையும் அடையலாம்.

**யோகாசனம்செய்பவர்கள் கவனிக்க வேண்டியவைகள்.**

1. சுத்தமான விரிப்பு, காற்றோட்டமுள்ள இடம்
2. காலையில் காலைக்கடன்களை முடித்தபின் வெறும் வயிற்றில் செய்வதே சிறந்தது.அல்லது சாப்பிட்டு நான்கு மணி நேரத்தின் பின் செய்யலாம்.
3. சிற்றுண்டியானால் இரண்டு மணித்தியாலயங்களில் பின்னர் ஆசனம் செய்யப்பட வேண்டும்.

4. தேநீா், பால் போன்றவைகள் அருந்தினால் அரை மணித்தியாலயங்களின் பின் செய்ய வேண்டும்.

5. குளித்தபின் அரை மணித்தியாலயத்தின் பின்னரும், இதே போன்று ஆசனம் செய்து அரை மணித்தியாலயத்தின் பின்னரும் குளிக்க அல்லது உடல் கழுவ வேண்டும்.

6. கர்ப்பவதிகள் மூன்று மாதங்களின் பின்னர் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளல் சிறந்தது.

7. மாதவிடாய் காலங்களில் ஆசனங்கள் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

8. உடற்பயிற்சி, வெளியங்கப் பயிற்சி என்பதாலும் ஆசனம் உள்ளங்கப் பயிற்சி என்பதாலும் இரண்டையும் ஒருமித்து செய்யக் கூடாது.

9. தளர்த்துகின்ற பயிற்சிகள் செய்தால் நன்கு ஓய்வெடுத்த பின்னரே செய்ய வேண்டும்.

10. முறைப்படி நீங்கள் ஆசனங்களைச் செய்தால் ஆசனங்கள் செய்து முடிந்ததன் பின் புதுத் தென்பும் புத்துணர்ச்சியும் காணப்படும்.

11. எந்தவொரு ஆசனமும் செய்த பின்பு நிச்சயமாக சாந்திஆசனம் செய்ய வேண்டும்.

எடுத்த எடுப்பிலேயே ஆசனங்களைச் செய்ய முடியாது. என்பதால் உடலைத் தளர்த்துகின்ற பயிற்சியை முதலில் செய்து ஓய்வெடுத்த பின்னர் ஆசனங்களைச் செய்யலாம். உடலைத் தளர்த்துகின்ற பயிற்சிகள் என்னும்போது

1. நிமிர்ந்து ஒரே இடத்தில் நின்றுகொண்டு ஓடுதல்
2. கைகளை முன்பக்கமாகவும் பின்பக்கமாகவும் சுழற்றுதல்.
3. கழுத்தின் வலது பக்கமாகவும் இடது பக்கமாகவும் மிகவும் மெதுவாக சுழற்றுதல்
4. இடுப்பினை இரண்டு பக்கங்களுக்கும் சுழற்றுதல்.
5. இருந்து கொண்டு கால்களை முன்னால் நீட்டி பாதங்களை இரண்டு பக்கங்களுக்கும் சுழற்றுதல்
6. கால்களை நீட்டிய வண்ணம் குனிந்து கையினால் கால் பெரு விரல்களைத் தொட்டு மீண்டும் நிமிர்ந்து குனிந்து செய்தல்.
7. கால்களை மடித்து வண்ணாத்திப்பூச்சி பறப்பதுபோல் பாதங்களைப் பிடித்துக் கொண்டு கால்களை அசைத்தல்.
8. மல்லாந்து படுத்துக்கொண்டு இரண்டு கால்களையும் பூமியில் படாது மாறி மாறி தூக்குதலும், பணித்தலும்.
9. மல்லாந்து படுத்துக்கொண்டு கால்களை மடியாமல் எழுந்து கால் விரல்களைத் தொட்டபின் மீண்டும் பழைய நிலைக்குச் செல்லுதல்.

இவ்வாறான பலவகைத் தளர்த்துகின்ற பயிற்சிகளைச் செய்யலாம். கஷ்டமில்லாத இலகுவான இவ்வகையான பயிற்சிகளைச் செய்து ஓய்வெடுத்த பின்னா் ஆசனங்களைச் செய்யும்போது ஆசனங்கள் செய்வது இலகுவாக அமையும்.

**இலகுவாகச் செய்யக்கூடிய ஆசனங்கள்.**

## 01. அர்த்தகடி சக்கராசனம். – (பக்கவாட்டில் வளையும் நிலை)

இரு கைகளையும் பக்கவாட்டில் வைத்து நிமிர்ந்து நிற்கவும். முதலில் இடது கையை மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு மெதுவாகத் தூக்கவும். கைத்தசைகள் காதைத்தொடும்வரை உயர்த்தியபின் அப்படியே வலதுபக்கம் சரியவும். வலது உள்ளங்கை இடது காலைத்தொட்டவாறு எவ்வளவு தூரத்திற்கு போகமுடியுமோ அவ்வளவு தூரம் போகட்டும். பக்கவாட்டில் சாயும்போது மூச்சை வெளியில் விடவேண்டும். மேலே உயர்த்திய கை முழங்கை மடியாது நேராக இருக்கவேண்டும். மூச்சை நிறுத்தாமல் சாதாரணமாக சுவாசிக்கவும். பின்பு பழைய நிலையை அடையவும். இதேபோன்று மறுபக்கமும் செய்யவேண்டும். ஒரு நிமிடம் நின்றால் போதுமானது.

***பலன்கள்:*** கல்லீரலைத்தூண்டி அதன் வேலையை சீர் செய்கின்றது. உடலை பக்கவாட்டில் வளைப்பதால் முதுகு முள்ளெலும்பிற்கு பயிற்சி அளிக்கின்றது, உடம்பை வளையக்கூடியதாக மாற்றுகின்றது. இதனை எவரும் செய்யலாம், நோயாளிகளும் செய்யலாம்.

### 02. திருகோணாசனம் (முக்கோண அமைப்பு நிலை)



1. நேராக நிமிர்ந்து நிற்கவும். வலது காலை ஒரு மீற்றர் பக்கவாட்டில் நகர்த்தி வைக்கவும். மூச்சை உள்ளிழுத்து கைகள் இரண்டையும் தோளின் அளவு உயர்த்தவும்.
2. முன் பின் சரியாமல் மூச்சை வெளியில் விட்டுக்கொண்டு நேராக பக்கவாட்டில் சரியவும். வலது கையின் விரல்கள் வலது காலைத்தொடவேண்டும். முழங்கால்கள் வளையக்கூடாது. இடது கை நேர்கோட்டில் மேல்நோக்கி உள்ளங்கைகள் முன்னால் பார்த்தபடி இருக்கவேண்டும். சுவாசம் சாதாரணமாக இருக்கவேண்டும்.

***பலன்கள் :*** கணுக்கால், தொடைத்தசைகள் பலப்படுகின்றன, முதுகுவலி அகற்றப்படுவதோடு, கூனலை நீக்குகிறது, தட்டைப்பாதத்தை சீராக்குகின்றது.

***தவிர்க்கவேண்டியவர்கள்***

இரத்தஅழுத்த இருதயநோய்கள் உள்ளவர்கள், வயிற்று அறுவைச்சிகிச்சை செய்தவர்கள்.

### 03. பரிவருத்த திரிகோணாசனம் (குறுக்கு முக்கோண நிலை)


1. பாதங்களை திரிகோணாசனத்துக்குவைத்தது போன்று ஒரு மீற்றர் அகலமாக வைக்கவும். சுவாசத்தை உள்ளிழுத்துக் கொண்டுகைகளை தோள் மூட்டின் அளவு உயர்த்தவும்.
2. இடுப்பை வளைத்து சுவாசத்தை வெளியில் விட்டுக்கொண்டு இடது கை வலது காலின் பாதத்தைத் தொடவேண்டும் முழங்கால்கள் வளையக்கூடாது. ஒரு நிமிடம் நின்றால் போதுமானது. மீண்டும் பழைய நிலைக்கு வரவும். மறுபக்கமும் இதேபோன்று செய்யவும்.

***பலன்கள்***

சிறுநீரகங்கள் பலப்படும், முதுகெலும்பிற்கு உறுதியளிப்பதோடு அதன் குறைகள் நிவர்த்தியாக்கப்படுகின்றன. தொடைத்தசைகள் பலமடைகின்றன. முதுகெலும்பு சுழலும் தன்மை அடைகின்றது.

***தவிர்க்கவேண்டியவர்கள் :*** இரத்த அழுத்த இருதயநோய் உள்ளவர்கள், வயிற்று அறுவைச்சிகிச்சை செய்தவர்கள் தவிர்க்கவும்.

### 04. பார்சுவக்கோணாசனம் (செங்கோண முக்கோண நிலை)




1. நிமிர்ந்து நேராக நிற்கவும். ஒன்றறை மீற்றர் இடைவெளியில் கால்களை அகலமாக வைக்கவும்.
2. வலது பாதம் வலது பக்கம் திரும்ப வேண்டும். வலது பாதத்தின் $90^0$ டிகிரி கோணத்தில் இடதுபாதம் இருக்கவேண்டும்.
3. வலது காலை மடக்கி இருக்கவேண்டும். இடது முழங்கால் வளையாமல் இருக்கவேண்டும்.
4. உடலை வலது பக்கம் சாய்த்து வலது தொடையில் வைத்துக்கொள்ளவேண்டும்.
5. வலது உள்ளங்கை வலது காலருகே இருக்கவேண்டும்.
6. இடது கைவிரல்களை மடிக்காமல் நிமிர்த்தியபடி தலைக்குமேல் உயர்த்தவும்.
7. இப்போது தலையை உயர்த்தி இடது கையை பார்க்கவும். சுவாசம் சாதாரணமாக இருக்கட்டும். ஒரு நிமிடம் போதுமானது, மீண்டும் பழைய நிலைக்கு படிப்படியாக வரவும். இதே போன்று அடுத்த பக்கமும் செய்யவும்.

***பலன்கள் :*** முதுகுவலி அகற்றப்படுகின்றது, மார்புக்கூடு விரிவடைகின்றது, மலச்சிக்கல் அகற்றப்படுகின்றது, தொடைகளின் குறைகள் நீங்குகின்றன.

***தவிர்க்கவேண்டியவர்கள் :-*** இதயநோய் உள்ளவர்கள் ஆரம்ப நாட்களில் தவிர்க்கவும்.

## 05. அர்த்தக சக்கராசனம் (அரைவட்ட வடிவநிலை)



1. நிமிர்ந்து நிற்கவும்
2. கைகளை இடுப்பின் இரு புறங்களிலும் வைத்துக்கொள்ளவும்.
3. இடுப்பிலிருந்த உடலை பின்புறம் சுவாசத்தை உள்ளிழுத்துக்கொண்டு வளைக்கவும்.
4. முழங்கால்கள் வளையக்கூடாது.

காலம் :- ஒரு நிமிடம் போதுமானது, சுவாசம் சாதாரணமாக இருக்கவேண்டும்.

***பலன்கள் :*** முதுகெலும்பு வளையும் தன்மை பெறுவதுடன், முதுகு நரம்புகள் தூண்டப்பட்டு தலையில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கின்றது.

***தவிர்க்கவேண்டியவர்கள் :-*** வயிற்றில் அறுவைச்சிகிச்சை உள்ளவர்கள் தவிர்க்கவும்.


## 06. பாதஹஸ்தாசனம் (முன்குனியும் ஆசனம்)



1. நேராக நிமிர்ந்து நிற்கவும். கால்கள் இரண்டும் இணைந்து அருகருகே இருக்கவேண்டும்.
2. இரண்டு கைகளையும் பக்கவாட்டில் உயர்த்தி மேலும் மேலே உயர்த்தவும். கைகள் காதைத்தொட்டவாறு இருக்கவேண்டும். கைகளை மேலே தூக்கும்போது சுவாசத்தை உள்ளிழுக்கவும்.
3. சுவாசத்தை வெளிவிட்டுக்கொண்டே முன் பக்கம் குனியவேண்டும். முழங்கால்கள் வளையக்கூடாது. இரண்டு கைகளும் பாதத்தை தொடவேண்டும். சுவாசம் சாதாரண நிலையில் இருக்கவேண்டும்.
4. மீண்டும் சுவாசத்தை உள்ளிழுத்துக்கொண்டு கைகளை மேலே தூக்கவும். படிப்படியாக பழைய நிலைக்கு வரவும்.

***பலன்கள் :*** முதுகெலும்பு வளையக்கூடிய தன்மையை அடைகின்றது. முதுகுவலி அகற்றப்படுகின்றது. மலச்சிக்கலுக்கு சிறந்த நிவாரணி. பெண்களின் மாதக்கோளாறுகள் தீர்க்கப்படுகிறது. தொடைத்தசை பலமடைகின்றது.

***தவிர்க்கவேண்டியவர்கள் :-*** இரத்தஅழுத்தம் உள்ளவர்கள் கட்டாயம் தவிர்க்கவும்.



## 07. ஏகபாதாசனம் (ஒற்றைக்காலில் நிற்கும் நிலை)

1. நிமிர்ந்து நிற்கவும். ஒரு காலைத்தூக்கி மறுகாலின் தொடையின் அடிப்பகுதியில் வைக்கவும்.
2. கைகள் இரண்டையும் மேலேதூக்கி காதோடு ஒட்டியவண்ணம் வைத்து நிமிர்ந்து நிற்கவும்.
3. கைகள் இரண்டும் கும்பிடுவதுபோல் இருக்கவேண்டும்.

***பலன்கள் :-*** மன ஒருமைப்பாட்டிற்கு சிறந்த ஆசனம், கால்களுக்கும் பலமளிக்கும்

# இருந்து செய்யும் ஆசனங்கள்



## 01. ஜானுசீராசனம்

I. நேராக நிமிர்ந்து உட்காரவும், இரண்டு கால்களையும் நீட்டவும், வலது காலை இழுத்து மடக்கி ஆசன வாசல் அருகில் குதிகால் படும்படி வைக்கவும்.

II. இரு கைகளையும் தூக்கி காதைத்தொட்டபடி, முன்னால் குனிந்து இடதுகால் பெருவிரலைத்தொடவும், இடது முழங்கால் வளையக்கூடாது.

III. கைகளை மேலே தூக்கும்போது சுவாசத்தை உள்ளிழுத்து குனியும்போது சுவாசத்தை வெளிவிடவேண்டும்.


IV. ஆசனநிலையில் சுவாசம் சாதாரணமாய் இருக்கவேண்டும்.

V. கைகளை தூக்கியவண்ணம் சுவாசத்தை உள்ளிழுத்துப் பழைய நிலைக்கு வரவும், இவ்வாறு மறுபக்கமும் செய்யவும்.

***பலன்கள்*** : அஜீரணம், வாயுத்தொல்லைகள் நீங்கும், வயிற்றுவலி நீங்கும், சுக்கிலம் கட்டுப்படும், மலச்சிக்கல் அகலும், அடிவயிற்றுச்சதையை குறைத்துப் பசியைத்தூண்டும், சிறுகுடல், பெருகுடல் வேலை துரிதப்படுத்தும்.

இருதயநோய், நாரிப்பிடிப்பு உள்ளவர்கள் இவ்வாசனத்தை தவிர்க்கவும்.

## ௦2. பஸ்சி மோத்தாசனம்



1. ஜானு சீராசனத்திற்கு இருந்தது போல் இரண்டு கால்களையும் நீட்டிய நிலையில் இருக்கவும்.
2. சுவாசத்தை உள்ளிழுத்து இரண்டு கைகளையும் தூக்கி முழங்கைகள் வளையாது காதில் படும்படியாக வைத்துக்கொள்ளவும்.
3. சுவாசத்தை வெளியில் விட்டுக்கொண்டே முன்னால் குனிந்து பாதங்களைப் பிடிக்கவும்.

***பலன்கள் :*** – மலச்சிக்கல் நீங்கும். முள்ளந்தண்டு நரம்புகளை உற்சாகப்படுத்தும். கணையம், குடல் செயற்பாடுகள் துரிதமடையும். அடிவயிற்றுச் சதை கரைந்து வயிறு பலமடையும். சமிபாட்டைத் தூண்டும். வயிற்றுப்போக்கைத் தடுக்கும்.
(நாரிப்பிடிப்பு, இருதய நோயுள்ளவர்கள் இவ்வாசனத்தை தவிர்க்கவும்.)

## ௦3 உஷ்ட்ராசனம் (ஒட்டகம் போன்ற நிலை)



I முழங்கால்களை மடித்து குதி கால்களை பிருஷ்ட பாகத்தின் அடியில் வைத்து நிமிர்ந்து உட்காரவும். இந்நிலையை வஜ்ராசனம் எனக் கூறுவர்.

II. முட்டுக்காலில் எழுந்து நிற்கவும்.

III. பின்புறமாக வளைந்து கைகளினால் குதி கால்களைப் பிடிக்கவும்.

IV. பின்புறமாக வளையும்போது மூச்சை உள்ளிழுக்கவும்.

V. பழைய நிலைக்கு வரும்போது மூச்சை வெளியில் விட்டு வரவும்..

VI. ஆசன நிலையில் சாதாரணமாக மூச்சு விடவும்.

***பலன்கள்*** : மூளைக்கு இரத்தோட்டம் அதிகரிக்கும். இளமை பாதுகாக்கப்படும். மூக்கடைப்பு நீங்கும். மார்பு விரிவடையும். மூச்சுத் திணறல், ஆஸ்மா இல்லாதொழியும். முதுகுவலி மாறும்.

நெஞ்சு, அடிவயிறு அறுவைச் சிகிச்சை செய்தவர்களும், கேணியா இரத்த அழுத்தம் உள்ளவர்களும் மிகவும் அவதானத்துடன் செய்யவேண்டும்.

## ௦4. சசாங்காசனம்.



I. வஜ்ராசனத்தில் இருக்கவும். கைகளைப் பின்னால்கொண்டுவந்து வலது கையால் இடது மணிக்கட்டைப் பிடித்துக் கொள்ளவும்.

II. சுவாசத்தை வெளியில் விட்டுக்கொண்டே முன்னால் குனியவும்.

III. நெற்றி பூமியில் படவேண்டும்.

IV. மெதுவாகச் சுவாசிக்கவும்.

V. சுவாசத்தை உள்ளிழுத்த வண்ணம் பழைய நிலைக்கு வரவும்.

***பலன்கள்*** :- அடிவயிறு மெலிய உறுப்புக்கள் பலமடைகின்றன. இடுப்புப்பகுதி நரம்புகள் தூண்டப்படுகின்றன. அடி முதுகுப்பகுதி நரம்புகள் தூண்டப்பட்டு நரம்பு மண்டலத்திற்கு வலுவூட்டும். ஆடவர்களின் குறைகள் தீரும்.

***தவிர்க்கவேண்டிவர்கள்*** :~ நீரிழிவு உள்ளவர்கள்.

## 05. அர்த்தமச்சேந்திராசனம்.



I. கால்கள் இரண்டையும் நீட்டிய வண்ணம் விரிப்பில் இருக்கவும்.

II வலது கால் முட்டியை மடக்கி வலது குதிகாலை ஆசன வாசலருகே கொண்டு வரவும்.

III. இடது கால் முட்டியை மடக்கி வலது தொடைக்கு மேல் கொண்டு வந்து பாதத்தை வலது தொடையருகே தரைமீது வையுங்கள்.

IV. வலது கையை இடது கால் முழங்காலுக்கு மேலாகக் கொண்டு வந்து இடது காலின் பெருவிரலைப் பிடிக்கவும்.


V. உடலை நன்கு முறுக்கி இடது கையை முதுகுக்கு பின்னால் கொண்டு வந்து வலது கால் தொடையை தொட முயற்சிக்கவும். இதே போன்று மறு பக்கமும் செய்யவும்.

***பலன்கள் :*** முதுகு முள்ளலும்புகள் தூண்டப்படும். நீரிழிவு, சிறு நீரகக் கோளாறுகள் நீங்கும். அடிவயிற்றுச் சதைகள் குறைந்து பலமடையும்.

ஆண்மை, வயிற்றுப் பகுதிகள் அறுவைச் சிகிச்சை செய்தவர்கள் இதைத் தவிர்க்கவும்.

# மல்லாந்து படுத்துச் செய்யும் ஆசனங்கள்.

## 01. ஹலாசனம் (கலப்பை போன்ற நிலை)




1. மல்லாந்து விரிப்பின் மேல் படுக்கவும்.
2. கைகளைப் பக்கவாட்டில் வைத்துக் கொள்ளவும்.
3. இரண்டு கால்களையும் இணைத்து மெதுவாக உயர்த்தி கால்களை தலையின் பின்புறம் நீட்டித் தரையைத் தொடவும்.முழங்கால்கள் வளையக் கூடாது.
4. கைகளைப் படத்தில் காட்டியது போல் வைக்கவும் சுவாசம் சாதாரணமாக இருக்க வேண்டும்.

***பலன்கள்*** :- தைராயிட்டு சுரப்பிகள் சிறந்த முறையில் செயற்பட உதவுகின்றது. கழுத்துப்பகுதியில் இரத்தோட்டம் அதிகரிக்கின்றது. கழுத்து நரம்புகள் வலிமை பெறுகின்றன.

இருதய நோயுள்ளவர்கள் இதனைத் தவிர்க்கவும்.

## 02. சர்வாங்காசனம். : (தோள் மீது நிற்கும் நிலை)



1. மல்லாந்து விரிப்பின் மேல் படுத்து ஹலாசனத்தில் கூறியது போல் இரண்டு கால்களையும் இணைத்து மெதுவாக 90 டிகிரி கோணத்திற்கு உயர்த்தவும்.
2. பிடரியுடன் இணைத்து தலைப்பகுதி பூமியில் பட்டபடி இருக்கும். முழங்கைகள் பூமியில் இருக்க கைகளால் இடுப்பைப் பிடித்துக் கொள்ளவேண்டும்.
3. உடலை நேராக வைத்துக் கொண்டு கால்களை வானத்தைப் பார்த்தால்ப் போல் நீட்டி வைத்துக் கொள்ளவும்.
4. உடலைத் தளர்ந்த நிலையில் வைத்துக் கொள்ளவும். தாடைப்பாகம் நெஞ்சில் அமர்த்தியபடி இருக்கட்டும்.

ஆரம்பத்தில் இவ் வாசனத்தை 01 - 02 நிமிடங்கள் செய்து நேரத்தைக் கூட்டி 15 நிமிடம்வரை நிற்கவும்.

***பலன்கள் :–*** சகல நோய்களுக்கும் நிவாரணம் தரும் ஆசனம். தைராயிட்டு சிறப்பாக இயங்கும். கல்லீரலில் உள்ள வீக்கம் குறைகின்றது.(தூக்கத்தில் நடத்தல்) ஹிஸ்பீரியா,மூலநோய், ஹேர்ணியா மாதக் கோளாறு போன்றவைகளை அகற்றும். வெரிகோஸ்ட் வராது தடுக்கும்.

இரத்த அழுத்தம், கழுத்துப்பகுதியில் வலி, கழுத்து நோய் உள்ளவர்கள் இவ்வாசனம் செய்வதைத் தடுக்கவும்.

## 03. மத்ஸ்யாசனம் (மீன் போன்ற நிலை)



1. பத்மாசனத்தில் உட்காரவும். பின்னால் சரிந்து பத்மாசனத்திலேயே படுத்துக்கொள்ளவும். தலையின் உச்சிப்பகுதி பூமியில் பட்டுக் கொண்டிருக்க தோள்களும் தலையும் தரையிலிருந்து உயர்ந்திருக்கவேண்டும்.

2. தலையை முறைப்படி வைப்பதற்கு கைகளைப் பயன்படுத்தவும்.

3. சர்வாங்காசனம் செய்தால் கட்டாயம் இவ்வாசனம் செய்ய வேண்டும். சர்வாங்காசனம் 10 நிமிடங்கள் செய்தால் 03 நிமிடங்களாவது இவ்வாசனத்தைச் செய்யவேண்டும்.

***பலன்கள்***

சுவாசப் பைகளுக்கு சிறந்த முறையில் பிராணவாயு செல்வதால் அஸ்மா நீங்குகின்றது. மார்பு விரிவடைகின்றது. பொதுவாக நுரையீரலோடு சம்பந்தப்பட்ட சகல நோய்களும் நீங்குகின்றது.

வயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்தவர்கள் மூன்று மாதத்தின் பின் செய்யலாம்.

## 04. சாந்தியாசனம் அல்லது சவாசனம்.

வசதிக்கேற்ப மல்லாந்து படுத்துக் கொள்ளுங்கள். உடல் அவயங்கள் அனைத்தும் நன்கு தளர்ச்சி அடைந்து இருக்கவேண்டும். மனக்கண்ணினால் உடலை ஒரு தடவை பார்த்துக் கொள்ளுங்கள். மெதுவாகச் சுவாசியுங்கள். சுவாசத்தில் மனதைச் சிறிது நேரம் செலுத்துங்கள். இப்பொழுது கால் விரல்களில் இருந்த ஒவ்வொரு உறுப்பாக மனதைச் செலுத்தி குறிப்பிட்ட உறுப்புக்களை மனதினால் தளர்ச்சியடையச் செய்து ஆரோக்கியமடையச் செய்யுங்கள். உள் உறுப்புக்கள், வெளியுறுப்புக்கள் அனைத்தையும் உங்கள் இச்சா சக்தியால் தளர்ச்சியுற வைத்து ஆரோக்கியமடையச் செய்யுங்கள். கால் விரல்களில் ஆரம்பித்து தலைவரை செய்யுங்கள்.

ஆசனங்கள் செய்தபின் இறுதியாக இவ்வாசனம் செய்யப்பட வேண்டும். மிகவும் சக்தி வாய்ந்த ஆசனம் மன ஒருமைப்பாடு, மகிழ்ச்சி, புத்துணர்ச்சி, புதுத்தென்பு ஏற்படும்.

**எல்லோரும் ஆரோக்கியம் பெற வாழ்த்துக்கள்**

**ஓம் சாந்தி... சாந்தி... சாந்திஹி..**

**திரு. கா. சந்திரலிங்கம் (அதிபர்),**
கமு/கணேச மகா வித்தியாலயம், சேனைக்குடியிருப்பு,
கல்முனை,
(யோகப் பயிற்சி பெங்களூர்-இந்தியா).

## சீர்பாததேவி சிறுவர் இல்ல நிர்வாகசபை உறுப்பினர்களும், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களும் - 2007



முன்வரிசையில் இடமிருந்து வலம்: திரு. சி. மகேஸ்வரன் (செயலாளர்), திரு. க. கருணாகரன் (ந. சபை உறுப்பினர்), திரு. க. இரத்தினேஸ்வரன் (ந. சபை உறுப்பினர்), திரு. சி. அருளம்பலம் (ந. சபை உறுப்பினர்), திரு. இ. சகாதேவன் (ந. சபை உறுப்பினர்), திரு. தா. வினாயகமூர்த்தி (பணிப்பாளர்).

பின்வரிசையில் இடமிருந்து வலம்: திரு. இ. விக்கினேஸ்வரன் (பொருளாளர்), திரு. ச. கிருபாகரன் (தலைவர்), திரு. ப. லவகுமார் (ந. சபை உறுப்பினர்), திரு. மா. உதயராஜன் (ந. சபை உறுப்பினர்), திரு. மு. செல்வக்குமார் (உப தலைவர்), திரு. யு. அருணகிரிநாதன் (உப செயலாளர்).

## ஐந்தாண்டு சேவையில் பொருளாக உதவிக்கரம் கொடுத்து சேவைக்கு உரமிட்ட உயர்ந்த உள்ளங்களின் விபரம்

## 2003

| | |
|---|---|
| ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம், வீரமுனை | கட்டடம், 1.25 ஏக்கர் இல்லம் அமைந்துள்ள நிலப்பரப்பு |
| ஸ்ரீசத்ய சாயி மண்டலி, வீரமுனை | நீர்த்தொட்டி |
| நாவிதன்வெளி (D.S) OFFICE. | கதிரை , ரீப்போ |
| S. சிதம்பரம் , பாடசாலை வீதி, வீரமுனை. | தளவிரிப்பு |
| M. வேலாயுதம், கல்முனை . | மின்விசிறி |
| திருநாவுக்கரசு நாயனார் குருகுலம், திருக்கோயில் | பென், பென்சில் |
| K. சுந்தரலிங்கம் , வீரமுனை | சுவர்க்கடிகாரம் |
| S. கணேஸ்வரன் ஆண்டி சந்தி வீதி, வீரமுனை. | வாட்டா , கொம்பாஸ் |
| S. சந்திரமோகன் 'தினேஷகம்', மத்திய வீதி,காரைதீவு | மின்னழுத்தி |
| வே. குகனேந்திரராஜா 'வசந்தம்', காரைதீவு-05. | கொப்பி |
| V. கனகம்மா, வீரமுனை | சில்வர் கப் |
| S. பாக்கியம் , சின்னக்கோயில் வீதி, வீரமுனை-03. | தளவிரிப்பு |
| திருமதி. திருநாவுக்கரசு, கல்முனை. | சாப்பாட்டு கோப்பை |
| மு. கருணாகரம், மட்டக்களப்பு. | நீர் பம்பி, கதிரை, சமயப்புத்தகங்கள் |
| S. கோணேசமூர்த்தி, ஆண்டி சந்தி வீதி, வீரமுனை. | மின்னழுத்தி, கொப்பி, பென்சில், புத்தகப்பை |
| (VIIT) இல் கல்வி கற்கும் காதைதீவு கிராம மாணவர்கள் | தளவிரிப்பு, சாப்பாட்டுகோப்பை , கப் , நீர்சாடி , கொப்பி |
| V.K. தாமோதரம், சின்னக்கோயில் வீதி, வீரமுனை-03 | பிளாஸ்ரிக்கதிரை, |
| S. சிவசுந்தரமூர்த்தி , சின்னக்கோயில் வீதி, வீரமுனை-03 | சமையல் பாத்திரம் |
| K கருணாகரன் , சின்னக்கோயில் வீதி, வீரமுனை-03. | சமையல் பாத்திரம் |
| R. பிரசாத், கல்முனை. | மின்னழுத்தி மேசை |
| R. சகாதேவன், சின்னக்கோயில் வீதி, வீரமுனை-03. | சாமிபடம் |

| | |
|---|---|
| S. கனகரெத்தினம், வில்லியம் வீதி, மணற்சேனை | கொப்பி |
| S. செல்வரெட்ணம், கோயில் வீதி, வீரமுனை. | தலையணை உறை |
| அமரர். S. சுகிர்தராஜன், மில்லடி வீதி, வீரமுனை. | சுவர்க்கடிகாரம் |
| K. பொன்னம்பலம், வாடிவீட்டு வீதி, கல்முனை. | மின்விசிறி |
| T. சிவசுப்ரமணியம், சின்னக்கோயில் வீதி, வீரமுனை | மேசை |
| M. இராமக்குட்டி, நாவிதன்வெளி. | சீருடை |
| T. அழகையா, மட்டக்களப்பு. | வானொலிப்பெட்டி |
| S. சுவேதகுமார், கோயில் வீதி, வீரமுனை. | சீமெந்து |
| K. சந்திரமோகன், T. மணிவண்ணன்,<br>P. நடராஜன், M. சந்திரசேகரம் | தொலைக்காட்சிப்பெட்டி |
| S. யோகராஜா, பாலையடிப்பிள்ளையார் கோயில் வீதி,<br>காரைதீவு. | சப்பாத்து |
| A. உமாமகேசன், கோயில் வீதி, வீரமுனை. | மின்விசிறி |
| றொட்டரிக் கழகம், கல்முனை. | வெற்சீட், பென், பென்சில்,<br>கொப்பி, பயில் மட்டை. |
| லயன்ஸ் கழகம், கல்முனை. | கதிரை, மேசை. |
| திருமதி. வடிவேல், மட்டக்களப்பு | குடைகள் |
| I. செல்வராஜா, வீரமுனை | பந்து |
| R. விக்கினேஸ்வரன், அலிவன்னியார் வீதி, வீரமுனை | மின்குமிழ்கள் |
| K. துரையன், வீரமுனை | பென், பென்சில் |
| T. வினாயகமூர்த்தி, சின்னக்கோயில் வீதி, வீரமுனை. | கப் |
| S. பிரகலாதன், ௰ம் கிராமம், நாவிதன்வெளி. | தகரம், கத்தி. |
| M. ரவிச்சந்திரன், பாண்டிருப்பு | கொப்பி, பென், பென்சில். |
| A. கண்ணன், கொழும்பு | கொப்பி, பென்சில், அழிறப்பர். |
| (VIIT) நிறுவனதின் ஏற்பாட்டில் காரைதீவு மத்திய கல்லூரி<br>ஆசிரியர்கள் | நீரிணைப்பு |
| HNB உத்தியோகத்தர்கள், கல்முனை | மின் இணைப்பு |

## 2004

| | |
|---|---|
| USAID நிறுவனம் | கட்டடம், நீர்த்தாங்கி, கட்டில், மேசை, பிளாஸ்ரிக் கதிரை, நுளம்பு வலை, மெத்தை |
| விவேகானந்தா விளையாட்டு கழகம், காரைதீவு. | வெற்சீற் |
| Rotary Club, மட்டக்களப்பு. | கணனி , உடை |
| சுவாமி தந்திரதேவா, திருகோணமலை. | துவிச்சக்கரவண்டி, புத்தகப்பை |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், கொட்டாஞ்சேனை | கொப்பி |
| S. ராஜ்குமார், கோயில் வீதி, வீரமுனை. | 5ம் தரத்திற்கான புலமைப் பரிசில் புத்தகம் |
| திருமதி. V. யசோதா, விஷ்னு கோயில் வீதி, காரைதீவு. | கிளாஸ் |

## 2005

| | |
|---|---|
| சின்னப்பு மகேஸ், பிரான்ஸ். | அலுமாரி |
| B. கமல்ராஜ், மத்தியமுகாம். | கொப்பி |
| திரு,திருமதி.சுந்தரலிங்கம்(இலண்டன்) ஊடாக **Pfizer Europe** அனுசரணையுடன், திருச்செல்வம் போடியாரால் (குறுமண்வெளி) | முச்சக்கரவண்டி |
| P. இராஜேந்திரன், கொழும்பு. | அலுமாரி |

**"தனிமுதலைப் பார்த்துத் தனித்திருந்து வாழாமல்**
**அணியாய மாய்ப்பிறந்திங்கு**
**அலைந்துநின்றேன் பூரணமே"**

**- பட்டினத்தார் -**

## 2006

| | |
|---|---|
| சுவாமி தந்திரதேவா, திருகோணமலை. | கொப்பி |
| றொட்டரிக்கழகம், மட்டக்களப்பு. | சீருடை (நீலம், வெள்ளை) |
| றொட்டரிக்கழகம், கண்டி. | TV, CD Player, TV Stant, துவிச்சக்கர வண்டி,நுளம்புவலை பென், பென்சில், கொப்பி, Signal, சவர்க்காரம்,தலையணை, தலையணையுறை, சாரன் பயிற்சிபுத்தகம், கல்விசார்படம் , துடுப்பாட்டமட்டை, கரம்போட், பந்து ,வெற்மின்ரன் , இலங்கைப்படம் , உலகப்படம் |
| சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் | புத்தகப்பை, பென், பென்சில் |
| K. கோபாலசுந்தரம், சுவிறசலாந்து. | மின்பிறப்பாக்கி,CD பிளயர் மேசை, வெளிநாட்டு திண்பண்டங்கள், |
| G. சிவராம் | கணனி, பிளண்டர், கப், வெற்சீற், தலையணையறை |
| ADVRO இலண்டன் | உழவு இயந்திரம் |
| தமிழ் தகவல் தொழில்நுட்பம்,கல்முனை. | கணனி மேசை |
| B. கமல்ராஜ் | சேட் துணி |
| **SWOAD**, வீரமுனை. | ரீசேட், காற்சட்டை |
| நஜீமுடின், சம்மாந்துறை. | ஷம்போ, வேக், துவாய், சீப்பு, கைக்குட்டை, சிக்னல் |

## 2007

| | |
|---|---|
| காரைதீவு இராம கிருஷ்ண மிஷன் பெண்கள் இல்லம் | தையல்இயந்திரம் |
| சிறுவர்நன்னடத்தை திணைக்களம், கல்முனை. | பயிற்சி புத்தகம், நூல் நிலைய புத்தகங்கள் |
| C. நந்தகுமார், தபால் வீதி, காரைதீவு. | இறப்பர் வாளி , பந்து , துடுப்பாட்டமட்டை பிளாஸ்ரிக்வேசன் |
| V. கணேசமூர்த்தி, சுவிஸ் | பிரதான நுழைவாயில் கேற் |
| S. தயானந்தி, இலண்டன் | உள் நுழைவாயில் கேற் |
| T. ரவிராஜ், இலண்டன். | புகைப்படக்கருவி |

| | |
|---|---|
| குமுதினி துரைரெட்ணம், நெசவடி வீதி, பாண்டிருப்பு. | சத்தமிடும் கிளிக்கூடு, பூவாஸ் |
| சா. சுதேந்திரன், கோயில் வீதி, வீரமுனை. | கீதாசாரம் , கப் |
| N.G.O. CONSORTIUM, அக்கரைப்பற்று. | கணனி, கணனி மேசை, கதிரை பிரிண்டர், Scanner |
| P. முத்துலிங்கம், பெரியகல்லாறு | குடைகள் |
| S. நளாயினி , நோர்வே | உடை |
| WORLD VISION, மணற்சேனை. | துவிச்சக்கரவண்டி , சீருடை . |
| சிறுவர் நன்னடத்தை திணைக்களம். | புத்தகப்பை, கரம்போட், பந்து, பொம்மை |
| Rotary Club, கண்டி | கதிரை,மேசை,அலுமாரி, கேஸ்அடுப்பு , இட்லிசட்டி, மெத்தை, புத்தகம் சிறுவர்களுக்கான அனைத்து உடைகளும், சலவைத்தூள், வாட்டா, சப்பாத்து, சொ க்ஸ், சமையல்பாத்திரங்கள், பென்சில், கொப்பி, பென், வெற், சிக்னல், விறஸ், ஓடிக்குலோன், பவுடர், சோப், டிற்ரோள், அழிறப்பர், ரூளர், பசைப்போத்தல், ரிவக்ஸ், கத்தரிக்கோல், STAPLER ,(PIN) வெற்சீற் , விறிஸ்ரல்வோட், சித்தாலேப, சன்சில்க், |
| அமரர். S. சுகிர்தராஜன் , மில்லடி வீதி,வீரமுனை | மின்குமிழ் |
| J. நடராஜா கோயில் வீதி,வீரமுனை | தீந்தை |
| திரு. திருமதி. தாமோதரம், வீரமுனை | சீர்பாததேவி உருவச்சிலை |

## 2008

| | |
|---|---|
| சுனாமியினால் உயிரிழந்தோர் உறவினர் சங்கம் (A. முரளிதரன், பாண்டிருப்பு) | பாடசாலைப்பை, கொப்பி,பென், பென்சில், தொப்பி, துடுப்புமட்டை. |
| சுவாமி தந்திரதேவா | கொப்பி |
| திருமதி. S. நளாயினி, நோர்வே | உடை |

## ஐந்தாண்டு சேவையில் நிதிக்கரம் தந்த உயர்ந்த உள்ளங்களின் விபரம்

### 2003

| | |
|---|---|
| சிந்தாயாத்திரைப்பிள்ளையார் ஆலயம் | வீரமுனை |
| தயாநிதி | இலண்டன் |
| V. கோவிந்தசாமி | வீரமுனை |
| P. சரவணபவன் | கனடா |
| K. கோபாலசுந்தரம் | சுவிஸ் |
| சிவம் | வீரமுனை |

### 2004

| | |
|---|---|
| சந்திரகுமாரன், சூரியகுமாரன்,<br>அண்ணாமலை, விஜயகுமாரன், | சுவிஸ் |
| சிந்தாயாத்திரைப்பிள்ளையார் ஆலயம் | வீரமுனை |
| S. ரவீந்திரகுமார் | குவைத் |
| K. கோபாலசுந்தரம் | சுவிஸ் |
| T. அருச்சுனன் | இலண்டன் |
| S. நித்தியானந்தம் | |
| A. சந்திரநேரு | திருக்கோயில் |
| ADVRO | இலண்டன் கிளை |
| திருமதி. யோகராசா | திருகோணமலை |
| திருநாவுக்கரசு | தம்பிலுவில் |
| S. ராஜா | வீரமுனை |
| S. கனகராஜா | இலண்டன் |
| செல்லத்துரை | இலண்டன் |
| M.B. சத்தார் | சம்மாந்துறை |
| M. தமிழ்மாறன் | பாண்டிருப்பு |
| TRO | மட்டக்களப்பு |
| M.I. பௌஸ்தீன் | சம்மாந்துறை |
| S. செந்தில்குமார் | |
| R. உருத்திரன் | கனடா |
| S. விஜயரெட்ணம் | பாண்டிருப்பு |
| A.C. ஜெமில் | சம்மாந்துறை |
| M. தேவராஜா | துறைநீலாவணை |
| S. லோட்சனன் | |

## 2005

| | |
|---|---|
| P. சரவணபவன் | கனடா |
| Dr. யோகதேவா | இலண்டன் |
| S. நளாயினி | நோர்வே |
| S. ஜெகநாதன் | இலண்டன் |
| சந்திரகுமாரன், சூரியகுமாரன், விஜயகுமாரன், அண்ணாமலை. | சுவிஸ் |
| குகநாதன், கிருபைநாதன் | அக்கரைப்பற்று |
| T. சுபாஸ் | சேனைக்குடியிருப்பு |
| S. சேவற்கொடியோன் | |
| YSLAM | கனடா |
| T. ரவிராஜ் | இலண்டன் |
| K. கோபாலசுந்தரம் | சுவிஸ் |
| N. முகுந்தகுமார் | இலண்டன் |
| சுவாமி நித்தியானந்தா | இந்தியா |

## 2006

| | |
|---|---|
| K. செல்வராஜா | சேனைக்குடியிருப்பு |
| S. நளாயினி | நோர்வே |
| G. சிவராம் | கொழும்பு |
| S. ஜெகநாதன் | இலண்டன் |
| இந்துசமய கலாசார திணைக்களம் | கொழும்பு |
| P. இராஜேந்திரன் | மட்டக்களப்பு |
| சிறுவர் நன்னடத்தை திணைக்களம் | திருகோணமலை |
| K. சிவகுமார் | பாண்டிருப்பு |
| ADVRO | கல்முனை |
| S. ஸ்ரீனிவாசன் | இங்கிலாந்து |
| Dr. M. பாலசேகரம் | இங்கிலாந்து |
| Dr. K. கிருஸ்ணகுமார் | பாண்டிருப்பு |
| வதனி அல்வின் | நோர்வே |
| V. சுந்தரலிங்கம் | இலண்டன் |
| N. புவனேந்திரன் | இலண்டன் |
| தாதியர் பயிற்சி கல்லூரி | மட்டக்களப்பு |
| அருள் | மலேசியா |
| N.G.O.CONSORTIUM | அக்கரைப்பற்று |
| தம்பியப்பா மகேந்திரன் | காரைதீவு |

## 2007

| | |
|---|---|
| S. ஜெகநாதன் | இலண்டன் |
| S. கனகராஜா | இலண்டன் |
| F. தவராணி | சுவிஸ் |
| V. கோவி | இலண்டன் |
| சிறுவர் நன்னடத்தை திணைக்களம் | திருகோணமலை |
| குணசீலன் தரணியா | சேனைக்குடியிருப்பு |
| N. கங்காதரன் | சேனைக்குடியிருப்பு |
| வதனி அல்வின் | நோர்வே |
| ரஜனிக்காந்த் | காரைதீவு |
| S. தில்லைநாதன் | மட்டக்களப்பு |
| N.G.O.CONSORTIUM | அக்கரைப்பற்று |
| இந்துசமய கலாசார திணைக்களம் | கொழும்பு |
| M. சிறிஸ்காந்தன் | இலண்டன் |
| G. சிவராம் | கொழும்பு |
| S. கருணைரெட்ணம் | குருமண்வெளி |
| S. கஜன் | காரைதீவு |
| V. முருகேசபிள்ளை | காரைதீவு |
| K. கருணாகரன் | மட்டக்களப்பு |
| சிவானந்தா பழைய மாணவர் சங்கம் | இலண்டன் |
| குணசீலன் பிரணவி | குருமண்வெளி |
| M. நஸீர் | இலண்டன் |

## 2008

| | |
|---|---|
| ADVRO | இலண்டன் |

## வா. கிருஸ்ணகுமார்

ஊடகவியலாளர்

# வீரமுனையும் அதன் வளர்ச்சியும்.

வீரமுனை மக்களின் கொடையின் வெளிப்பாடாக உள்ள சீர்பாததேவியின் பெயரில் உருவான இந்த சிறுவர் இல்லத்தின் ஆண்டு மலரில் எனது சிறிய கட்டுரையை பொறிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எனக்கு புத்தியறிந்த நாள் எமது கிராமத்தின் வரலாறுகள், இயற்கையை அணுவணுவாக ரசித்தவனில் நானும் ஒருவன். அத்தோடு இந்த கிராமத்தின் அழகு வேறு எங்கும் இல்லை என்று நினைப்பவனில் நானும் ஒருவன்.

இக்கிராமம் அதிக வளர்ச்சி கண்டுள்ளதை எண்ணி மிகவும் பெருமை அடைபவர்களில் நானும் ஒருவனாக இருக்கின்றேன் என்பதை எண்ணும்போது அதுவே எனக்கு பெருமையாக இருக்கின்றது. 1990ஆம் ஆண்டு எமது கிராமம் இனவாதம் நோக்கம் கொண்டவர்களினால் அழிக்கப்பட்டபோது எமது மக்கள் எமது கிராமம் விட்டு துரத்தப்பட்டபோது பல்வேறு வேதனைகளையும், வலியையும் சுமந்து நின்றவர்கள்.

வலியும் வேதனையும் ஒரு மனிதனை அவனது நிலையில் இருந்து உயர்த்துவதற்கும் பயன்படும் அல்லது அவனை இல்லாமல் செய்வதற்கும் பயன்படுத்தப்படும். இந்த வகையில் கிராமத்து மக்கள் அன்று சுமந்த வலியும் வேதனையும் இன்று இன்பத்தின் தொட்டியாக மாறி நிற்கின்றது.

1988ஆம் ஆண்டு நாங்கள் இனவாதிகளால் தாக்கப்பட்டபோது வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தினுள் அகதிகளாக தஞ்சம் அடைந்திருந்தோம். அதன்பின் எமது மக்களின் சொத்துக்களும், உயிர்களும் தொடர்ச்சியாக சூறையாடப்பட்ட நிலையில் எமது மக்கள் 1990ஆம் ஆண்டு முற்றாக தங்களது இருப்பிடத்தைவிட்டு உடுத்த ஆடையுடன் விரட்டியடிக்கப்பட்டார்கள். எமது சமூகம் பல்வேறு திசைகளிலும் பிரிந்து சென்று அனாதரவாக நின்றது. கூட்டுக்குடும்பம் போல் பல கிராமங்களில் எமக்கு பலர் வரவேற்பு தந்த போதும், சில கிராமங்களில் சிலர் எம்மை தூற்றிய சம்பவத்தினையும் கண்ட அனுபவத்திலும் நானும் ஒருவன்.

ஆயிரக்கணக்கானவர்களை அரவணைத்த எமது கிராமம் அரவணைக்க கைகள் இல்லாமல் இருந்த போது எதிர் காலமே கேள்விக் குறியான காலமாக எமது மக்களுக்கு இருந்தது. இவ்வாறான பற்பல துன்பங்களை சுமந்த வீரமுனை மக்கள் 1992ம் ஆண்டு மீண்டும் தம் மண்ணுக்கு செல்லும் காலம் வந்ததும் அவ்வளவு காலம் பட்ட வேதனைகள் நீங்கி புத்துணர்ச்சி கொண்டவர்களாக வீரமுனை மண்ணில் காலடியெடுத்து வைத்தார்கள்.

பல கிராமங்களில் பெற்றுக்கொண்ட பட்டறிவு அவர்களை பட்டை தீட்டியது. இலங்கையிலேயே மோதலில் முற்றாக பாதிக்கப்பட்டு குறுகிய காலத்துக்குள் மிக சிறப்பான எழுச்சியை பெற்ற கிராமம் வீரமுனை கிராமம்தான் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாக மாற்றி அமைத்துள்ளார்கள்.

நான் இலங்கையின் அனேக இடங்களுக்கு சென்றுள்ளேன் அவ்வாறான இடங்களில் எவ்வளவோ வசதியிருக்கும் ஆனால் முன்னேற்றம் இருக்காது. காரணம் அவர்கள் முன்னேற்றத்தில் ஈடுபாடு இல்லாமல் ஏதோ வாழ்ந்தால் போதும் என்ற மனப்பான்மையுடன் இருப்பதுதான். வீரமுனை மக்கள் இவை எல்லாவற்றுக்கும் விதி விலக்காக இருந்து குறுகிய வளங்களை கொண்டு இன்று சிறப்பான வாழ்க்கை அமைத்துள்ளார்கள் என்பதற்கு சான்றாக இருப்பது வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்லமாகும்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிடுவதில் முக்கியமான கருவியாக பயன்படுவது சேவையென்பது போல் ஒரு கிராமத்தின் அபிவிருத்தியை அளவிடுவது அவ்வாறான சேவை நோக்கோடு செய்யப்படும் தன்மையை பொறுத்து அளவீடு செய்யப்படுகின்றது. "தனக்கு மிஞ்சியது தான் தானம்" என்பது பொய்யாகி தனக்கு இல்லா விட்டாலும் தானம் செய்வோம் என உரைத்து நிற்கும் வீரமுனை கிராமத்தின் வளர்ச்சிப் போக்கு எம்மை கர்வம் கொள்ள வைக்கின்றதாயினும் வீரமுனை மண்ணில் உள்ள சில குறைபாடுகளாயினும் சுட்டிக்காட்டும் பொறுப்பு அந்த மண்ணில் பிறந்த எனக்கு உள்ளது என நினைக்கின்றேன்.

எமது மண்ணில் உள்ள சிலர் எமது மண்ணில் இருந்து வேறு இடங்களுக்கு தவிர்க்க முடியாமல் குடிபெயர்ந்து செல்வோரையும் வேறு மண்ணில் இருந்து நமது மண்ணுக்கு கவரப்பட்டு குடிபெயர்ந்து வருவோரையும் " வந்தான் வெறுத்தான் " என்று கூறி எள்ளி நகையாடுவது வேதனைக்குரிய விடையமாகவே நான் கருதுகிறேன் .

வீரமுனையின் அபிவிருத்தியில் வீரமுனையில் உள்ளவர்கள் மட்டும் தான் காரணம் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு உதாரணமாக மறைந்த அதிபர் அமரர் இராஜேந்திரம் ஐயாவை குறிப்பிடலாம். எனக்கு அறிவு தெரிந்த நாள் தொடக்கம் வீரமுனையின் கல்வியை உயர்ந்த இடத்துக்கு கொண்டு வருவதற்கு மூலகாரணம் அமரர் இராஜேந்திரம் ஐயா என்பது மறுக்க முடியாது. இன்று வீரமுனையில் சகல தரத்திலும் கற்றவர்கள் இருக்கின்றார்கள் என்றால் அதற்கு அமரர் இராஜேந்திரம் ஐயாவும் ஒரு காரணம் என்றால் அதை மறுக்க முடியாது.

ஒரு கிராமத்தின் வளர்ச்சியை அளவிடுவது கல்வி முக்கியமாகும் அந்த வகையில் வீரமுனை கிராமத்தின் வளர்ச்சிக்கு அமரர் இராஜேந்திரம் ஐயாவும் ஒரு மூல காரணம் என்பதை மறுக்க முடியாது. வீரமுனை கிராமத்துக்காகவே தன்னுயிரை வழங்கிய கொடையாளி இவ்வாறான ஒருவர் தமது கிராமத்தில் இருந்துவேறு கிராமம் சென்றும் அங்கிருந்தும் எமக்கு சேவை செய்துள்ளார். அது மட்டுமல்ல பல அரசியல் வாதிகளை தொடர்பு கொண்டு பலசேவைகளையும் வீரமுனை மண்ணுக்கு பெற்றுக் கொடுத்துள்ளார். என்னை பொறுத்தவரை வீரமுனை கிராமத்தை சேர்ந்தவன் எங்கு எப்படி இருந்தாலும் "நான் வீரமுனையான்" என்றே தன்னை கூறிக்கொள்வேன்

அத்தோடு நமது கிராமம் இன்னும் முன்னேற வேண்டும் என எண்ணிக் கொண்டு இருப்பேன் காரணம் சில மாறுபட்ட அறிவை செல்லும் இடங்களில் பெறும் போது அது தமது கிராமத்தின் வளர்ச்சிக்கு என்றாவது உறுதுணையாக இருக்கலாம்.

அவர் பெரும் பட்டறி நமக்கும் முன்னேற்ற பாதைக்குரிய படியாக அமையலாம் வீரமுனை மக்கள் அகதிகளாக சென்ற போது பட்ட பட்டறிவே இன்று அவர்களை இன்று உயர்ந்த இடத்தில் வைத்துள்ளது. எனவே இனி வரும் சந்ததிகள் எமது மண்ணை மேலும் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும் பாதைகள் தென்படும் போது அதில் பயணிக்க தயாராக இருக்க வேண்டும். அதற்காக எம்மில் உள்ள சிந்தனைகளை விடுத்து அனைவரையும் அரவணைக்க தன்னை பழக்கப்படுத்தி கொள்ள வேண்டும்

அதே போன்று வீரமுனையை விட்டு வேறு இடங்களிலுள்ளவர்களும் தாய் மண்ணின் பெருமையை என்றும் மறக்க கூடாது.

சிலர் தமது நிலை உயர்ந்தவுடன் கலாச்சார மோகத்தில் ஈர்க்கப்பட்டு தமது பிறந்த ஊரின் பெயரையே உச்சரிக்க வெட்கப்படுகின்றனர். வீரமுனையைச் சேர்நத சிலரும் அவ்வாறு உள்ளனர். இதை இனியாவது மாற்றி வீரமுனையை மேலும் உயர்நிலைக்கு கொண்டு செல்ல இச்சந்தர்ப்பத்தில் வீரமுனை மக்களோடு கைகோர்ப்போம்.

***வா. கிருஸ்ணகுமார்,***
***ஊடகவியலாளர்.***

# இல்லம் தொடர்பாக நாளேடுகளில் பிரசுரிக்கப்பட்டவற்றில் இருந்து........



21/02/2007

## ஆதரவற்ற சிறுவர்களுக்கு உதவும் இல்லம்

THINAKARAN ...SDAY JANUARY 19, 2005

(துறைநீலாவணை நிருபர்)

சுனாமி பேரலை மற்றும் வேறு காரணங்களால் தாய்-தந்தையரை இழந்து ஆதரவற்ற நிலையில் வாழும் ஆறு வயதிற்கும், பன்னிரெண்டு வயதுக்குமிடைப்பட்ட சிறுவர்களை பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் பூரண சம்மதத்தின் பேரில் பொறுப்பேற்று பராமரிக்க வீரமுனையில் இயங்கும் சீர்பாததேவி சிறுவர் இல்லம் முன்வந்துள்ளதாக இவ் இல்ல பணிப்பாளரும், பொறியியலாளருமான தா. விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

இவ்வாறு ஆதரவற்ற நிலையில் வாழும் சிறுவர்களின் எதிர்கால நலனில் அக்கறைகொண்டவர்கள் 067/2261144 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது பணிப்பாளர், சீர்பாததேவி சிறுவர் இல்லம், வீரமுனை, ...மாந்துறை என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு ...கேட்கப்படுகின்றனர். (ன)

3 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் 'சீர்பாத தேவி சிறுவர் இல்லம்'





தினக்குரல் 12 ஜூலை 2004



வீரமுனை சீர்பாத தேவி சிறுவர் இல்லம்

## அநாதைச் சிறாருக்கு ஆதரவு தர ஆலயங்கள் முன்வர வேண்டும்!

... நவம்பர் 13, 2003

Virakesari Saturday 13th October 2007

### சீர்பாததேவியின் சிலை திறப்பு விழா



THINAKARAN THURSDAY FEBRUARY 01

## சீர்பாத தேவி சிறுவர் இல்லத்திற்கு உழவு இயந்திரம் அன்பளிப்பு

(துறைநீலாவணை நிருபர்)

யுத்தம் மற்றும் சுனாமி அனர்த்தம் காரணமாக தமது பெற்றோரை இழந்து, ஆதரவற்ற நிலையில் உள்ள சிறுவர்களைப் பராமரிக்கும் இல்லங்களில் ஒன்றாக விளங்கும் அம்பாறை மாவட்டத்திலுள்ள சீர்பாத தேவி சிறுவர் இல்லத்திற்கு அம்பாறை மாவட்ட விபுலானந்தா ... கழகம், மட்டக்களப்பு நலிவுற்றோர் முன்னேற்றக் கழகம் என்பன ஒன்றிணைந்து சுமார் ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் பெறுமதியான உழவு இயந்திரம், பெட்டி, கலப்பை என்பவற்றை அன்பளிப்புச் செய்துள்ளன.

வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்ல பொறுப்பாளரும், பொறியியலாளருமான தா. விநாயகமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தஜீ மகராஜ் ... அதிதியாக கலந்துகொண்டு உழவு இயந்திரத்தை இல்லப் பொறுப்பாளர் தா. விநாயகமூர்த்தியிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் ஏ. செல்வா, வீ. ராஜசேகர் உட்பட பலர் கலந்துகொண்டனர். இவ் இல்லப் பொறுப்பாளர் தா. விநாயகமூர்த்தி கருத்துரைக்கையில்:

இவ் இல்ல வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும், ஆதரவற்ற சிறார்களின் எதிர்கால நலன்கருதி இத்தகைய உதவியை அளிக்க அம்பாறை மாவட்ட விபுலானந்தா பணிவாழ்வுக் ...

Virakesari Wednesday 07th November 2007



## சீர்பாத தேவி சிறுவர் இல்லம்

... ம் புத்தாண்டு மங்களகரமாக அமையட்டும்

பூ. பரமதயாளன்,
ஆசிரியர்,

# எண்ணம் போல.......

இன்றைய நவீன கால கட்டத்தில் மனிதன் தனது தேவைகளை இலகுவாக நிறைவு செய்ய எவ்வளவோ ஆக்க பூர்வமான முன்னெடுப்புக்களைக் கையாண்டு வெற்றி கண்டுள்ள போதிலும் இயற்கையில் மனிதன் ஏற்படுத்திய மாற்றங்கள் இன்று பல புதிய பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு எம்மை ஆளாக்கியுள்ளது. அதில் முக்கியமானதாக புவி வெப்பமடைதலின் பிரதான காரணங்களான யுத்தம், அணுவாயுத சோதனைகள், காடழிப்புக்கள் என அடுக்கிக் கொண்டே போகலாம். அவற்றின் பக்கவிளைவுகளாக நாம் இன்றைய சிறுவர் இல்லங்களையும், அனாதரவானோர் பராமரிப்பு நிலையங்களையும் கூறமுடியும்.

மனிதனை மனிதன் எப்போது மனிதனாக மதிக்கும் மனிதத்தை மறந்தானோ, மனிதனை மனிதன் அழித்துக்கொன்று குவிக்கும் மட்டமான நிலைக்கு எப்போது ஆளானானோ அப்போதே அவன் இயற்கையோடு போராடவேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு விட்டான். இவற்றுக்கான காரணங்களை நாம் ஆராய்ந்து வருகையில் கடைசியாக எல்லாவற்றிற்கும் காரணம் மனித மனம்தான் என உளவியல்துறை எடுத்துச்சொல்கிறது.

இந்த மனம் நம்மிடந்தான் உள்ளது. ஆனால் அது என்ன? எங்கே இருக்கின்றது? என்று தெரியாமலே மனந்தான் இவற்றிற்கு மூல காரணி என்றால் மனம் எனும் மாயை எங்கனம் இதனை நிகழ்த்த முடியும்? முடியும். ஏனெனில் மனம் நினைத்ததைச் செய்யக்கூடிய அற்புத ஆற்றல் கொண்டது. **"மனம்"** இச்சொல்லை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தாதவர்களே இல்லை எனலாம். அப்படியாயின் அது என்ன?

பொதுவாக வெளியுலக அனுபவங்களை நாம் ஐம்புலங்களினுடாக உணருகின்றோம். ஆனால் இவ் ஐம்புலன்களையும் தாண்டி உணர்வுகளைத் தரவல்ல சக்தி மனதிற்குண்டு. உளவியலிலே மனம் பற்றிய ஆராய்ச்சியில் இவை உறுதிப்படுத்தப்படுகின்றது. வெளிமனம், உள்மனம், மறைமனம் என்கின்ற மனித செயற்பாடுகளினுடாக இவை புலனாகின்றது.

வெளி மனம் பற்றி நோக்கும்போது இது ஐம்புலன்களை அடிப்படையாக கொண்டு இயங்குகின்றது. ஆராய்ச்சி, விவாதம், பகுத்தறியும்திறன், அபிப்பிராயம் என்பன இம் மனதின் சிறப்புக்கள். உண்பது, உடுப்பது என சகல கருமங்களையும் இவ் வெளிமனதே ஆற்றுகின்றது. மனதினை பத்து பகுதிகளாக வகுத்தால் அதில் ஒன்பது பகுதி உள்மனமாகும். இச்சைக்கு அடங்காமல் உணர்வுக்கு அப்பால் ஒளிந்திருக்கும் மனமே இது. இதன் சக்தி, செயல், திறன், அதன் இலக்கணம் எதுவுமே எமக்குத் தெரிவதில்லை. இதனை அணுகி அதன் உதவியை அடைந்தால் மனிதனால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை எனலாம். மறை மனம் இது கண்ணின்றிப் பார்க்கும், காதின்றிக் கேட்கும், மூக்கின்றி நுகரும், நாக்கின்றி ருசிக்கும், தோலின்றி ஸ்பரிசிக்கும். வெப்பம், குளிர், வலி எனும் உணர்ச்சிகளை தொடாமலே உணரும்.

உள்மனதை உத்தமனாகக் கொண்டால், அவனை காவல் காக்கும் காவலாளியாக வெளிமனதைக் கொள்ளலாம். எனவே மனிதனது வெற்றி காவலாளியை சிறப்புற அணுகி உள்ளேயுள்ள உத்தமனை சந்திப்பதில்தான் உள்ளது. உள்மன வெற்றியை எப்படி அடையலாம்?

"கள்ளப் புலனென்னுங்
காட்டை வெட்டிக்
கணலிட்டெரித்திட்டால்
காணலாம் வீட்டை"

என கடுவெளிச் சித்தர் மனப்பண்புகளைச் சீராக்கும் வழிகளைத் தெளிவாக்கியுள்ளார். இம் மனச் சீராக்கத்திற்கு நாம் என்ன செய்யலாம்? வெளிமனச் செயற்பாடுகளுக்கு நாம் முக்கியத்துவம் வழங்க வழங்க அவ்வப்போது மட்டும் இயங்கும் நிரந்தர குணாதிசயமற்ற மனிதனாக மாறி விடுவோம். நீண்ட காலப்போக்கில் பயன்தரா மனிதனாக எம்மை மாற்றி விடும். எனவேதான் உள்மனம் மாற்றம் தொடர்பாக இன்று கல்வித் தொழிற்பாடுகள், தியானம், தளர்வுப் பயிற்சிகள், பிரார்த்தனை என்பன முக்கியத்துவம் பெறுகின்றது.

மனதைப் பழுது பார்த்தல் என்பது ஆசிரியர்கள் போன்ற வழிகாட்டிகள் அனைவருக்கும் பொருந்தும். நாம் கற்றுக் கொள்ளும் நுட்பங்களே பழுது பார்த்தலை இலகுபடுத்தும். இல்லாவிட்டால் பழுது பார்த்தலுக்கு பதிலாக பழுதாகி விடும். திடகாத்திரமான மனிதன் நோய்வாய்ப் படுவதும், சாதாரண மனிதன்கூட மகிழ்ச்சியாக இருப்பதும் இதனாலேயே ஆகும். மொத்தத்தில் "நினைப்பு நல்லாயிருந்தால் செயல் செழுமையாக இருக்கும். எண்ணம் பழுது பட்டால் எடுத்தது நிறைவு பெறாது, நினைப்பு நிறைவானதாக இருந்தால் நடப்பு எடுப்பாயிருக்கும்".

மனம் பற்றிய இன்னொரு விடயம் திரும்பத் திரும்ப நாம் ஆற்றும் காரியங்கள் நிலைக்கின்றன. எனவே மனதில் நல்லவற்றை உறுதிப்படுத்த எண்ணற்ற செயற்பாடுகளை ஆற்றவேண்டியுள்ளது. மற்றொரு வகையில் நாம் நம்மை உள்மனம்வரை உற்று நோக்கினால் தீய செயல்களை உறுதிப்படுத்த எத்தனை காரியங்களை எவ்வளவு காலம் செய்தோம் என்பது புலனாகும்.

எமது மனமானது எல்லை தாண்டிய செயற்பாடுகளில் ஈடுபட்டு எம்மை அதிசயிக்க வைக்கின்றது எனப் பார்த்தோம். மனதை விரிவடையச்செய்தால் தூரத்தையும், காலத்தையும் கடந்து சிலவற்றை நம்மால் உணரமுடியும். இதனை உளவியலாளர்கள் மிஸ்டிகா (Mystica) என்பார்கள். இவ் Mystica என்பதை ஆங்கிலத்தில் அர்த்தம் புரிய விளைந்தால் நுட்பமான பரந்த பிரபஞ்சப்பொருள் என பொருள் கொள்ள முடிகின்றது.

சரி மனதுக்கும் இந்த Mystica விற்கும் என்ன சம்மந்தம்?

சில சமயங்களில் பல நாட்களுக்கு அல்லது சில ஆண்டுகளுக்கு முன் கேட்டு ரசித்த பாடல் ஒன்றை நாம் நினைக்கும்போது அதே பாடலை நாம் எதிரிலேயே இருப்பவர் பாடக் கேட்கலாம். இன்னும் சில சந்தர்ப்பங்களில் பல ஆண்டுகளுக்கு முன் பிரிந்த உங்களது மனம் பிடித்தவர் ஒருவரை நினைக்கும் போது அவரே நேரிலோ அல்லது தொலைபேசியிலோ பேசக் கேட்டால் எப்படி இருக்கும்? இவை தற்செயல் நிகழ்வென நாம் எண்ணினாலும் மனம் பற்றிய உளவியலிலே இதனை "ஓர் இடத்தில் ஏற்படுகின்ற எண்ண அலைகள் அதே எண்ண அலைகளைக் கொண்ட இன்னுமொரு இடத்தை அடைகின்ற போதே இவ்வாறான சம்பவங்கள் நிகழ்கின்றது" என்பார்கள்.

இங்கு மனதில் மகத்தான சக்தி புலப்படுகின்றதல்லவா. எனவே மனம் இன்னொரு மனதோடு தொடர்பு படுவதை புரிந்து கொள்ள முடிகின்றது. இதன் அடிப்படையிலேயே இன்று Telepathy பற்றிப் பேசுகின்றார்கள். அதாவது தொலைவில் உள்ள ஒன்றை நாம் இருக்கின்ற அதே இடத்திலிருந்து அறிவதை அல்லது உணர்வதை Telepathy எனக் குறிப்பிடுகின்றனர். இன்றைய நவீன ஆராய்ச்சிகள் கூட இதனை சாத்தியமானதாக ஒப்புக் கொள்கின்றது. எனவே எந்தவொரு செயற்பாடாக இருந்தாலும் அதற்கு மூல காரணமாக அமைவது மனமும் அதில் எழுகின்ற எண்ணங்களுமே என்பது தெளிவு.

தீதாகப் புலனானவற்றை நாம் உணர்கின்றோம் என்ற எண்ணமே தீயவற்றை வலுவிளக்கச் செய்து விடும். இங்கு தீதும் நன்றும் நம் மனதுள்ளே என்பது புலப்படுகின்றது. நோய்களைத் தவிர்த்து தூக்கத்தைச் சீராக்கி தாழ்வு மனப்பான்மையைப் போக்கி சமூக உறவுகளைப் பேணி நல்ல நட்பு தன்னம்பிக்கையுடன் கூடிய பிரார்த்தனை என்பன மனிதனை மேல் நிலைக்கு கொண்டு செல்லும். இதுவே மனித உள்ளத்தில் தெளிவையும் உடலில் இன்பத்தையும் தரும். எனவே எமது வாழ்வு எம் எண்ணங்களில்தான் உள்ளது.

*- நன்றி. -*

**பூ. பரமதயாளன்,**
*ஆசிரியர்,*
*வீரமுனை.*

# ஐந்து வருட வளர்ச்சியில் அன்னமிட்டு ஆனந்தமூட்டிய பெருந்தகைகள்

## தை

| | |
|---|---|
| S. தர்மராஜா | கோயில் வீதி, வீரமுனை(2004 மட்டும்) |
| K. சுதா | நெசவடி வீதி, வீரமுனை ~ 03. |
| K. பொன்னம்பலம் | 84/01, வாடி வீட்டு வீதி, கல்முனை. |
| K. அழகரெத்தினம் | துறை நீலாவணை. |
| M. தங்கராஜா | கோயில் வீதி, வீரமுனை(2004,2007 மட்டும்) |
| K. அழகம்மா | கோயில் வீதி, வீரமுனை (2004,2005 மட்டும்) |
| S. ஜெகநாதன் | சேனைக்குடியிருப்பு. (இலண்டன்) |
| S. மகேஸ்வரன் | கோயில் வீதி, வீரமுனை ~ 03 |
| A. கலையரசன் | பெரியகல்லாறு. (2004 மட்டும்) |
| K. பத்திரண | பஞ்சாலை வீதி, கல்முனை. (2004 மட்டும்) |
| A. உதயகுமார் | பழைய சங்கத்து வீதி, வீரமுனை ~ 02. |
| N. புள்ளநாயகம் | பிரதான வீதி, துறைநீலாவணை. |
| கோகிலா ஜெயராஜ் | சரஸ்வதி வித்தியாலம், பெரியகல்லாறு |
| S. சின்னத்துரை | 30 வீட்டுத்திட்டம், வீரமுனை(2004 மட்டும்) |
| V. தர்மேஸ்வரி | விவேகானந்தா வீதி, காரைதீவு. |
| A. விஜிந்திரன் | 7/53, நாவிதன்வெளி |
| K. யோகராசா | காரைக்குடா, அன்னமலை, கல்முனை.(2005மட்டும்) |
| M. நல்லசாமி | 11/80, மத்தியமுகாம். |
| K. தேவராஜா | விகாரை கிழக்கு வீதி,அக்கரைப்பற்று ~09.(2006மட்டும்) |
| V. கார்த்திகேசு | 11/154, மத்தியமுகாம். |
| S. சந்திராணி | செல்லையா வீதி, பாண்டிருப்பு ~ 02. |
| S ரவிச்சந்திரன் | சேனைக்குடியிருப்பு (2006 மட்டும்) |
| S. ஜெகநாதன் | இலண்டன். |
| K. சிவலிங்கம் | 15/ 153, நாவிதன்வெளி (2006,2007மட்டும்) |
| P. நவரெட்ணராஜா | துறைநீலாவணை ~ 08. (2006,2008...) |
| M. திருநாவுக்கரசு | தெகிவளை. (2006மட்டும்) |
| K. இராசமணி | சேனைக்குடியிருப்பு(இலண்டன்) (2007மட்டும்) |
| K. விநாயகமூர்த்தி | திருவள்ளுவர் வீதி,பாண்டிருப்பு ~01.(2007,2008...) |
| R. இரத்தினகுமார் | முருகன் கோயில் வீதி காரைதீவு ~10(2007 மட்டும்) |
| K. கவிவர்ணன் | சேனைக்குடியிருப்பு (இலண்டன்) |
| K. காராளசிங்கம் | சின்னத்தம்பி வீதி, கல்முனை. |
| R. விஜயந்தன் | பழைய சங்கத்து வீதி வீரமுனை~02(2007,2008...) |
| S. நளாயினி | நோர்வே |
| M. மோகனகுமார் | நந்தவனப்பிள்ளையார் கோயில்வீதி, காரைதீவு.(2007மட்டும் |
| S. அன்பழகன் | 15 /ICR -11, அன்னமலை ~ 02. (2007,2008...) |
| M. முரளீதரன் | 11, காளிகோயில் வீதி பாண்டிருப்பு ~ 02(சுனாமியால் உயிரிழந்தோர் உறவினர் சங்கம்) (2008...) |
| P. கோவிந்தசாமி | 21A,பிள்ளையார் கோயில் வீதி,சேனைக்குடியிருப்பு.(2007,2008..) |
| E. தமிழ்வாணன் | கிட்டங்கி வீதி, சேனைக்குடியிருப்பு. (2007,2008...) |
| K. மகேஸ்வரி | மில்லடி வீதி, வீரமுனை. (2008...) |
| K. ரவிச்சந்திரன் | பிரதான வீதி, பாண்டிருப்பு. (2008...) |

# மாசி

| | |
|---|---|
| T. விநாயகமூர்த்தி | சின்னக் கோயில் வீதி, வீரமுனை ~ 03. |
| P. சிவராஜா | சங்கத்து வீதி, வீரமுனை ~ 02. |
| S. சந்திரசேகரம் | ஆண்டி சந்தி, வீரமுனை.(2003,2004,2005 மட்டும்) |
| P. சுப்பிரமணியம் | சின்னக் கோயில் வீதி, வீரமுனை ~ 03.(2003,2005மட்டும்) |
| S. தவமணி | மில்லடி வீதி, வீரமுனை. |
| S. முருகேசு | நெசவடி வீதி, வீரமுனை~03.(2003, 2004,2005,2006மட்டும்) |
| K. கந்தசாமி | ஆண்டி சந்தி, வீரமுனை. (2004 மட்டும்) |
| K. யோகநாதன் | மில்லடி வீதி, வீரமுனை ~ 02. |
| R. தர்மாவதி | 32, யாட் றோட், கல்முனை. |
| K. லோகிதராஜா | 352 பிரதான வீதி, கல்முனை. |
| M. விநாயகமூர்த்தி | 195/1 வார் வீதி, மட்டக்களப்பு . |
| K. காந்திமலர் | 15, நாவிதன் வெளி ~ 02, கல்முனை. |
| I. செல்வராஜா | புதுநகரம், மல்வத்தை |
| R. பரமேஸ்வரி | 15/21 கொலனி, நாவிதன்வெளி ~ 02, கல்முனை. |
| T. நிறோஜினி | 30 வீட்டுத்திட்டம், வீரமுனை ~ 04. |
| M. குமார் | பாண்டிருப்பு~02, கல்முனை. |
| R. கணேசபிள்ளை | 15/11கிராமம், வேப்பையடி, நாவிதன்வெளி. |
| R. சகாதேவன் | சின்னக்கோயில் வீதி, வீரமுனை ~ 03. |
| நிரோசன் | இலண்டன் |
| S. ஜெகநாதன் | இலண்டன். |
| S. தங்கநேசம் | கோயில் வீதி, வீரமுனை ~ 01. |
| T. ரமேஸ்குமார் | 30 வீட்டுத்திட்டம், வீரமுனை ~ 03. |
| M. உருத்திரமூர்த்தி | 78/4, றோசியல் லயன், மட்டக்களப்பு. (2008...) |
| S. சோதிஸ்வரி | 11/12, மத்தியமுகாம். |
| A.J. ரவி | சரீரம், அம்மன்கோயில் வீதி, கல்முனை. (2005மட்டும்) |
| T. சுதாகரன் | 33B, சிவன்கோயில் வீதி, நற்பிட்டிமுனை. (2005மட்டும்) |
| R சிறிவேல்ராஜா | V.V றோட், கல்முனை. |
| K. நந்தகுமார் | V.V றோட், கல்முனை. |
| S. இளந்திரையன் | 1ம் பிரிவு, மண்டூர். (2007,2008...) |
| K. மகேஸ்வரி | மில்லடி வீதி, வீரமுனை ~02. (2007மட்டும்) |
| V. சுப்பிரமணியம் | வைத்தியசாலை வீதி, கல்முனை ~ 01. (2007...) |
| S. சுரேஸ் | மகாவித்தியாலய வீதி, பாண்டிருப்பு. (2008...) |

# பங்குனி

| | |
|---|---|
| M. குன்றக்குமரன் | சின்னக் கோயில் வீதி,வீரமுனை~03.(2003,2005,2006மட்டும்) |
| N. கைலாயபிள்ளை | சங்கத்து வீதி, வீரமுனை ~02. (2003,2004,2005மட்டும்) |
| P. கிருஸ்ணமூர்த்தி | சின்னக் கோயில் வீதி, வீரமுனை ~ 03 |
| S. பிரசாத் | அம்பாரை வீதி, மல்வத்தை. |
| S. கனகராஜன் | மல்வத்தை. (2003,2004 மட்டும்) |
| விருள்பெரேரா | பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சம்மாந்துறை. (2003,2004,2005மட்டும் ) |
| குமுதினி துரைரெட்ணம் | நெசவடி வீதி, பாண்டிருப்பு ~02, கல்முனை. |
| S. கணேஸ்வரன் | ஆண்டியர் சந்தி, வீரமுனை. |
| N. சிவராமன் | சர்வோதய வீதி, வீரமுனை ~01.(2003, 2004,2005 மட்டும்) |
| S. துரைசிங்கம் | அம்பாரை வீதி, வளத்தாப்பிட்டி. |
| A. கணேசமூர்த்தி | வீரமுனை. |
| M. செல்வலிங்கராஜா | வைத்திய சாலை வீதி, கல்முனை. (2003,2005மட்டும்) |
| S. செல்வசிகாமணி | 11/49 மத்தியமுகாம் ~ 06. |
| R. பிரசாந் | கல்முனை. (2003மட்டும்) |
| A. இராசையா | வக்கடி ஒழுங்கை, வீரமுனை.(2003 மட்டும்) |
| S. இந்திராணி | ஆண்டி சந்தி, வீரமுனை. (2003,2004,2005 மட்டும்) |
| S. பத்மாவதி | ஆண்டி சந்தி, வீரமுனை. (2003, 2004மட்டும்) |
| S. செல்வக்குமர் | 15/5, நாவிதன்வெளி ~ 02. (2004மட்டும்) |
| S கணபதிப்பிள்ளை | நாவிதன்வெளி. (2004,2005மட்டும்) |
| S. ஆசைத்தம்பி | துறைநீலாவணை. (2004மட்டும்) |
| P. இளங்கோபன் | துறைநீலாவணை ~ 08. (2004மட்டும்) |
| S.சாமித்தம்பி | 15/48, நாவிதன்வெளி, கல்முனை. |
| S. கார்த்திகேசு | 75A, நாவிதன்வெளி ~01. (2004மட்டும்) |
| K.விஜயராஜா | நாவிதன்வெளி ~ 02, கல்முனை. |
| S. மயில்வாகனம் | காரைக்குடா ~ 17, (2004, 2005 மட்டும்) |
| M. கேந்திரமூர்த்தி | 'கலையகம்' பழைய தபால் வீதி, காரைதீவு. |
| T. ரவீந்திரலிங்கம் | வேப்பையடி, நாவிதன்வெளி. |
| M. தேவரெட்ணம் | துறைநீலாவணை ~ 07. |
| B. கமல்ராஜ் | சக்தி பாம் ஹவுஸ், மத்தியமுகாம். (2005மட்டும்) |
| V. ஜெகதீசன் | நாவிதன்வெளி ~ 02 (2005மட்டும்) |
| S. சுமதி | 7/35, நாவிதன்வெளி, கல்முனை. |
| S. சுகிர்தராஜன் | மில்லடி வீதி, வீரமுனை~02. (2006மட்டும்) |
| S.சியாமளா | அழகப்பர் வீதி, பாண்டிருப்பு ~02, கல்முனை. (2006,2007...) |
| S. தவேந்திரன் | கோயில் வீதி, துறைநீலவணை ~ 08. (2006,2007...) |
| கணேசமூர்ததி அனுஜா | அம்மன் கோயில் வீதி, கல்முனை. (2006,2007...) |
| K.லோகநாதன் | சாகாம வீதி, அக்கரைப்பற்று .(2006மட்டும்) |
| கறுவல்தம்பி வைரமுத்து | 5ம் வட்டாரம், துறைநீலாவணை.(2006மட்டும்) |
| பரஞ்சோதி | இலண்டன்,(2007...) |
| E. அமுதன் | அரசயடி மாரியம்மன் கோயில் வீதி, பாண்டிருப்பு~02.(2007...) |
| M. அமிர்தசங்கர் | கோயில் வீதி ,வீரமுனை ~ 01. |
| C. நந்தகுமார் | தபால் வீதி காரைதீவு.(2007...) |
| K. சிறிவேல்ராஜா | V.V. வீதி, கல்முனை. (2007...) |
| V.கோபி | இலண்டன். (2007...) |
| K. தேவராஜா | 7/31, நாவிதன்வெளி, கல்முனை. (2006,2007...) |

# சித்திரை

| | |
|---|---|
| P. நடராஜன் | அரசயடி வீதி, வீரமுனை ~ 01. |
